Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

உங்களுக்குத் தேவையான எல்லாவித
சாய்ப்புச் சாமான்களுக்கும்,
சூட்கேஸ், சப்பாத்து வகைகளுக்கும்

கணேசன் ஸ்ரோர்ஸ்
78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, ஆவணி 6- ஆம் நாள். ஸபர் 16 (22-8-59) சனிக்கிழமை இதழ் 29.

# தொழிற் சங்கங்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டிய சமயம் வந்து விட்டது

## எட்டியாந்தோட்டை இ. ஜ. கா. மகாநாட்டில் தலைவர் அஸீஸ் வற்புறுத்துகிறார்

## எம். ஈ. பியின் நோக்கம் தோற்றதேன்?

### மலைநாட்டுத் தொழிலாளருக்கு குடியேற்றத் திட்டம் அவசியம்

— நமது சிறப்பு நிருபர் —

"தோட்டப் பகுதிகளில் தொழிற் சங்கங்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டிய சமயம் வந்துவிட்டது. கருத்து வேற்றுமை இருப்பது சகஜம். ஒரே ஸ்தாபனமாக எல்லாரும் ஐக்கியப்பட முடியாவிடினும், ஒரு பெடரேஷன் அல்லது சமஷ்டி போன்ற அமைப்பை முக்கிய தொழிலாளர் சங்கங்கள் சேர்ந்து அமைத்துக் கொள்ள வேண்டிய தவசியமாகும்."

இவ்வாறு, எட்டியாந்தோட்டையில் இன்று நடைபெறும்இ. ஜ. கா. மகாநாட்டில், தலைமை வகித்துப் பேசுகையில் ஜனுப் அஸீஸ் வற்புறுத்தினுர். மலைநாட்டு இந்திய தொழிலாளருக்கு குடியேற்றத் திட்டம் வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.


அவர் தமது பிரசங்கத்தில்மேலும் குறிப்பிட்டதாவது:—

எம். ஈ. பி. அரசாங்கத்தின் லட்சியம் தோல்வி அடைந்தது.காரணம் சமதர்ம நோக்கத்தை வகுப்புவாத அடிப்படையில் பெற அவர்கள் முற்பட்டதே. வகுப்புவாதத்துக்கும், சமதர்மத்துக்கும் நேர் முரண்பாடாகும்.

இலங்கையில் இடதுசாரி முற்போக்கு கட்சிகளுக்குள்ளும் ஒற்றுமையில்லை. மொழி போன்ற விஷயங்களிலும் கருத்து வேற்றுமை நிலவுகின்றது. இவ்விஷயங்களில், அவர்கள் கலந்து பேசி, பொதுவான கருத்தை உருவாக்காவிடில், அவர்கள் நோக்கம் கைகூடவோ, முன்னேறவோ முடியாது.

பிரஜாஉரிமை பிரச்சினையில் சென்ற வருஷத்தில் எவ்வித முன்னேற்றமுமில்லை. பிரதமர் பார்லிமெண்டில் பேசுகையில்,

(9ஆம் பக்கம் பார்க்க)



நல்லூர்க் கந்தசுவாமி கோவில் பத்தாம் திருவிழா சென்ற செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஜெகஜோதியாக விளங்கிய மஞ்சத்தில் முருகப்பெருமான் பவனிவந்த காட்சி கண்கொளாக் காட்சியாகும்

## "எல்லாம் யோசிக்கிறேன் சற்றே பொறுங்கள்"

### சமஷ்டித்தூதுகோஷ்டிக்குப் பிரதமர் அளித்தபதில்

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில், சமஷ்டிக்கட்சி தூதுகோஷ்டியினர் பிரதமர் பண்டாரநாயக்காவை சென்ற வியாழனன்று நேரில் சந்தித்து சுமார் ஒன்றரை மணிநேரம் பேசினர். "ஸ்ரீ" விஷயம், நியாயமான தமிழ் உபயோகம், தொழில்நுட்பக் கல்லூரி, கச்சேரியில் சிங்களம் முதலிய பல விஷயங்களைப்பற்றியும் எடுத்துக்கூறினர்.

பிரதமர் இதையெல்லாம் கேட்டுக்கொண்டே இருந்தார். "சரி, சரி, புரிகிறது, புரிகிறது" என்று கூறி முடிவில் "இதைப்பற்றியெல்லாம் யோசிக்கிறேன். கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்" என்று கூறி, மீண்டும் தாமே சீக்கிரத்தில் இக் கோஷ்டியினரை அழைத்துப் பேசுவதாகவும் கூறியதாகத் தெரிகிறது. இது பூர்வாங்கப் பேச்சேயென்றும் மீண்டும் இருசார்பினரும் சீக்கிரம் சந்திப்பரென்றும் தெரிகிறது.

பிரதமரின் பேச்சில் ஏதாவது நம்பிக்கை அறிகுறியுள்ளதா? என்று கேட்டதற்கு ஒரு சமஷ்டித் தலைவர், ஒன்றும் திட்டமாகச் சொல்லுவதற்கில்லை என்றும், பொறுத்துப் பார்க்கலாமென்றும் தெரிவித்தார்.

## சாத்வீகப் போராட்டம் நடந்தே தீரும்

### சிங்களம் மட்டும் சட்டத்தின் ஆதிக்கம்

### தமிழரசுக் கட்சியின் முன்னறிவித்தல்

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் 150 ஆண்டுகளாகத் தமிழரும் சிங்களவரும் ஒன்று சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள். ஆனல் சுதந்திரமடைந்த இலங்கையின் பத்து வருட இடைக்காலத்தில், சிங்களவருடன் தமிழரும் கூடி வாழ்வது இனிமேலும் சாத்தியமாகுமா? இக்கேள்வி இன்று எழுந்திருக்கின்றது. சந்தர்ப்பவசத்தாலும் இன்றைய அரசியல் சூழ்நிலையாலும் தமிழினத்துக்கு ஏற்படும் இன்னல்களை நாம் எதிர்த்துப் போராடாமலிருக்க முடியாது. இதற்கான சாத்வீகப் போராட்டத்தை நாம் கலவரமின்றி நடாத்தியே ஆக வேண்டும். தமிழினத்தை எதிர்நோக்கியுள்ள ஆபத்துக்களைப் பற்றி நாம் எச்சரிக்கையுடன் இருப்பது உசிதமானது. இக்

(9ஆம் பக்கம் பார்க்க)

## ஜ. தொ. காங்கிரஸ் வரலாற்றில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி

## எட்டியாந்தோட்டை மகாநாடு

— நமது நிருபர் —

ஜனநாயக தொழிலாளர் காங்கிரசின் மூன்ருவது மாநாடும், இலங்கை ஜனநாயக காங்கிரசின் பத்தொன்பதாவது மாநாடும் இந்த ஆகஸ்டு திங்கள் 22- 23 ஆம் திகதிகளில் களனி வேலி மாவட்டத்தின் எழில் நகராம் எட்டியாந்தோட்டையில் நடைபெறுகிறது.

காங்கிரசின் வரலாற்றில் இது ஒரு திருப்பம் என்று கூறலாம். இலங்கை இந்திய காங்கிரசாக ஆரம்பிக்கப்பட்டு இலங்கை ஜனநாயக காங்கிரசாக வளர்ந்தோங்கியும், இடையே ஜனநாயக தொழிலாளர் காங்கிரசாக உயர்ந்தும் வந்திருக்கின்ற இந்த இயக்கம் சமீபத்தில் சில சங்கடங்களையும், தடங்கல்களையும் தாண்டி, தனது பிரயாணத்தைப் புதிய உற்சாகத்துடன் ஆரம்பிக்கும் நேரத்தில்தான் எட்டியாந்தோட்டையில் மாநாடு கூடுகின்றது.

### களனிக்கரையில்

களனிப் பள்ளத்தாக்கில், கல்யாணி கரையோரத்தில் காட்சி தரும் அழகு நகர்தான் எட்டியாந்தோட்டை. அதன் வடக்கில் வீ ஓயா என்னும் சிற்ருறும், மேற்கில் களனி கங்கையும், கிழக்கு, தெற்கில் தேயிலை, ரப்பர், தோட்டங்களைக் கொண்ட சிறு மலைத் தொடர்களும் சூழ்ந்து வளர்ந்து சிறப்புக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய எழில் பூமியில் நடைபெறும் மாநாட்டிற்கு, திரு. ஏ. அஸீஸ் தலைமை தாங்குகின்ருர். மாநாட்டின் வரவேற்புக் குழுத்தலைவராக, களனிவேலி கேகாலை மாவட்ட தொழிலாளர் தலைவரும் முன்னுள் ஜ. தொ. கா. பொதுக்காரியதரிசியும் நீண்ட நாள் தொழிலாள மக்களிடையே தொண்டாற்றி தொழிலாளர்களின் மதிப்பையும், அன்பையும் பெற்றவருமான திரு. கே. ஜி. எஸ். நாயர் தேர்ந்தெடுக்கப்பட்டு உழைத்து வருகின்ருர்.

மாநாடு நடைபெறும் இடத்திற்கு, நீண்டநாள் காங்கிரஸ்

(2 ஆம் பக்கம் பார்க்க)

பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள் BRIDGESTONE TYRES

Dirtributors : TUCKERS AUTODROME

ஏக விநியோகஸ்தர்கள் :

ஓட்டோஸ் லிமிடெட்
யாழ்ப்பாணம்

போன் : 496 தந்தி : "ஓட்டோஸ்"

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

அதிக நுரை தந்து உடைகளை விரைவில் வெண்மையாக்குவது **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது - **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானால் **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

JAFFNA SCHOOL OF MOTORING AND MOTOR SALES

**யாழ்ப்பாணம் மோட்டரிங் & சேல்ஸ்**

**மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

### முக்கிய அறிவித்தல்

உங்கள் வீட்டிற்குத் தேவையான பல சரக்கு சாய்ப்புச் சாமான்களுக்கு எம்மிடம் கலந்தாலோசியுங்கள். எவ்வித முற்பணமும் இன்றி, உங்களுக்குச் சிரமமுமின்றி வீட்டிற்கே பொருட்களைக் கொண்டு வந்து தருகிறோம். விபரங்கட்கு, எம். ஏ. டோசாஜீ அன் கோ, 136, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம் (போன் 459).

### அறிவித்தல்

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளி சிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினாலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் **யோகீஸ்வர ரசம்** என்ற பெயருடைய தமிழ்மருந்தினால் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ- செல்லையா**
**ஆயுள்வேத வைத்தியர்**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்**

### அறிவித்தல்

தற்பொழுது எல்லோரையும் ஆதரிப்பதற்காக மாதாந்தம் ரூபா 5-, 10-, 15-, 20- முதலிய கட்டணங்களை ஏற்றுக் கொள்கிறோம். ஊழியர்கள் விண்ணப்பிக்கவும்.

**ஸ்ரீ லங்கா**
**கஷ்டநிவாரண சங்கம்**
ஆபரண மாளிகை பில்டிங்
76/3,78/1, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.


### யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு நவீன சத்திரவைத்தியக் கருவிகள்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியின் கண்வைத்தியப்பகுதியிலிருந்து ஒரு நல்ல செய்தி கிடைத்துள்ளது.

சென்றவாரம் இப்பகுதிக்கு நவீன வைத்தியக்கருவிகள் பல தருவிக்கப்பட்டிருப்பதுடன் முன்னர் நடைபெற்று வந்ததுபோலவே சத்திரவைத்தியங்களும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. கண் ஒளி இழந்தவர்களுக்கு நம்பிக்கை துளிர்த்திருப்பதுடன் உடனடியான விசேஷ கவனம் செலுத்தப்படுகின்றது.

சிலகாலமாகச் சத்திர வைத்தியத்துக்கான கருவிகள் இல்லாதகாரணத்தால் கண் சம்பந்தப்பட்ட சத்திரவைத்தியங்கள் பின்போடப்பட்டுவந்தன. இதனால் கண் நோயாளர் பலர் கஷ்டத்துக் குள்ளாயினர்.

கண் வைத்தியத்துறையில் அனுபவம் வாய்ந்த ஒரு நிபுணர் இங்கு இல்லாதிருப்பது பற்றி யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் எடுத்துக் காட்டப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விகாரி ஞு ஆவணி மீ 7-ம் நாள் (23-8-59) ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணியளவில் வரும் சுப முகூர்த்தத்தில்,

திருவளர் செல்வன்

**இரா. சிவதாஸ்**

(காலஞ்சென்ற திரு. வீரகத்திப்பிள்ளை இராசரத்தினம் அவர்களின் மகனுக்கும்)

திருவளர் செல்வி

**வசந்தா தேவி**

(வழக்கறிஞர் திரு. எஸ். பொன்னுத்துரை அவர்களின் மகளுக்கும்)

தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோவிலில், திருமணஞ் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் சுற்றத்தாரும் சமுகமளித்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்
**இரா. சுந்தரமூர்த்தி**
(சுந்தரமூர்த்தி அன் சன்ஸ்)
**இரா. சிவகுமாரன்**

தொண்டமனாறு,
18-8-59.

# கொட்டடி சனசமூக நிலையத்தின் பத்தாவது ஆண்டு விழா

சனசமூக நிலையங்கள் நாட்டுக்கு நற்பணி ஆற்ற வேண்டும். கொட்டடி சனசமூக நிலையம் இத்துறையிற் சென்ற பத்து ஆண்டுகளாக உழைத்து வருவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இவ்வாறு யாழ்ப்பாணம் மேயர் திரு. தங்கராசா துரையப்பா சென்ற சனிக்கிழமை நடைபெற்ற கொட்டடி சன சமூக நிலையத்தின் பத்தாவது ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார். மேயர் துரையப்பா தொடர்ந்து பேசியதாவது:

"இளைஞர்கள் நன்ருகக் கல்வி பயிலவேண்டும். கல்வியறிவென்ருல் புத்தக அறிவு மட்டுமன்று. பொதுவறிவையும் அவர்கள் பெருக்க முயலவேண்டும். அதற்கு இது போன்ற வாசிகசாலைகள் பேருதவி புரிகின்றன".

உதவி மேயர் திரு. எஸ். ராஜரத்தினம் பேசியதாவது:

கொட்டடி மக்கள் குடிதண்ணீர் வசதியில்லாமற் கஷ்டப்பட்டனர். இப்பொழுது மாநகர சபை விநியோகம் செய்யும் தண்ணீர் மக்களுக்குத் தினமும் கிடைப்பதில்லை. இக்கஷ்டத்தை உணர்ந்து இன்னும் இரண்டு லொறிகள் மூலம் தண்ணீர் விநியோகத்தைத் தினமும் செய்ய வேண்டுமென்று நான் மாநகர சபையிடம் தெரிவித்துள்ளேன். வெகு சீக்கிரத்தில் இது நிறைவேறுமென்று நினைக்கிறேன்.

விழாவிற்கு வந்தவர்களை வரவேற்றுப் பேசிய சங்கத் தலைவர் திரு. சி. இரத்தினசபாபதி இளைஞர்களின் இன்றைய நிலைமைபற்றி இனிமையாகப் பேசினுர். திரு. எம். எம். சுல்தான் எம்.எம்.ஸி. திரு. க. கணேசலிங்கம் ஆகியோரும் பேசினுர்கள்.

—ந. நி.

# இந்துமாணவர் சமாஜத்தின் ஆதரவில் சச்சிதானந்த யோகீஸ்வரர் விரிவுரைகள்

இலங்கை திவ்விய ஜீவன சங்கத் தலைவர் வண—யோகிராஜ் சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர் 21-8-59 முதல் 31-8-59 முடிய யாழ்ப்பாணத்தில் தங்குவார். அந்நாட்களில் சமாஜ ஆதரவில் யோகிராஜ் அவர்கள் சொற்பொழிவுகள், அந்தர் யோகம், யோகாசனப் பயிற்சி வகுப்புகள் நடாத்துவார்.

**சொற்பொழிவுகள்**

பி. ப. 4 மணி தொடக்கம் 6 மணி வரை.

21-8-59 யாழ்ப்பாணம் — இந்து சன்மார்க்க சங்கம்.

22-8-59 வேலணை—அரசினர் மத்திய கல்லூரி.

23-8-59 சுழிபுரம் — விக்ரோறியாக் கல்லூரி.

27-8-59 வல்லுவெட்டித்துறை—சிதம்பர வித்தியாலயம்.

28-8-59 சாவகச்சேரி — இந்துக்கல்லூரி.

29-8-59 கிளிநொச்சி — கந்தசாமி கோவில்.

30-8-59 காரைநகர்—இந்துக் கல்லூரி.

31-8-59 கோண்டாவில் — சைவப்பாடசாலை.

**அந்தர் யோகம்**

யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் 24-8-59 — 26-8-59 வரை தினமும் காலை 8 மணிக்கு அந்தர் யோகம் நடைபெறும்.

**யோகாசனப்பயிற்சி**

21-8-59 — 31-8-59 வரை வண்ணை நாவலர் மண்டபத்தில் காலை 7 மணி — 8 மணி வரை நடைபெறும்.

# ஜனநாயகம் என்ற போர்வையில் இலங்கையில் சர்வாதிகார ஆட்சியா?

## தமிழரசுக்கட்சித் தந்தையின் கண்டனம்

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்.

தமிழ்மொழி சிங்களத்தைப் போல சம அந்தஸ்தைப்பெற வேண்டும். இந் நிலையிலிருந்து நாங்கள் எள்ளளவேனும் இறங்கவில்லை. அரசினர் நியாயமான அளவிற்கு தமிழ் உபயோகிக்க அனுமதி அளிக்கப்படுமென உறுதி கூறியும் அந்த உறுதிகளையெல்லாம் காற்றிலே பறக்கவிட்டுவிட்டனர். இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் கூட்டத்திற் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. செல்வநாயகம் தொடர்ந்து பேசியதாவது: இலங்கை அரசாங்கம் உலகிற்கு ஒரு போலிக் காட்சியைக் காட்டி வருகின்றது. சனநாயகமென்றபோர்வையில் ஏகாதிபத்திய அரசியலை நிலைநாட்டுவதற்காக அடக்குமுறைகளைக் கையாள ஆரம்பித்துவிட்டனர்.

துறைநீலாவணையில் பட்டிருப்பு எம். பிக்கு எதிராக நடந்த இயக்கத்தில் சேர்ந்த ஆண்கள் பெண்களெல்லோரையும்பொலிசார் இம்சித்தனர். ஆனல் தமிழ்மக்களைப் பொறுத்தவரை நாம் சுதந்திரமாக வாழ எத்தனையோ தியாகங்கள் செய்யவேண்டி நேரிடும். இழந்துபோன எங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு நாம் உடனடியாகவே போராட்டத்தில் இறங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. பொறுத்திருந்தகாலம் போய் இனி பொங்கியெழ வேண்டியகட்டம் வந்துள்ளது. எங்கள் உரிமைகளைப்படிப்படியாக அரசாங்கம் அபகரித்து வருகின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களிற்கூட சிங்களம்மட்டும் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது. அரசாங்கத்தின் கண்மூடித்தனமான இச்செயல் எம்மைச் சிங்களவருக்கு அடிமைகளாக்கிவருகின்றது. இந்த அடிமை வாழ்வை நாம் எவ்விதத்திலும் எதிர்த்தே தீர வேண்டும்.

திருக்கோணமலைப் பிரதிநிதி திரு. என். ஆர். இராஜவரோதயத்தின் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. கு. வன்னியசிங்கம், திரு. வி. ஏ. அழகக்கோன், திருக்கோயில் திரு. அரியநாயகம், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வி. ஏ. கந்தையா ஆகியோர் தமிழினத்தின் எதிர்காலம் பற்றியும் கட்சி செய்யவேண்டியிருக்கும் பணிகளைப்பற்றியும் விரிவாக எடுத்துரைத்தனர்.

# பரிந்து பேசும் அரசியற் கட்சிகள் தமிழ் இனத்தை மெதுவாக அழித்துவிடும்

யாழ்ப்பாணம்.

தமிழ் பேசும் மக்களுக்காகப் பரிந்து பேசும் அரசியல் கட்சிகளால் ஏற்படும் ஆபத்துக்களைப் பற்றிக் கவனமாக இருக்க வேண்டும். மக்கள் உணராத வகையிலே, வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல, மெதுவாகத் துரோகச் செயல்கள் நடைபெறுமாயின், இறுதியில் ஒன்றுமே செய்து கொள்ள முடியாது.

தமிழரசுக் கட்சியின் நல்லூர்த் தொகுதிக் கிளை சமீபத்தில் திருநெல்வேலியில் அங்குரார்ப் பணஞ் செய்யப்பட்டது. அத்தருணம் தலைமை வகித்துப் பேசிய கோப்பாய்த் தொகுதிப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம் மேற்கண்டவாறு கூறினுர். மேலும் அவர் கூறியதாவது:-

சிங்களம் மட்டும் சட்டத்தைப் பாராளுமன்றத்துள்ளே எதிர்த்துவிட்டு, பின் அச்சட்டம் நடைமுறைக்கு வருவதை எதிர்க்காத கட்சிகளால் நமக்குப் பயன் கிடையாது. தாம் கூறுவது போலத் தமிழுக்கும் சம அந்தஸ்து என்று கொடுத்திருந்தால், இன்னும் சில வருடங்களுள் தமிழர் சிங்களம் கற்றிருப்பார்கள் என்றும், சிங்களம் மட்டும் சட்டம் தானுகவே நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கலாம், என்றும் டாக்டர் என். எம். பெரேரா சிங்கள நாடுகளில் கூறுகிறுர்! இலங்கையில் உள்ள மக்கள் எல்லாம் ஒரே இனமாக, ஒரே மொழியைப் பேசி வாழும் காலம் விரைவில் வரவேண்டுமென்றும், தமிழர் சிங்களவர் என்ற பிரிவுகள் அழிய வேண்டுமென்றும் கூறுகிறுர் டாக்டர் கொல்வின். இவர்கள் கூறும் வழிகளும், காட்டும் இரக்கமும் தமிழ் பேசும் மக்களை நோகாமல் அழித்துவிடும் என்பதில் சந்தேகமில்லை! இத்தகைய எதிரிகளையிட்டுத் தமிழ் பேசும் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

திரு. எஸ். சி. மகாதேவா கிளையின் தலைவராகவும், வித்துவான் வ. கந்தையா பொதுச் செயலாளர் ஆகவும் தெரிவு செய்யப்பட்டனர். மற்றைய உத்தியோகத்தரும் தெரிவு செய்யப்பட்டனர்.

—ந.நி

## எட்டியாந்தோட்டை மாநாடு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்கவாதியும், சமாதான விரும்பியும், நேர்மையாளருமாக இருந்த தொழிலாளர்களுக்குத் தொண்டு பல புரிந்த அட்டன் ஜில்லா உபதலைவர் காலஞ்சென்ற அங்கப்ப (முதலியார்) அவர்களின் பெயரே சூட்டப்பட்டிருக்கின்றது. மாநாட்டின் வாசல்களுக்கும் வளைவுகளுக்கும் தொழிலாளர்களுக்காகத் தியாகம் செய்த பல ஊழியர்களின் பெயர்களிடப்பட்டிருக்கின்றன.

தொண்டர்கள் நீலநிற அரைக்கால்சட்டை வெள்ளைநிற மேல்சட்டை இவைகளணிந்து கழுத்தில் சிவப்புநிறக் கைத்துண்டு கட்டி தொண்டாற்றுகின்றனர். பெண்கள் சிவப்பு நிறரவிக்கையும், வெள்ளைநிறச் சேலையும் கட்டி தங்களின் மாநாட்டைச் சிறப்படையச் செய்யத் திரளுகின்றனர்.

**நெருக்கடியான காலம்**

ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக, காங்கிரஸ் மாநாடுகள் இலங்கையெங்கிலுமுள்ள முக்கிய நகர்களிலெல்லாம் (மலைநாட்டுப்பகுதிகளில்) நடைபெற்றிருக்கின்றன. ஆனல் இந்த ஆண்டில்தான் களனிவேலிப் பகுதி எட்டியாந்தோட்டையில் மாநாடு நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் அரசியல் நிலையிலும் தொழிலாளர்நிலையிலும் பெரும் நெருக்கடியான இந்த நேரத்தில் கூடுகின்ற இந்த மாநாட்டில், இந்தியபரம்பரையினரின் குடியுரிமை வாக்குரிமை பற்றியும், தமிழ்மக்களின் மொழியுரிமை வாழுமுரிமை பற்றியும் தொழிலாளர்களின் முக்கிய பலஉரிமைகள் பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**அடிமை வாழ்வில் அழுந்தி அல்லற்பட்ட இந்தியா சுதந்திரமடைந்து இன்று 12 ஆண்டுகள் ஆகின்றன. பன்னிரண்டு வருட காலத்தில் அரசியல் சுதந்திரத்தோடு பொருளாதாரச் சுபிட்சமுமடைய இந்தியா அரும்பாடுபட்டுத் தொண்டாற்றி வருகிறது. இன்றுவரை பொருளாதாரத் துறையில் இந்தியா சாதித்தவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.**

# சுதந்திர இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி

கு. நாராயணசாமி பி. ஏ.

நாற்பது கோடிக்கு மேற்பட்ட மக்கள் வாழும் இந்தியா பண்டுதொட்டு ஓர் விவசாய நாடாகவே இருந்துவந்தது. விவசாய விருத்திக்கு முக்கிய இடம் கொடுப்பதுடன், தொழில் அபிவிருத்தியும் ஊக்குவிக்கப்பட வேண்டுமென்பதை உணர்ந்த இந்திய அரசாங்கத்தார் ஐந்து வருடத் திட்டங்கள் வகுத்துச் செயலாற்ற ஆரம்பித்தனர். முதல் ஐந்து வருடத் திட்டம் 1951-ம் ஆண்டு தொடக்கம் செயலாற்றப்படத் தொடங்கியது. இலங்கையில் முன்பு வகுக்கப்பட்ட திட்டங்களைப்போல் இந்திய அரசாங்கத்தார் திட்டங்களை சரியான முறையில் வகுத்த பின் செயலாற்ருமல் விடவில்லை. முதல் ஐந்து வருடத் திட்டம் செயலாற்றப்பட்ட பின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பூர்த்தியாக விருப்பதால் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்க பொருளாதார நிபுணர்கள் ஆரம்ப வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள். ஒவ்வொரு திட்டத்தையும் நடை முறையில் கொண்டு வருவதற்கு முன் திட்டத்தைப் பற்றிய முடிவுகளைப் பிரசாரம் மூலம் மக்கட்கு அறிவித்து அவர்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து, கண்டனங்களை வரவேற்று அதற்குத்தக திட்டத்தை மாற்றி அமைத்து செயலாற்றுகிருர்கள். மக்களின் ஒத்துழைப்பைப்பெறுவதற்கு இதுவன்ரே சிறந்த வழி! சில நிபுணர்கள் வகுத்த திட்டத்தை, அதன் நன்மை தீமைகளை வாதித்தறிய மக்களுக்கு வசதியளிக்காமல், ஏற்றுக்கொள்ளும்படி அவர்களைத் தூண்டுவது எதிர்பார்த்த பலனை அளிக்காது. எனவே, இவ்விஷயத்தில் பத்தாண்டுத் திட்டத்தைத் தீட்டிய இலங்கை அரசாங்கத்தார் இந்திய அனுபவத்திலிருந்தாவது சில முறைகளைக் கற்றுக்கொள்ளாதது வருந்தத்தக்கதே. தமது முடிபுகள் முடிபானவை என்று கருதக்கூடாதென்றும் அவற்றின் குறைபாடுகள் காலப்போக்கில் திருத்தியமைக்க வேண்டி நேர்ந்தால் திருத்தியமைக்கப்படுமென்றும் இலங்கைப் பத்து வருடத் திட்டத்தை வகுத்தோர் தமது திட்ட முகவுரையில் கூறியிருப்பினும், மக்கள் திட்டத்தைப் பற்றி முழுமனதுடன் அறிந்து அவற்றைச் செயலாற்றுவதில் அக்கறை காட்டுவதற்கு இம்முறையிலும் பார்க்க இந்திய அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கை மேலானதென்பதை எவரும் மறுக்கமுடியாது.

### விவசாயத்துக்கு முக்கியத்துவம்

இந்தியாவின் முதலாவது ஐந்து வருடத் திட்டத்தில் (1951–56) விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதன் பயனுல் திட்ட முடிவில், அதாவது 1956-ம் ஆண்டளவில் முன்பிருந்த நிலையிலும் பார்க்க 15 வீதம் மேலதிகமாக விவசாய உற்பத்தி பெருக்கப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்திக்கு முதலாவது திட்டத்தில் முக்கியத்துவம் அதிகம் கொடுக்கப்படவில்லை. திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட பணத் தொகையில் 8 வீதப் பணம்தான் கைத்தொழில் அபிவிருத்திக்கென ஒதுக்கி வைக்கப்பட்டபோதும், கைத்தொழிற் பொருள்களின் உற்பத்தி முதலாம் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 22 வீதம் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய வருவாய் முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 17.5 வீதம் உயர்ந்தது. மக்களின் வருமானம் தலைக்கு 10.5 வீதம் உயர்ந்தது. முதலாம் ஐந்து வருடத்திட்டத்தை முழுமையாக நோக்கும் பொழுது அது எதிர்பார்த்த வெற்றியீட்டிற்று என்றே கூறவேண்டும். எனினும் இந்தியா பொருளாதாரத் துறையில் பிற ஆசியநாடுகளிலும் பார்க்கப் பின்தங்கியே நின்றது. ஜனத்தொகை வளர, வேலையில்லாத் திண்டாட்டமும் குறையவில்லை. இவற்றிற்கு முடிவு காண்பதாயின் மேலும் திட்டங்கள் தீட்டிச் செயலாற்ற வேண்டுமென்பதை உணர்ந்த இந்திய அரசாங்கத்தார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டினர்.

தேசிய வருவாயைப் பெருக்குதலையும், கைத் தொழில் அபிவிருத்தியில் தீவிர அக்கறை காட்டுவதையும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதையும், தேசிய வருவாயை மக்களிடையே சமமாகப் பங்கிட்டு சமதர்ம முறையின் அடிப்படையிலே அமைக்கப்பட்ட ஒரு சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதையும் முக்கிய நோக்கங்களாகக் கொண்டது தான் இரண்டாவது ஐந்து வருடத்திட்டம். 1956-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் செயல் முறைக்குக் கொண்டுவரப்பட்ட இத்திட்டம் 1961-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவுற இருக்கிறது.

### கூட்டுப்பண்ணை

முதலாவது ஐந்து வருடத் திட்டத்தில் கூட்டுப்பண்ணை விவசாயமுறையை மக்கள் விரும்பினுல் (அம்முறையைப்) பின்பற்றலாம் என அறிவிக்கப்பட்டது. ஆனுல் இரண்டாவது ஐந்து வருடத்தில் கூட்டுப்பண்ணை விவசாய முறையை அரசாங்கம் சட்டரீதியாகவே கொண்டுவரத் திட்டமிட்டு, அதைச் செயலாற்றவும் ஆரம்பித்து விட்டது. நாகபுரியில் சென்றவாண்டு நடைபெற்ற இந்தியதேசிய காங்கிரஸ் மகாநாட்டில் கூட்டுப்பண்ணை முறையை நாடு முழுவதும் நடைமுறையில் கொண்டு வருவதற்கு தீவிர முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமென்ற கொள்கை வலியுறுத்தப்பட்டது. அத்துடன் நிலத்தைத் துண்டு படுத்தி விவசாயம் செய்யும் முறைக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற கொள்கையை தேசிய அரசாங்கங்களும் செயல் முறையில் கொண்டு வந்திருக்கின்றன. 15 மாகாண அரசாங்கங்களுக்கு மேல் நிலத்தைத் துண்டுபடுத்தி விவசாயம் செய்வது சட்டவிரோதம் எனச் சட்டங்கள் கொண்டுவந்திருக்கின்றன. கூட்டுப்பண்ணை முறை நடைமுறைக்கு வந்தால் நிலத்தைத் துண்டுபடுத்தி விவசாயம் செய்யும் முறை அருகி விடுமென்பது வெளிப்படை. விவசாயத்தில் யப்பானிய முறையைக் கையாள்வது அதிக பலனைத் தருமென்பதை உணர்ந்து அம்முறையை இந்திய விவசாயிகள் கையாண்டதால் ஒரு ஏக்கருக்கு 13.3 மணங்கு (Maunds) நெல் விளைவித்த இடங்களில் 19.9. மணங்கு நெல் விளைவிக்கப்பட்டது. 1956–57 ஆண்டில் 23.74 இலட்ச ஏக்கரில் யப்பானிய முறைப்படி விவசாயம் செய்யப்பட்டது.

இரண்டாம் ஐந்து வருடத் திட்டத்தில் விவசாய விருத்திக்கு கொடுத்திருக்கும் முக்கியத்துவத்திலும் பார்க்க கைத்தொழில் விருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அரசாங்க முதலீட்டில் 19 வீதம் கைத்தொழிலுக்கு என ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வீதத்தில் ஒருபகுதி குடிசைக் கைத்தொழில் விருத்திக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### கைத்தொழில்

முதலாம் ஐந்து வருடத்திட்டத்தில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தது போல், இரண்டாவது ஐந்து வருடத் திட்டத்தில் கைத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. இதற்கு அடிப்படையான காரணங்கள் பல. நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்கும் தேசிய வருவாயைப் பெருக்குவதற்கும் விவசாய விருத்தியிலும் பார்க்க கைத்தொழில் விருத்தியே கூடிய பலனையளிக்கும். எனினும் நாட்டின் 70 வீத மக்களின் தொழிலாக இருக்கும் விவசாயம் புறக்கணிக்கப் பட்டுள்ளது என்பதல்ல கருத்து. கைத்தொழிலை விருத்தி செய்த பின் விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் ஒரேயளவு முக்கியத்துவம் கொடுக்கப்படும். விவசாய விருத்தி நிலத்தின் விளைச்சலைப் பெருக்குவதுடன், பண்படுத்தப் படாத நிலங்களைப் பண்படுத்தி விவசாயம் செய்வதிலேயும் தங்கியுள்ளது. ஆனுல் நிலம் தரப்பட்டிருப்பதால் அதன் எல்லைக்கு ஓர் அளவுண்டு. எனவே படிப்படியாக விவசாயத்திற்கென உகந்த நிலங்களை யெல்லாம் பண்படுத்தி விவசாயம் செய்த பின், வளர்ந்து கொண்டே வரும் மக்கள் கூட்டத்திற்கு வேலையளிப்பதற்கு கைத்தொழிலின் உதவியைத்தானே நாடவேண்டும். அத்துடன் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி விவசாயத்தில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. இன்றைய உலகில் தொழில் விருத்தியடைந்த நாடுகள் தான் வறுமை நீங்கி, செல்வம் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்கின்றன. எனவே கைத்தொழிலுக்கு இரண்டாம் ஐந்து வருடத் திட்டத்தில் கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சந்தர்ப்ப சூழ் நிலைகளுக்கேற்றவாறு செய்யப்பட்ட ஒரு சிறந்த செயலென்றே கருதவேண்டும். கைத்தொழிலின் முக்கியத்துவத்தை உணர்ந்த அரசாங்கத்தார் 1948-ம் ஆண்டிலேயே கைத்தொழிற் கொள்கையை விப்ரிக்கும் ஓர் அரசாங்க அறிக்கையைப் பிரசுரித்தனர். அது சில மாற்றங்களுடன் இன்றும் செயலாற்றப்பட்டு வருகிறது. இக் கொள்கையின்படி அரசாங்கத்தால் நடாத்தப்படும் தொழிற்சாலைகள், அரசாங்க ஆதரவு பெற்ற தொழிற்சாலைகள்- காலப் போக்கில் இவை அரசாங்கத்தால் படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படுமெனினும் தனிப்பட்டோர் உதவியுடன் ஆரம்பிக்கப்பட வேண்டியன-, என இவ்வாருக விபரிக்கப்பட்டுள்ளன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணக் கச்சேரியில் தட்டெழுத்தடிப்போர் இல்லை!

அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கத்தின் காரிய நிர்வாக சபைக் கூட்டம் ஒன்று சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் புதிய காரியாலயம் (செக்றிரேரியட்) ஒன்று நிறுவுவது என ஏற்கனவே செய்துள்ள தீர்மானத்தை அரசாங்கம் பின்னர் கைவிட்டதுபற்றி, உள்நாட்டு அமைச்சரின் நிரந்தரக் காரிய தரிசியுடன் பேச்சுவார்த்தை நடாத்த, அரசாங்க ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை பேட்டி கோரியுள்ளது.

### அகதிகள்

அரசாங்க ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையைச் சேர்ந்த சில அங்கத்தவர்கள், சென்ற வகுப்புவாதக் கலவரங்களின் பயனுக அகதிகளாகவே இருக்கின்றனரென்றும், அவர்களுக்கு நிலம் அளிக்க வேண்டுமென்றும் அக் கிளை, அரசாங்க அதிபரைக் கோரியுள்ளது. அவர் சங்கத்தின் கோரிக்கையை நிறைவேற்றும்படி நிலக் கொமிஷனரிடம் வற்புறுத்தியுள்ளாராம்.

யாழ்ப்பாணக் கச்சேரிக்குத் தட்டெழுத்தடிப்போர் இல்லாத குறைபற்றி யாழ்ப்பாணக் கிளைச் சங்கம் திறைசேரியிடம் முறையிட்டுள்ளது. இலங்கையிலேயே தட்டெழுத்தடிப்போரில்லாத கச்சேரி யாழ்ப்பாணத்திலே தானுண்டு என்பதையும் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

### விஸ்வலிங்கம் நிதி

களுத்துறையில் வகுப்புவாதக் கலவரத்தின்போது காடையரால் தாக்கப்பட்டு உயிரிழந்த, விஸ்வலிங்கம் என்பவரின் குடும்பத்துக்காகக் களுத்துறை அரசாங்க அதிபரால் ஆரம்பிக்கப்பட்ட 'விஸ்வலிங்கம் நிதி'க்குப் பண உதவி வேண்டுமென அரசாங்க ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை கோரியதன் பயனுக, அக் கிளையின் அங்கத்தவர்கள் உதவியுள்ள தொகை 2580 ரூபாயாகும். பொதுமக்களிடையே யிருந்து வசூலிக்கப்பட்ட தொகையுடன் இதைச் சேர்த்தால், ஏறத்தாழ 7000 ரூபாயாகின்றது. இத்தொகைக்கான செக்கை, இறந்தவரின் மனைவியான திருமதி விஸ்வலிங்கத்திற்கு, யாழ்ப்பாண அரசாங்க அதிபர், களுத்துறை அரசாங்க அதிபரின் சார்பில் அளிப்பாரெனத் தெரிகிறது.

—ந. நி.

## 'ஈழநாடு' விற்பனையாளர்

1. கே. கந்தசாமி, பலசரக்கு வியாபாரி, அச்சுவேலி.
2. கிருஷ்ண விலாஸ், கொடிகாமம்.
3. எஸ். பொன்னையா, நியூஸ் ஏஜன்ட், நெல்லியடி, கரவெட்டி.
4. ரி. பொன்னுத்துரை, கலாநிதிப்புத்தகசாலை, ஊர்காவற்றுறை.
5. ஸ்ரீ ஆறுமுகம், ஆறுமுக விலாஸ், கீரிமலை.
6. வி. ஐயாத்துரை, பலசரக்கு வியாபாரி, காங்கேசன்துறை.
7. ஏ. சிவப்பிரகாசம், பலசரக்கு வியாபாரி, மீசாலை.
8. எஸ். துரைசிங்கம், ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்.
9. ரி. நடராசா, சந்தி, மல்லாகம்.
10. கே. இளையதம்பி, பலசரக்கு வியாபாரி, மூளாய்.
11. வட- இலங்கைப் புத்தகசாலை, பெரிய தெரு, பருத்தித்துறை.
12. கே. சுந்தரம்பிள்ளை, நியூஸ் ஏஜன்ட், பண்டத்தரிப்பு.
13. கே. ஆறுமுகசாமி, நியூஸ் ஏஜன்ட், தெல்லிப்பழை.
14. எம். எஸ். சிற்றம்பலம், வேலணை.
15. ரேயல் கபே, வட்டுக்கோட்டை.

சிறுகதை

# புயல்

மயில்வாகனன்

காலை ஏழு மணியாகியும் படுக்கையை விட்டு நான் எழவில்லை. நன்ருக இறுகப் போர்த்துக்கொண்டு படுத்துத் தூங்கினேன்.

ஜன்னலூடாகக் காற்று வீசியது. வழக்கமாக உடலைத்தழுவிச் செல்லும் காற்று இன்று என்னைப் போர்வையுடன் சேர்த்து மேலே தூக்கிவிடும் போலிருந்தது. வெளியிலே காற்றுப் பலமாக அடித்துக் கொண்டிருந்தது. மெதுவாகப் படுக்கையை விட்டெழுந்து, அறைக்கு வெளியே சென்றேன்.

விருந்தையில் வந்து நின்றேன். மழை தூறிக்கொண்டிருந்தது. தூறுகின்ற மழையைக் காற்று நீறு படுத்தியது. அதனுடைய சீற்றத்தின் வாயிலகப்பட்ட நீர் சின்னபின்னமாகச் சிதறி எங்கணும் தெறித்தது. தூவானம் என் மேலிலும் பட்டது; உடல் நடுங்கிற்று.

* * *

'லொக், லொக்' — இருமல் சத்தம். திரும்பிப் பார்த்தேன். ஓலைப்பாயில் என் அப்பா படுத்து இருமிக்கொண்டிருந்தார்.

பாவம்! அவருக்கு இப்பொழுது கிட்டத்தட்ட எழுபது வயதிருக்கும். அவர்தான் என் தந்தையின் தந்தை. அவருக்குக் கயரோகம்!

எவ்வளவு தான் சொல்லிப் பார்த்தாலும், அப்பா உள் அறைக்குள் படுக்க மாட்டார். வெளியிலே, விருந்தையிலேயே படுப்பார். எங்கள் தகப்பனுர் எவ்வளவோ வற்புறுத்தியும் கூட அப்பா கேட்கவே இல்லை.

ஆனல், இந்த நேரத்தில், இத்தனை பெரிய காற்றடிக்கும் பொழுதும் அவர் வெளியில் படுத்திருப்பதா?

"அப்பா! காற்றுப் பலமாக அடிக்கிறது. உள்ளே வந்து படுங்கள்" என்று அவருக்கு அருகிற் போய்ச் சொன்னேன்.

ஒரு நாளும் இல்லாத மாதிரி, அன்று அவர் ஒரு மறுப்பும் கூறவில்லை! "ம்ம்...... சரி...... தூக்கு"...... முனகினுர். நான் அவரை மெதுவாகத் தூக்கிச் சென்று உள்ளே படுக்க விட்டேன்.

"வெளியிலே, துப்பல் சிரட்டை...... அதை இங்கே கொண்டு வா!" என்ருர்.

அதை எடுத்துச் சென்று கொடுத்தேன். பலமாக இருமினுர். துப்பல் சிரட்டைக்குள் காறித் துப்பினுர். சளி கட்டியாக விழுந்தது.

'பாவம், அப்பா' என்று அவருக்காக என் மனம் ஏங்கியது.

* * *

கிணற்றடிக்குச் சென்று முகங் கால் கழுவினேன். பின் சமையலறைக்கு விஜயம் செய்தேன். அங்கு என் மனைவி தோசை சுட்டுக்கொண்டிருந்தாள்.

அவளுக்குத் தெரியாமல் பின் பக்கமாகச் சென்று அவள் கண்களைப் பொத்தினேன். அவள் 'சும்மா விடுங்களேன். விடிந்து ஏழு மணியாச்சு, இப்போதானுக்கும் எழும்புவது?' என்று குறை கூறினுள். இந்தப் பெண்களுக்கு எப்பொழுதுதான் மனம் நிம்மதியாக இருக்கிறது? எந்தச் சந்தர்ப்பத்திலும் குறை கூறுவது அவர்களின் இயற்கையான குணம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏமாற்றத்துடன் கைகளை எடுத்துவிட்டு "சரி, சரி. தோசையைப்போடு வயிற்றைக் கிள்ளுது' என்று கூறினேன்.

'வயிற்றைக் கிள்ளினுல் நின்று துள்ளுங்கோ' என்று புன்முறுவலுடன் பகர்ந்தாள் என் மனைவி.

சாப்பிட உட்கார்ந்தேன். 'ஓ' வென்ற இரைச்சல் தூரத்திலிருந்து செவிகளில் வந்து விழுந்தது. பிறகு, அதே சப்தம் மெல்ல மெல்ல நகர்ந்து கிட்டக் கிட்ட வருவது போலிருந்தது. போலென்ன, வந்தே விட்டது! வீட்டைச் சுற்றி ஒரே இரைச்சல். புயல் வந்துவிட்டது!

* * *

சாப்பாடு முடிந்தது. விருந்தையில் வந்து நின்றேன். தோட்டத்திலுள்ள மரம், செடி எல்லாம் ஆட்டம் கண்டன. புயற்காற்று நினைத்த மாதிரியெல்லாம் அவற்றுடன் விளையாடிக்கொண்டிருந்தது.

படார்! மள மள வென்று வானை நோக்கி வளர்ந்து கொண்டு வந்தவொரு பப்பாசி மரம் வேருடன் சாய்ந்து விழுந்தது. தோட்டத்தில் நின்ற அத்தனை மரங்களுக்குள்ளும் அதுதான் பெரிய மரம். அது விழுந்துவிட்டது! இனி அதனுடைய இனிப்பான பழங்களும் கிடையாதே என்று எண்ணியதும், என் இதயம் வருந்தியது.

'லொக் ... லொக் ... லொக்!' அப்பாவின் இருமல் கடுமையாகிவிட்டது. அவருடையபடுக்கைக்கு ஓடினேன்.

"ரகு...லொக், லொக், லொக் .........ரகு...என்னப்பா...ஒரே வலியாயிருக்கு...லொக், லொக் ..." இருமல்களுக்கிடையில் கஷ்டப்பட்டுக் கதைத்தார் அப்பா.

"பேசாமல் படுத்திருங்கோ, அப்பா. நான் கமலாவிடம் சொல்லிக் குடிநீர் போடச் சொல்லுகிறேன்" என்றேன் நான்.

இதற்கிடையில் கமலாவும் வந்து சேர்ந்தாள். 'என்ன அத்தான்? அப்பாவுக்கு இருமல் பலத்துவிட்டது போலிருக்கிறதே' என்று கேட்டவளிடம் நான் 'ஆம்' என்று பதிலளித்துவிட்டுக் குடிநீர் தயார் பண்ணும்படி அனுப்பினேன். அவள் போய்விட்டாள்.

சிறிது நேரம் சென்றது. கமலா குடிநீரை ஒரு மூக்குப் பேணியில் ஊற்றிக்கொண்டு வந்தாள். நான் அதை வாங்கிக் குடிநீர் சிரட்டையில் ஊற்றி அப்பாவுக்குப் பருக்கினேன். குடித்துவிட்டு அவர் படுக்கையிற் சாய்ந்தார். நான் வெளியில் வந்தேன்.

* * *

காற்றுச் சிறிது ஓய்ந்திருந்தது. இன்னும் சிறிது நேரத்தில், திரும்பவும் புயல் வருமென்பதையும், அதுவும் முன்னிலும் பார்க்க மிகுந்த சக்தியுடன் வந்து சேரும் என்பதையும் அறிந்த நான், கதவுகள், ஜன்னல்கள் எல்லாவற்றையும் அடித்துச் சாத்தினேன்.

மத்தியானமாகிவிட்டது. புயல் மழையுடன் வந்து சேர்ந்தது. அப்பாவின் இருமல், சிறிது ஓய்வுக்குப்பின், அதிக வேகத்துடன் மேல் ஏறியது. 'லொக்கு, லொக்கு...' என்று அடிவயிற்றிலிருந்து இருமினுர் அவர். எனக்குப் பயம் வந்துவிட்டது. போய் அவருடைய போர்வைக்கு மேல் இன்னுமொரு போர்வையைப் போர்த்திவிட்டேன்.

கமலாவிடம் ஒரு சட்டியில் வேப்பங்கொட்டைகளைப் போட்டு, அவைக்குமேல் நெருப்புத்தணல் சிலவற்றையும் போட்டுக்கொண்டு வரும்படி சொன்னேன். அவள் கொண்டு வந்தாள். அதை வாங்கி அப்பாவின் படுக்கைக்கு அருகில் வைத்தேன். புகை கிளம்பி அறை முழுவதும் பரவி நின்றது. குளிரான சூழ்நிலையிற் சூடாக அமைந்த அப்புகை உடலுக்கு இதமாக இருந்தது, அப்பாவுக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் தான்!

* * *

மாலைநேரம் வந்தது. புயலின் வேகம் தணியவேயில்லை. அப்பாவின் இருமல் இவ்வளவு நேரமும், புயலுடன் போட்டியிட்டுவிட்டு இப்பொழுது சிறிது நேரமாகத்தான் ஓய்ந்துவிட்டிருந்தது.

இரவுச் சாப்பாட்டுக்கு உதவி செய்வதற்காகச் சமையல் அறைக்குச் சென்றேன். கமலாவுக்கு நான் சமையலறையில் சாட்டுக்கு நின்ருலும் போதும். தன் வேலையைத் துரிதமாகக் கவனிப்பாள். இல்லாவிடில் சாப்பாடு அரை மணியோ, அல்லது ஒருமணியோ பிந்தும்!

சமையலறையில் எனது உதவி வேலை முடிந்துவிட்டது. விருந்தையில் வந்து சாய்வு நாற்காலியில் 'அப்பாடா' என்று சாய்ந்தேன். புயலின் வேகம் சிறிது தணிந்துவிட்டது போலிருந்தது.

இந்தப் புயலே ஒரு தத்துவ ஆசிரியன் தான்! 'ஓ' வென்ற இரைச்சலுடன் வந்து சேர்ந்தாலும், அது கடைசியில் ஒரேயடியாக ஓய்ந்துவிடுகிறது. மனிதனின் வாழ்க்கையும் அப்படித்தானே! தாயின் வயிற்றிலிருந்து உற்பத்தியாகும்பொழுது 'ஆ' வென்று கொண்டு நாம் பிறக்கின்ருேம். ஈற்றில், மெதுவாக, ஓய்ந்து ஒழிந்துவிடுகிருேம்.

இந்த எண்ணம் என் மூளையில் தோன்றி மறைந்ததோ இல்லையோ மற்ருேர் எண்ணம் தோன்றியது. மறுகணம் என் மனம் துணுக்குற்றது. ஆமாம்! அப்பாவின் அறையிலிருந்து ஒரு சப்தத்தையும் காணவில்லையே! ஒரு வேளை.........புயல் ஓய்ந்தது போல் அவர் வாழ்வும்......சாய்வு நாற்காலியிலிருந்து துள்ளி எழுந்து ஓடினேன் அறைக்குள். அங்கே அப்பா நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார். கண்கள் மூடியிருந்தன. குனிந்து மூக்கில் கையை வைத்துப் பார்த்தேன். அந்தச் சிரமம் எதற்கு.........? அப்பாவின் எழுபது வருட வாழ்க்கைப் புயல் ஓய்ந்துவிட்டது.

## சிறுகதை எழுத்தாளர்களுக்கு

பண்பாடு, ஒழுக்கம், வாழ்க்கைநிலை ஆகியவற்றை செம்மையாக்கும் நோக்கத்துடன் எழுதப்பெறும் சிறுகதைகளை "ஈழநாடு" வரவேற்கின்றது. கதைகள் 'பூல்ஸ்காப்' தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்துடன் தாளில் ஒரு பக்கத்தில் மையினுல் எழுதப்பெற்றுமிருக்க வேண்டும்.

### வாழ்க்கைச் சம்பவங்கள்

நாளாந்த நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்ட வாழ்க்கைச் சம்பவங்களையும் எழுத்தாளர்கள் எழுதி அனுப்பலாம். இச்சம்பவங்கள் இப்பத்திரிகையில் ஒரு பத்திக்கு (கலம்) மேல் அமையக்கூடாது.

## முகாமைக் காரரின் அநீதி கஷ்டத்துக்குள்ளாகும் ஆசிரியர்கள்

அகில இலங்கை ஆசிரிய சமாஜத்தின் மாதாந்தச் சஞ்சிகையில் அண்மையிலே வெளியிடப்பட்ட அறிக்கை யொன்றில், சாதாரணமாக ஆசிரியர்களின் இன்றைய போக்கில் வைதீக மனுே பாவம் காணப்படுகிறதென்றும், அவர்களின் பொறுப்பில் விடப்பட்டிருக்கும் சிறு பிள்ளைகளின் எதிர்கால சுபிட்சம் நிச்சயப்பட வேண்டுமாயின், அவர்கள் முற்போக்கு உள்ளவர்களாகக் கடமையாற்றுவது அவசியமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: இக்கால இயக்கங்களுள் முக்கியமான தொன்ருக விளங்குவது தொழிற்சங்க இயக்கம். இதை ஆசிரியர்களில் அனேகர் செவ்வனே உணர்ந்து கொள்ளாதது துக்கத்துக்குரியதொன்று. முகாமைக்காரரின் அநீதியான செயல்களினுலும், அரசாங்கத்தின் பயமுறுத்துதலினுலும் சில ஆசிரியர்கள் கஷ்டத்துக்குள்ளாயினர். இத்தகைய துரதிர்ஷ்டத்தை அறவே ஒழிக்கும் முயற்சிகளில் ஆசிரிய சங்கங்கள் தீவிரமாய் ஈடுபடவேண்டும்.

### தவருன கண்டனம்

நம் நாட்டிலும் தொழிற்சங்க இயக்கம் பழைமை தழுவும் முறைகளைக் கைவிட்டு, புதிய முறைகளைக் கையாண்டுவருவதை ஆசிரியர்களில் சிலரும் கண்டிப்பதான தகவல் கிடைத்திருக்கிறது. இது அவர்களின் தவருனசெயல் என்றேசொல்ல வேண்டும். ஏனெனில் ஆசிரியர்கள் வகுப்பறையில் மாத்திரம் ஆசிரியர்களல்ல. தேசிய அபிவிருத்தியைத் துரிதப்படுத்தும் வித்தியாபிவிருத்தியாளர்களாகவும் அவர்கள் தம்மை மதிப்பது உசிதமானது. தொழிற் சங்கங்கள் திருப்திகரமான தொண்டாற்றுவதையும் ஆசிரியர்களே முன்மாதிரி, போதனை ஆகியவற்றின் உதவியோடு மக்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

### கண்மூடித்தனம்

ஆசிரியத்தொழிலின் மகத்துவம் என்னும் அலங்காரச் சொற்ருெடர்ப் போர்வைக்குள் அடைக்கலம் புகுந்து, ஆசிரிய சமுதாயத்துக்கு நேரிடும் கஷ்டமான பிரச்சினைகளைச் சனநாயக முறையில் தீர்த்துவைக்கும் உத்தம கைங்கரியத்தில் கண்மூடித்தனமாக இருக்கும் ஆசிரியர்களின் போக்கு கண்டிக்கப்பட வேண்டியதொன்று.

'ஹென்ற்லி' உடை அலங்காரத்தின் உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்ற்லி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினுலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமென்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

# இதயத்தை ஈர்க்கும் இமயக் காட்சி

— கு. நா. சிவராமகிருஷ்ணன் —
[தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் வ. உ. சி. கல்லூரி]

**கண்ணுக்கு நேரே தெரியும் கல்மலையும், கண்ணுக்குத் தெரியாத கலையுள்ளமும் இணைந்து காவியமாக மலர்கின்றன. அந்த நிலையில் பக்தர் சேக்கிழாரின் உள்ளத்தில் வெண்மலர் போல் இமயம் காட்சி தருகிறது. கனகல்லையும் நெகிழச் செய்யும் இறைவன் திருவடி இமயக் கல்லையும் மலராகத் தோற்றுவிக்கிறது.**

- II -

அடியார்களின் வரலாற்றைக் கூறுவது பெரியபுராணம். அவர்கள் எல்லாரும் தம் தம் நிலையில் நின்று புலன் அடக்கமும், தன்னடக்கமும் நிரம்பிய சீலத்தால் பொலிபவர்கள். அதாவது நிலையில் திரியாது அடங்கிய தோற்றத்தினர். எனவே, அவர்கள் பெருமை மலையினும் மாணப்பெரிது; அதைப் பாடமுற்படும் காவியம் மலையிற் சிறந்த இமயத்தின் வருணனையில் தொடங்குவது எவ்வளவு பொருத்தமாக உள்ளது.

இமயத்தின் காட்சி எவரையும் ஈர்க்கவல்லது. உலகில் இதுபோல் வேறு மலை ஏது? பாரத நாட்டிற்கே உரிய தனிச் சிறப்பு.

"மன்னும் இமயமலை எங்கள் மலையே
மாநில மீதிலிது போற் பிறிதிலையே"

என்று பாடும் பெருமிதந் தானென்னே. இமயக்காட்சியில் ஈடுபட்ட புலவர்கள் தான் எத்தனை! காளிதாச மகாகவி 'குமாரசம்பவம்' என்ற பெருங் காவியத்தை இமயமலை வருணனையிலே தொடங்குகிறார். இமயத்தின் பெருமிதத் தோற்றத்தை அந்த வருணனையிலே காண்கிறோம். சங்கப் புலவர் முடமோசியார் ஆய் என்ற வள்ளலைச் சிறப்பிக்கும் ஒரு பாடலில் இமயத்தின் இயற்கை வளத்தையும் இன்பச் சூழலையும் சித்திரித்துக் காட்டுகிறார்.

## இமயச்சாரலில்

இமயமலைச் சாரலில் நரந்தைப் புல்செழித்து வளர்கிறது. அங்கும் இங்கும் அழகிய நீர்ச் சுனைகள் காட்சி தருகின்றன. அவற்றில் குவளைமலர் பூத்திருக்கின்றன. மலைச்சாரலில்கவரி மான்கள் வாழ்கின்றன. அவை நரந்தைப் புல்லை மேய்கின்றன, சுனை நீரைக் குடிக்கின்றன. பக்கத்தில் தகரம் என்ற ஒரு வகைமரம் நிழல் தந்து நிற்கிறது. அங்கே தன் பெண்மானோடு இன்பமாகத் தங்குகிறது. இந்தக் காட்சியை,

"நரந்தை நறும்புல்
மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை
பருகி யயல
தகரத் தண்ணிழற்
பிணையொடுவதியும்
வடதிசை யதுவே
வான்றோடு மிமயம்.
[புறநானூறு–132]

என்ற வரிகளில் காண்கின்றோம். நிறைவு உணர்ச்சி, இன்பம் என்ற இரண்டினையும் இந்தச் சொல் ஓவியத்தில் மோசியார் காணவைக்கிறார்.

முரஞ்சியூர் முடி நாகராயர் என்ற புலவர் சேர அரசனை நீ இமயம் போல் என்றும் வாழ்க என வாழ்த்த முற்படுகிறார். அங்கே அவர் கண்ட இமயக் காட்சியைக் கவிதை ஆக்குகிறார். பெண்மான்கள் தம் சிறுகுட்டிகளுடன் இமயச் சாரலில் வாழ்கின்றன. முத்தீவளர்த்து வேள்வி செய்யும் முனிவர்கள் வாழும் இடம் அது. மாலை நேரம் வருகிறது. வேள்வித்தீ ஒளிவிட்டு எரிகிறது.

அதன் அருகில் மான்குடும்பம் முழுவதும் அச்சம் இன்றி அமைதியாகத் தூங்குகிறது. இதனை,

"சிறுதலை நவ்விப்
பெருங்கண்மாப் பிணை
அந்தி அந்தணர்
அருங்கடனி றுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட்டு இமயமும்"
[புறம்—2]

என்ற வரிகளில் காணலாம்.

## வெண்மலர்

அச்சம் இன்மையும், சாந்தம் அல்லது அமைதி நிலையும் இந்த வருணனையில் தோற்றுவதை உணர்கிறோம். இதே இமயக் காட்சியில் சேக்கிழாரும் ஈடுபடுகிறார். அவர் இயற்றிய பெரியபுராணக் காவியமும் இமயமலை வருணனையிலே தொடங்குகிறது. வெண்ணிறமான பனிபடிந்து நிற்கும் இமயமலையின் வெளித் தோற்றம் திருநீறு அணிந்த அடியார் திருக்கோலமாகக் காட்சி அளிக்கிறது. நீறு தாங்கிய திருநுதலான் ஆகிய சிவபெருமான் எப்போதும் வாழும் திருக்கயிலாயத்தைத் தன்னகத்தே கொண்டு திகழும் இமயம் அவ்வாறு தோன்றுவதில் வியப்பு ஏது?

கண்ணுக்கு நேரே தெரியும் கல்மலையும், கண்ணுக்குத் தெரியாத கலைஉள்ளமும் இணைந்து காவியமாக மலர்கின்றன. அந்த நிலையில் பக்தர் சேக்கிழாரின் உள்ளத்தில் வெண்மலர்போல் இமயம் காட்சிதருகிறது. கனகல்லையும் நெகிழச் செய்யும் இறைவன் திருவடி இமயக்கல்லையும் மலராகத் தோற்றுவிக்கிறது.

இமயக்காட்சியை வருணிக்க வந்த காளிதாச மகாகவி அதன் பெருமித நிலையை வியந்து பேசினான். சங்கப்புலவர் மோசியார் வருணனையில் காண்பவை நிறைவு உணர்ச்சியும், இன்பமும், முடிநாகராயர் பாட்டிலே காண்பன அச்சம் இன்மையும், அமைதியும். பெருமிதம், நிறைவு, இன்பம், அச்சமின்மை, அமைதி ஆகிய இவை எல்லாம் கை கோத்து நடம்புரிவதைச் சேக்கிழார் இமயக் காட்சியிலே பார்க்கிறார். காரணம் சிவபெருமான் வாழும் திருக்கயிலாயம் அங்கே இருக்கிறது.

மற்றப் புலவர்கள் ஒவ்வொரு உணர்ச்சி நிலையை மாத்திரம் கண்டார்கள். சேக்கிழார் அவை அனைத்தையும் ஒருசேரக் காண்கிறார். அவர் காணும் இமயத்தில் பெருமிதம், நிறைவுணர்ச்சி, இன்பம், அச்சமின்மை, சாந்தநிலை ஆகிய எல்லாம் தாவி ஓடுகின்றன. இதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வம் எழுகிறது. இவை அனைத்தும் ஒரு சேரப் பொங்கி எழுவது பக்தன் உள்ளம் ஒன்று தானே; எனவே பக்தர் உள்ளத்தை உவமையாகச் சொல்லலாம் என நினைக்கிறார்.

## மலையும் மனமும்

பெரிய புராணக் காவியம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த குலோத்துங்கச் சோழன் அவர் நினைவில் தோன்றுகிறான். அரண்மனையை விட ஆலயத்தைப் பெரிதாகப் போற்றியவன் அவன். கோயில் நாகரிகம் வளரக் கங்கணம் கட்டிக் கொண்டு வாழ்ந்த பரம்பரையில் வந்தவன் ஆயிற்றே. சிவனடியார்களின் வாழ்க்கை காவியமாக வேண்டும் என அவன் நினைத்தான். அதன் விளைவு அல்லவா இந்தக் காவியம். எனவே, குலோத்துங்கன் பக்தி உள்ளம் மிகப் பெரியது. எப்போதும் சிவனை நினைக்கும் உள்ளம் அது. அவன் உள்ளத்தின் பெருமை இமயத்திற்கு ஒப்பானது. உயர்ந்தது, என நினைக்கிறார்- சோழன் உள்ளம் போல் உயர்ந்த இமயம் என்று கூறுகிறார்.

"செய்ய கோல் அபயன் திரு
மனத்தோங்கும்]
திருக்கயிலாய நீள் சிலம்பு"

இமயமலை சலியாது நிலைத்து நிற்பது, மனித மனமோ எப்போதும் அலைந்து சலிப்பது. அலையாத மலைக்கு அலையும் மனத்தை உவமை கூறலாமா என்பது கேள்வி. வெறும் மனித உள்ளத்தை உவமை கூறவில்லையே. மன்னன் குலோத்துங்கன் உள்ளத்தை அல்லவா கூறுகிறார்.

## அவன் பக்தியில் இமயம்

இருக்கட்டுமே: மன்னன் ஆனாலும் அவன் உள்ளமும் மனித உள்ளந்தானே. அவன் உயர்ந்த மனிதன், மன்னன் என்பது மட்டுமா? சிறந்த பக்தன். இறைவன் எப்போதும் வாசம் செய்யும் பெருமை படைத்தது அவன் மனம். எனவே, அது அலையாது நிலைபேறு பெற்றதாகி விட்டது. இமயம் போல் அசலமாக இருக்கிறது.

"கையில் மான்மழுவர் கங்கை
சூழ் சடையில் கதிரிளம்
பிறை நறுங்கண்ணி
ஐயர் வீற்றிருக்கும் தன்மை
யினானும்."

குலோத்துங்கன் உள்ளத்தில் இறைவன் எப்போதும் வீற்றிருக்கிறான் என்றால் அதன் பெருமைக்கு எல்லை ஏது? "அளப்படும் பெருமையினால்" சிறக்கிறது அவன் உள்ளம். சோழர் பரம்பரைக்கே உள்ள தனிப் பெருமை சமய வாழ்வை உரம் பெறச் செய்ததுதான். அதற்காக அவர்கள் கல்கொண்டு கோயில்கள் கட்டினர்.

சோழன் குலோத்துங்கனோ அதோடு நில்லாது சொல் கொண்டு அமைக்கும் காவியக் கோயிலும் கட்ட விரும்பினான். கோயிலும் கட்ட விரும்பினான். எனவே அவன் பத்தியின் பெருமையை 'அளப்பரும் பெருமையினாலும்' என்கிறார் சேக்கிழார். எப்படியாவது அடியார் வரலாறு சொற் கோயிலாக வேண்டும். அதன் மூலம் சிவ ஒளி உலகம் எல்லாம் தழைக்க வேண்டும் என நினைத்தான் சோழன் குலோத்துங்கன். காரணம், மெய்மையும், தூய்மையும் எப்போதும் தழைக்கும் மனம் படைத்தவன் அவன். ஒரே வார்த்தையில் சொன்னால் 'பக்தன்.' இமயம் அளவு ஓங்கிய பக்தி நிரம்பியவன் அவன். இதை உணர்த்தவே அவன் மனத்தைத் திருமனம் என்கிறார் சேக்கிழார். மனத்திற்குத் திரு ஆவது நற்குணம், நல்லுணர்வுகளால் நிரம்புதல் தானே.

பெருமிதம் முதல் அமைதி ஈறுகப் பல நல்லுணர்வுகள் நிலவும் இமயத்தை வருணிக்க வந்த சேக்கிழார் அவ்வுணர்வுகள் எல்லாம் ஓங்கிப் பொலியும் சோழன் குலோத்துங்கன் உள்ளத்தை உவமையாகக் கூறுகிறார். அவன் பக்தியால் இமயம்

2. "கையில் மான்மழுவர்
கங்கை சூழ் சடையில் கதி
ரிளம்பிறை நறுங்கண்ணி
ஐயர் வீற்றிருக்கும் தன்மை
யினானும் அளப்பரும் பெரு
மையினானும்
மெய்யொளி தழைக்கும்
தூய்மையினானும் வென்றி
வெண்குடை அநபாயன்
செய்ய கோல் அபயன் திரு
மனத் தோங்கும் திருக்க
யிலாய நீள் சிலம்பு"
[பெரிய புராண திருமலைச் சிறப்பு-]

என்பது சேக்கிழார் வாக்கு.

இந்தப் பாட்டில் பெரிதும் சிறப்பிக்கப்படுவது இமயமா? அல்லது குலோத்துங்கன் உள்ளமா? அதை மறவாமல் காவியத் தொடக்கத்திலே எடுத்துப் பாராட்டிய சேக்கிழாரின் உள்ளப் பாங்கா? இம் மூன்றின் சிறப்பையுந் தான் பாடல் உணர்த்துகிறது என்று சொல்லுவது தானே பொருத்தம்.

---

2. தமது இடக் கையில் மானும் வலக் கையில் மழுவும் உடையவராகவும், கங்கையைச் சூழ்ந்த கரை போல கட்டிய சடைமகுடத்திலே ஒளி வீசும் இளம் பிறைச் சந்திரனையும் நறுங் கொன்றைப் பூமாலையையும் உடைய சிவபெருமான் விரும்பி எழுந்தருளி இருக்கிற தன்மையை உடைமையானும், அளவிட முடியாத பெருமையை உடைமையானும் மெய்யினது ஒளி மேல் மேல் ஓங்கி வீசும் தூய்மையை உடைமையானும், வெற்றி பொருந்திய வெண்குடையை உடைய அநபாயனும், செங்கோல் ஏந்திய அபய சோழனும் ஆகிய குலோத்துங்கனுடைய திருமனம் போல் ஓங்குவதாம் திருக்கயிலாய நீள் சிலம்பு.

---

## திரு. கே.பாலசுப்பிரமணியம் அமெரிக்கா செல்கிறார்

தெல்லிப்பழை பன்னாலையைச் சேர்ந்தவரும் இப்போது கேகாலையில் சுகாதார போதனையாளராகக் கடமையாற்றுபவருமான திரு. கே பாலசுப்பிரமணியம் அமெரிக்கா செல்கிறார். ஐக்கிய அமெரிக்க வெளியூர் புனருத்தாரண நிதியுதவித் திட்டத்தின் ஆதரவில் சுகாதார போதனா முறைகளில் தேர்ச்சி பெறுவதற்காக திரு. பாலசுப்பிரமணியம் சுகாதார பகுதியால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்.


இவர் சுகாதார போதனையாளராக நியமனம் பெறுவதற்கு முன், மின்னேரியாவிலுள்ள அமெரிக்க அடிப்படைக் கல்வித் திட்டப்பகுதியினரால் நடாத்தப்பட்ட சுகாதார போதனா முறைத் தேர்ச்சியில் சித்தியடைந்தும், களுத்துறையில் உலக சுகாதார சம்மேளனப் போதனாசிரியரின் ஆதரவில் நடாத்தப்பட்ட தேர்ச்சியிலும் விசேஷ சித்தியடைந்துள்ளார்.

இவர் கொழும்பிலும் கேகாலையிலும் சுகாதார போதனையாளராக ஆறு ஆண்டுகள் வரை சேவை செய்திருக்கிறார். அதற்கு முன் சுகாதாரப் பரிசோதகராக இவர் பத்து வருடங்களுக்கு மேல் இலங்கையின் பல பாகங்களிலும் சேவை செய்திருக்கிறார்.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒன்றரை ஆண்டுகள் வரை அமெரிக்காவிலும் மூன்று மாதமளவில் ஐரோப்பாக் கண்டத்திலும் பயிற்சி பெறுவார்.

நவநாகரிகமான முறையில்

குறித்த தவணையில்



ஓடர் நகைகள்

செய்து கொடுக்கப்படும்.

பொற் தொழில்
ஒத்துழைப்புச் சங்கம்
நல்லூர்
82/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# இலங்கையைப் பிரித்தால் பொருளாதாரம் சீர்குலையும்

## சமஷ்டிபற்றி டக்டர் நாகநாதன் விளக்கம்

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொக்குவில், கோண்டாவில் கிளை நடாத்தி வரும் அரசியல் வகுப்பு 15-8-59 சனிக்கிழமை கொக்குவில் தமிழன் பாசறையில் நடை பெற்றது. இவ்வகுப்பில் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், "சமஷ்டியரசியலும் பொருளாதாரமும்" எனும் பொருள் பற்றி விரிவான விளக்கங் கொடுத்தார்.

சமஷ்டி அரசியலென்றால் என்ன, இலங்கையும் சமஷ்டியும், சமஷ்டி அரசியலைப் பெறுவதெப்படி, சமஷ்டியரசியலின் பொருளாதாரம் என்பனபற்றி அவர் தமது விரிவுரையிற் குறிப்பிட்டிருந்தார். அவ் விரிவுரையின் சுருக்கம் வருமாறு:

இரு முக்கிய மொழிகளைக் கொண்ட சிறு பான்மையும் பெரும் பான்மையுமாகிய தேசிய இனங்கள், இலங்கையின் பல பாகங்களிலும் வாழும் பொழுது, நாட்டைப் பிரிப்பது இரு இனங்களையும் படு குழியில் தள்ளுவது போலாகும்.

இவ்வித சூழ்நிலை நிலவி வரும் சுவிற்சலாந்து, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் சமஷ்டி முறையிலேயே தமது அரசியல் திட்டத்தை வகுத்துக் கொண்டதனால் பொருளாதாரத்துறையில் மிகவும் முன்னேறியுள்ளன. ஒரு நாட்டின் பொருளாதார வளமும் விருத்தியும் அந்நாட்டு மக்களின் ஒற்றுமை வாழ்விலேயே தங்கியுள்ளன. இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிந்த நிலையில் தனி இராச்சியங்களாக வாழ்வதால் இன்று அவ்விரு நாடுகளும் இன்னல்களை அனுபவிப்பது மட்டுமல்லாமல், அடிக்கடி எல்லைப்புற கலவரங்களுக்கும் உள்ளாகி வருகின்றன. மிகப் பெரிய தேசங்களான இவையே இவ்வாறு இன்னற்படும்போது, மிகச் சிறிய நாடாகிய இலங்கை பிரிக்கப்பட்டால் அதன் பொருளாதார நிலை சீர்கெட்டு மக்கள் இடர்ப்படுவர்.

தமிழ் பேசும் மக்கள் சமஷ்டி அரசியலின் அவசியத்தையுணர்வதுடன் தமிழ் மொழியும் தமிழ்க் கலாசாரமும் எவ்வாறு இவ்வரசியலின் கீழ் பாதுகாக்கப்படுமென்பதையும் நன்கு அறிந்து கொள்வது அவசியமாகும். தமிழ் மக்களெல்லோரும் கட்டுப்பாடான முறையில் தலைவர்களின் திட்டங்களை நிறைவேற்றத் தயாராகவிருக்க வேண்டும். மக்களின் ஒற்றுமையும் கட்டுப்பாடும் உறுதியும் எவ்வளவுக்கு நிலைபெற்றுச் செயலாற்றப்படுகிறதோ அவ்வளவு விரைவில் நாம் சமஷ்டியரசியலைப் பெறமுடியும்.

ஒற்றையாட்சியின் கீழ் நாம் இருப்போமானால் அரசாங்கத்தால் வஞ்சிக்கப்பட்டு அழிந்தொழியவேண்டி நேரிடும். இல்லையேல் சிங்களராக மாறுவதைவிட வேறு வழியில்லை. எனவே, நாட்டின் பொருளாதாரநிலை செழித்துஓங்குவதற்கு சமஷ்டி ஆட்சியே உகந்ததாகும்.

## தாதிமார் பயிற்சிக்கல்லூரி ஒக்டோபரில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணத்தில் செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவிருந்த தாதிமார் பயிற்சிக் கல்லூரி இவ்வாண்டு ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்படும். இக்கல்லூரி ஆரம்பமானதும் இதேபோன்ற ஒரு தாதிப் பயிற்சிக் கல்லூரியை மட்டக்களப்பில் நிறுவுவதற்கான பேச்சுவார்த்தைகளை தமிழரசுக் கட்சியினர் அரசாங்கத்துடன் நடாத்துவார்கள்.


கலாநிலையப் பதிப்பகம்

தினக்குறிப்பு 1960

1960ஆம் ஆண்டுக்குரிய புதிய தினக்குறிப்புகளை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எமது தினக்குறிப்புடன், மாணவர்களுக்கென பிரத்தியேகமான தினக்குறிப்பையும் வெளியிடுகின்றோம்.

எமது தினக்குறிப்பின் விலை வழக்கம்போல் 75 சதம் தான்

விபரங்களுக்கு:- தினக்குறிப்பு 1960,
த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம்.

இங்கே வெட்டவும்

மனேஜர்:
கலாநிலையப் பதிப்பகம்
த. பெ. எண்: 49.
சிவன் கோவில் மேலவீதி,
யாழ்ப்பாணம், :: [இலங்கை.]

1960ஆம் ஆண்டு பொது மாணவர்களுக்கான தினக்குறிப்பில் ............பிரதிகளை எமது பெயரில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இத்துடன் முற்பணமாக ரூபா............ அனுப்பி வைத்துள்ளோம்.

எமது பெயரும் முகவரியும் பின்வருமாறு:

பெயர்:..............................

முகவரி:..............................

..............................


## குண்டசாலைச் சம்பவம்

### அமைச்சருடன் ஊர்காவற்றுறை எம். பி. பேச்சுவார்த்தை

சமீபத்தில் குண்டசாலை விவசாயப்பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற கலவரம் பற்றி ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா காணி விவசாய அமைச்சர் திரு. ஸி. பி. டி. சில்வாவைக் கண்டு பேசினார். திரு. ஸி. பி. டி. சில்வா கல்லூரிவார்டன் தான் குறித்த கலவரத்தை மூட்டியுள்ளதாகவும், இவரை அதிகாரிகள் பல தடவை எச்சரித்துள்ளதாகவும் திரு. வி. ஏ. கந்தையாவுக்கு அமைச்சர் ஆதாரபூர்வமான பத்திரங்களுடன் தெரிவித்தாராம். இது சம்பந்தமாகப் பாரபட்சமற்ற ஒரு விசாரணை விரைவில் நடத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். குண்டசாலைப் பயிற்சிக் கல்லூரி குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாக இம்முறை மூடப்பட்டுள்ளது. ஓகஸ்ட் 17-ம் திகதி நடைபெறவிருந்த முதல்வருடப் பரீட்சை கூட இம்முறை நடைபெறவில்லை.

## சுதந்திர இந்தியாவின்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### அரசினர் பொறுப்பு

முதலாவது ஐந்து வருடத் திட்டத்தில், முதலீட்டில் பெரும் பகுதி தனிப்படடோர் பொறுப்பிலேயே விடப்பட்டது. ஆனால் இரண்டாவது ஐந்து வருடத் திட்டத்தில் முதலீட்டில் பெரும் பகுதி அரசாங்கப் பொறுப்பிலேயே விடப்பட்டது. மூன்றுவது ஐந்து வருடத் திட்டத்தைச் சிருஷ்டிப்பதில் ஈடுபட்டிருக்கும் பொருளாதார நிபுணர்கள், முதலீட்டில் இரண்டாவது திட்டத்திலும் பார்க்கக்கூடிய பங்கை அரசாங்கப் பொறுப்பில்விட உத்தேசித்துள்ளார்கள். சமதர்மம் நிலவும் சமுதாயத்தைச் சிருஷ்டிக்க விரும்பும் அரசாங்கம் முதலீட்டில் பெரும் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். எனவே, சமதர்ம அடிப்படையில் சமுதாயத்தை அமைக்க விரும்பும் அரசாங்கம் இம்முறையைப் பின் பற்றுவது சிறந்ததே.

இந்தியா சுதந்திரமடைந்த பின் மின் சக்தி உற்பத்தி செய்யும் பல மின்சார நிலையங்கள் திறக்கப்பட்டன. பலநோக்குடைய ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் செயல் முறையில் கொண்டுவரப்பட்டன. **தாமோதரப்** பள்ளத்தாக்குத் திட்டம், **துங்கபத்திரத்** திட்டம் போன்ற பல ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் மூலம், நீர்ப்பாய்ச்சல் வசதி மின்சார வசதி முதலியவற்றைப் பெருக்குவதில் அரசாங்கத்தார் ஈடுபட்டுள்ளனர். இதுபோன்ற திட்டங்களினால் அரசாங்கத்தார், நாட்டிற்குத் தேவையான மின் சக்தி நீர்ப்பாசன வசதியனைத்தையும் காலப்போக்கில் பெறத் திட்டமிட்டுள்ளனர்.

போக்கு வரத்து வசதிகள், சமூக சேவைகள் முதலிய யாவற்றிலும் சுதந்திரத்திற்குப் பின் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருக்கும் இந்தியா காலப்போக்கில் கிழக்காசியாவிலேயே ஒரு செல்வம் கொழிக்கும் நாடாகத் திகழுமென்பதில் ஐயமில்லை. இன்று அரசியலில் நிலவும் ஸ்திரமான நிலை இன்னும் பல காலத்திற்கு நிலவுமானால் வல்லரசுகளிலொன்றாகவே இந்தியா திகழ முடியும். பொருளாதாரத் துறையில் இந்தியா அடைந்த முன்னேற்றத்தைப் பார்த்து—முன்னேற்றம் செயல் முறையில் கொண்டுவரப்பட்ட முறைகளைப் பின்பற்றி ஈழநாடும் செயலாற்றினால் பொருளாதாரத்துறையில் நாமும் முன்னேறலாம்.

# முன்னாள் கடற்படை ஊழியர்கள்

## சலுகைகள் அளிக்குமாறு வேண்டுகோள்

திருக்கோணமலை

திருக்கோணமலை முன்னாள் பிரித்தானியக் கடற்படை ஊழியர்கள் சமீபத்திற் கூடி இவ்வருடம் ஜனவரி மாதத்துக்குப் பின் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு அளிக்கும் சலுகைகளும் பணமும் தங்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தைநிறைவேற்றினார்கள். இக் கூட்டத்துக்குத் திருக்கோணமலைப் பிரதிநிதி திரு. ந. இ. ராஜவரோதயம், மூதூர்ப் பிரதிநிதி திரு. எம். ஈ. எச். முகம்மது அலி ஆகியோர் பிரசன்னமாய் இருந்தனர். இதுசம்பந்தமாகத் தாம் ஆவன செய்வதாகவும் வாக்களித்தனர்.

### களியாட்ட விழா

திருக்கோணமலை நகரசபை நடாத்தவிருக்கும் களியாட்ட விழா இம்மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகும். இதில் பல சினிமா நட்சத்திரங்களின் நடன இசை விருந்துகள் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திருக்கோணமலையில் ஒரு முஸ்லிம் மாதர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுளது.

உப்புவெளியில் ஒரு இளைஞர் மன்றமும், இராப் பாடசாலையும், வாசிகசாலையும் திறக்கப்பட்டுள்ளன.

### முஸ்லிம் மாதர் சங்கம்

குடிசைக் கைத்தொழிலில் பெண்கள் போதிய பணம் சம்பாதிக்க முடியுமென்றும், கல்வியோடு பணமும் இருந்தால் தான் வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையுமென்றும் வழக்கறிஞர் ஓ. எல். எம். இஸ்மாயில் காதி, ஓகஸ்ட் 17-ஆம் திகதி நடைபெற்ற திருக்கோணமலை முஸ்லிம் மாதர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

—ந. நி.

# உரிமை இழந்து வாழும் தமிழினம்

## கலாநிதி வித்தியானந்தம் கருத்து

பண்டைத் தமிழகத்து மக்கள் எல்லாச் சிறப்புக்களிலும் பார்க்க மானத்தையும் வீரத்தையுமே பெரும் சிறப்புக்களெனக் கொண்டிருந்தனர். ஆனால் இன்றோ தமிழ் மக்கள் தங்கள் உடைமைகளையும் இழந்து சிரிக்கக் கூட உரிமையற்றவர்களாக வாழ்கின்றார்கள். இந்த இழி நிலை மாற வேண்டுமானால் முதலில் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமிழ் மொழிப் பற்றுக் கொண்டு தமக்கென ஒரு சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டும். இதனைச் செய்யத் தவறினால் இன்னும் இரண்டு வருடங்களுக்குள் தமிழ்த்தாய் சீரும் சிறப்பும் இழந்து பொலிவிழந்து வாடுவாள்.

சமீபத்தில் இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் கலாநிதி திரு. சு. வித்தியானந்தன் ஊவா மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் **"தமிழ், தமிழர், தமிழ் இலக்கியம்"** என்னும் பொருள் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றும் போது தான் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

வதுளை நகர மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு வதுளை வித்தியாதரிசி திரு. ஜெ. எம். சீமான்பிள்ளை தலைமை தாங்கினர்.

**கண்ணோட்டம் 13**

# அலறும் ஒலிபரப்பி!

எங்கள் ஊர்களில் கல்யாண வைபவம் சரி, புதுமனை புகுதல் சரி, வேறு எந்தக் கொண்டாட்டமானாலும் சரி ஒலிபரப்பியின் துணை இல்லாமல் அந்த வைபவம் நடைபெறுதென்று எண்ணுமளவுக்கு ஒலிபரப்பி இக் கொண்டாட்டங்களில் பிரத்தியேக இடம் ஒன்றைப் பெற்றுவிட்டது.

உண்மையிலே, இந்த ஒலிபரப்பியைத் தமது வைபவங்களுக்கு ஒழுங்குபண்ணும் மக்கள் நல்லெண்ணத்துடன் தான் இதைச் செய்கிறார்கள் என்றாலும், அவர்கள் செய்வது தவறான காரியம். ஏனெனில், ஒலிபரப்பி கிளப்பும் சப்தம் எத்தனையோ பேருக்கு எத்தனையோ விதத்தில் தொந்தரவாக அமைந்துவிடுகின்றது. இதைக் கொண்டாட்டங்கள் நடத்துபவர்கள் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

உங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் ஒரு வீட்டில் கல்யாணம் என்று வைத்துக் கொள்ளுங்கள். நாளை விடியற்காலைதான் கல்யாணம். ஆனால், பக்கத்து வீட்டு ஒலிபரப்பியோ இன்று மாலை மூன்று மணி அல்லது நாலு மணிக்கே அலற ஆரம்பித்து விடும். உங்கள் மகனுக்கு நாளைக்கு எஸ். எஸ். ஸி. பரீட்சை. மாதக்கணக்கில் பல பல யோசனைகளுடன் இருந்த உங்கள் மனம் 'நாளைக்குப் பரீட்சையில் என் மகன் எப்படி எழுதுகிறானோ' என்று துடியாய்த் துடிக்குமல்லவா? அப்பொழுது, இந்த ஒலிபரப்பி மேல் உங்களுக்கு எவ்வளவு ஆத்திரம் வரும்? அதுமாத்திரமல்ல; ஒலிபரப்பி விடாப்பிடியாக இரவு முழுதுமே கதறிக் கொண்டிருந்தால்... உங்களுக்குப் பொறுக்கவே முடியாது. சரி, கடைசி உங்கள் வீட்டில் நடக்கும் கொண்டாட்டங்களுக்காவது ஒலிபரப்பியின் தொந்தரவுகள் பற்றி யோசித்து விட்டு ஒழுங்குபண்ணுங்கள்.

இதனைப் படித்துவிட்டுச் சிலர், "மகிழ்ச்சிகரமான வைபவங்களுக்கு ஒலி பரப்பி போன்ற ஒரு கருவி எவ்வளவு உதவியாக இருக்கின்றது தெரியுமா? அதுவுந்தவிர, ஊராருக்கு எங்கள் வீட்டில் கொண்டாட்டம் என்பதைத் தெரிவிக்கவும் அது துணை புரிகிறதே!" என்றும் சொல்லக்கூடும். நாம் அதை ஓரளவுக்கு ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. ஆனாலும், அப்படி மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் பொழுது, நாம் மற்றவர் மகிழ்ச்சிக்கு இடையூறாக இருக்கவும் கூடாதல்லவா?

இந்த ஒலிபரப்புத்தொல்லையிலிருந்து ஓரளவுக்காவது தப்புவதற்கும், ஒலிபரப்பி 'வேண்டும்' என்பவருக்கும் 'வேண்டாம்' என்பவருக்கும் பொதுவானவொரு சமரசம் காண்பதற்கும் ஒரு வழி உண்டு. அதாவது, ஒலி பரப்பி உபயோகத்தை ஒரு நேர அளவிற்குள் கட்டுப்படுத்த வேண்டும். இரவிலே ஒலி பரப்பி பாடினால் தான் அதிகமான மக்களுக்குத் தொல்லையாகின்றது. ஆகையால், இரவில் ஒன்பது அல்லது பத்து மணிக்கு முன்னதாகவே ஒலி பரப்பியின் ஒலி நிறுத்தப்படவேண்டும். இதற்கான சட்டத்தை நல்லமுறையில் நடத்த வேண்டிய பொறுப்பு பொலிஸ் அதிகாரிகளைச் சார்ந்ததாகும்.

# அரசியல் 'வறுவல்'

- வீட்டிலும் சரி, விருந்து வைபவங்களிலும் சரி, வறுவல் மணத்தாற் போதும். பசியில்லாதவரும் ஒரு கை பார்க்க முந்துவர்.
- அரசியல் விஷயங்களை அலசிப் படித்தவர்களுக்கு 'வறுவல்' இதோ புது மணத்துடன் வருகின்றது.

"ஏர் முனைக்கு நேர் இங்கே
எதுவுமே இல்லை
என்றும் நம் வாழ்விலே
பஞ்சமே இல்லை'

என்று பாடிக் கொண்டே ஒருவர் படலையைத் திறந்தார். பழகிய குரல்; தட்டிக்கு மேலாலே எட்டிப்பார்த்தேன். பணிஸ் மணியம் என் இருப்பிடத்தை நோக்கி விரைவாக வந்துகொண்டிருந்தார்.

"என்ன இந்தப்பக்கம்" என்றேன்.

"அப்படி ஒன்றுமில்லை. பேப்பர் படிக்கலாம் என்று வந்தேன்."

"இரவல் பேப்பர் படித்துச் சுவை கண்டுவிட்டாய்" என்று சொல்லிக் கொண்டே தலைமாட்டிலிருந்த பத்திரிகையை எடுத்து நீட்டினேன்.

"உங்களுக்குத் தெரியாமல் இருக்கமாட்டாது. யூ. என். பி. ஏதோ சத்தம் போடுகின்றதே. எல்லாம் எலெக்ஷனை முன்னிட்டுத்தான்" என்றார் பணிஸ் மணியம்.

"யார் குடி கெட்டாலும் நீ குடி மிளகுசாறு என்ற மாதிரி யூ. என். பி. எதுவிதத்திலும் ஒரு பொதுத் தேர்தலைக் கிளப்பிவிடப் பார்க்கிறது" என்றேன்.

"நீங்கள் சொன்னால் சொன்னதுதான். சென்றவாரம் நான் கொழும்புக்குப் போயிருந்தேன். அங்குள்ள சுவர்களில் எல்லாம் டட்லி சேனநாயக்கா ஆழ்ந்த யோசனையுடன் காட்சியளிக்கின்றார். 'அன்று அவரை நம்பினோம். இன்றும் அவரை நம்புகின்றோம்' என அந்தச் சுவரொட்டிகள் கதறுகின்றனவே" என்று துள்ளி எழுந்தார் பணிஸ் மணியம்.

"அவதிப்படாதே, நான் கூறுவதைக் கேள். இந்த யூ. என். பி. சமாச்சாரம் உலகறிந்த விஷயம். உலக்கை தேய்ந்து உளிப்பிடியானமாதிரி எட்டுப்பேர்தான் அந்தக் கட்சியில் இப்போது பார்லிமெண்டில் ஒட்டிக் கொண்டிருக்கின்றனர். இந்த டட்லியைப் பற்றிக் குழந்தைப் பிள்ளையும் அறியும். அன்று யூ. என். பி. கட்சியையே பிய்த்துக்கொண்டு வெளியேறி வீட்டில் ஓய்வெடுத்தார். அதே டட்லிக்கு இன்று ஞானோதயம் பிறந்துவிட்டது. மீண்டும் அரசியல் அரங்கில் தோன்றி வேஷம் போடப் பார்க்கின்றார்" என்றேன்.

"அப்படியென்றால் தமிழருக்கு ஏதும் நன்மை கிடைக்குமா?" என்றார் பணிஸ் மணியம்.

"அந்தப் பேச்சுக்கே இடமில்லை என்று யூ. என். பி. கட்சியைச் சேர்ந்த திரு. எம். டி. பண்டா தமிழர் ஒருவரிடம் கூறினாராம். சமீபத்தில் காலியிலே யூ. என். பி.யின் மாபெருங் கூட்டம் ஒன்று நடந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யூ. என். பி. போட்டியிடப் போவதில்லையென அக் கூட்டத்தில் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள். களனி மாநாட்டிலேயே தமிழ்மொழிக்குத் தலை முழுக்கிட்ட கட்சியிடமிருந்து தமிழர் ஒரு சொட்டு நன்மையையும் இனி எதிர் பார்க்கவே முடியாது" என்றேன்.

"நான் ஒரு விஷயம் கொழும்பிலே கேள்விப்பட்டேன். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அடுத்த தேர்தலுக்கு சுயேச்சை வாதிகள் போட்டியிடப் போகின்றனராம். யார் கண்டது; இந்தச் சுயேச்சைப் பேர்வழிகளுக்கு யூ. என். பியின் ஆதரவு மறைமுகமாகக் கிடைக்கக் கூடும். தற்செயலாக இவர்களில் அநேகர் வெற்றி பெற்றுவிட்டால் யூ. என். பியுடன் சேர்ந்துவிடுவார்கள் என்ற பேச்சு இப்போதே அடிபடத் தொடங்கி விட்டது" என்றார் பணிஸ் மணியம்.

"நீர் சொல்வதைக் கேட்டால் யூ. என். பிதான் இந்தச் சுயேச்சையாளர்களுக்குப் பணத்தை வாரி இறைக்கப் போகின்றது போல் எனக்குத்தோன்றுகின்றது" என்றேன் நான்.

"சரியாய்ச் சொன்னீர். அந்தப் பேச்சும் இப்போதே காதுக்கு எட்டி விட்டது. கதையோடு கதையாக இந்த யூ. என். பிக்கு ஏதேனும் புதிய திட்டம் உண்டா" என்றார் பணிஸ் மணியம்.

"இப்போதுதான் விஷயத்துக்கு வந்திருக்கின்றீர். சொல்லுகின்றேன் கேளும்! இலங்கை மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டுமென்ற எண்ணம் யூ. என். பிக்குக் கனவிலும் இல்லை. ஏதோ எம். ஈ. பியைத் தள்ளி வீழ்த்திவிட்டு ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றுவதுதான் யூ. என். பியின் நோக்கம். குடிபோன பெருங்காய டப்பா போன்றது இந்த யூ. என். பி கட்சி. புதுமையாகச் சிந்தித்து நாட்டுக்கு நல்ல காரியங்கள் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இலங்கையிலுள்ள ஒரு சில அரசியற் கட்சிகளிடம் மருந்துக்குமில்லை. நாட்டின் பொருளாதாரத்தை எப்படிச் சீர்பெறச் செய்யவேண்டும், கல்வி, கைத்தொழில் என்பன விருத்தியடைவதற்குக் கையாள வேண்டிய மார்க்கங்கள் என்ன, இவைபற்றி எந்த அரசியற் கட்சிகளும் சிந்திப்பதே கிடையாது. அவர்களின் நோக்கம் . எல்லாம் எப்படித் தேர்தலில் வெற்றி பெறலாம் என்பதேயாகும்" என்று நான் சொல்லி முடிக்க முன்னர் ஆடுகால் சுப்பர் இருமிக்கொண்டே குறைச் சுருட்டுடன் திண்ணையில் வந்து குந்தினார்.

"எடே! பணிஸ் மணியம் நீ எப்ப வந்தது. இனி எங்கள் பாடு தேவையில்லை. அரசியல் வறுவலும் காரசாரமாகத்தான் இருக்கும். ஒரு நிமிஷம் மதவடிக்குப் போகலாம். மாங்கண்டு கந்தையாவையும் அங்கே சந்திக்கலாம். கன விஷயம் பேசவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே ஆடுகால் சுப்பர் குறைச் சுருட்டை வாசற்படியில் வைத்துவிட்டு எழுந்து சென்றார்.

பணிஸ் மணியமும் நானும் பழைய பத்திரிகைகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிக் கோறகாலியில் வைத்துவிட்டு ஆடுகால் சுப்பரைப் பின் தொடர்ந்தோம்.

* * *

ஆடுகால் சுப்பர், பணிஸ் மணியம், மாங்கண்டு கந்தையா போன்றவர்கள் வீட்டுக்கு வராதுபோனால்அரசியல் 'வறுவல்' கனவாய்ப் பழங்கதையாய்ப் போய்விடும். இவர்களின் சந்திப்பு அடுத்த வாரம் பந்திக்கு வரும். —சோணாசலம்

# இந்தியா-சீன உறவு சீரடையுமா?
## சிந்துநதி நீர்த்தகராறு விரைவில் தீரும்

**இந்தியா**

திபேத்தில் புரட்சி ஏற்பட்டு தலாய் லாமா இந்தியாவில் தஞ்சம் புகுந்தகாலம்தொட்டு இந்தியா—சீன உறவு சீர்குலைந்த நிலையில் இருந்துவருகின்றது. சீனப் பத்திரிகைகள் இந்தியாவையும் இந்திய மக்களையும் ஏகாதிபத்தியவாதிகள் எனக் கண்டித்துவருவதை ஆட்சேபித்து இந்திய அரசாங்கம் சீன அரசாங்கத்துக்கு ஓர் அறிக்கை அனுப்பியிருப்பதாகப் பிரதமர் நேரு லோகசபையில் தெரிவித்திருக்கிறார். திபேத்தில் வசித்துவரும் இந்திய வியாபாரிகளுக்கும் இந்திய மக்களுக்கும் இருந்துவந்த சலுகைகளை திபேத்திலுள்ள புதிய அரசாங்கம் கட்டுப்படுத்துவதை ஆட்சேபித்து இந்திய அரசாங்கம் சீன அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்திருக்கும் மகஜருக்கு மூன்றுவாரகாலமாகியும் ஒரு பதிலும் கிடைக்கவில்லை.

### விந்தையான கூற்று

இவ்வேளையில் புது டில்லியிலுள்ள சீனத் தூதுவரும் ஓய்வு பெற்று, சீனத்தில்இருக்கிறார். திபேத்தில் வசித்துவரும் லடாக்கி மக்கள் இந்தியப் பிரஜைகள். இவர்கள் திபேத்திய பிரஜைகள் என அரசாங்கம் கூறிவருவது விந்தையாக இருக்கிறது. லடாக்கி மக்களுள் பலர் பௌத்தர்கள்; சிலர் முஸ்லிம்கள். திபேத்தில் சீன ஆதிக்கம் ஏற்படுவதற்கு முன்பு இவர்கள் சுதந்திரமாகச் சென்று திரும்பக்கூடியதாக இருந்தது. இப்பொழுது கையாளப்படும் நடவடிக்கைகள் திபேத்து—இந்திய எல்லையை மூடுவதே நோக்கமாக இருக்கின்றது எனத் தோன்றுகிறது. திபேத்தில் சீனப்படைகள் ஏராளமாக இருப்பதால் நேபாளம், சிக்கீம், லடாக் ஆகிய நாடுகளுக்கு ஆபத்து எச்சமயத்திலும் ஏற்படக்கூடும். சீனத்தில் பிரசுரிக்கப்படும் படங்களில் இந்தியாவைச்சேர்ந்த சில பாகங்கள் சீனத்தைச் சேர்ந்ததாகக் காட்டப்படுகின்றது. இதனால் இந்தியா—சீன எல்லைகள் திடமாக நிர்ணயிக்கப்படவேண்டியதும் அத்தியாவசியம்.

### பல சிக்கல்கள்

இந்தியா—சீன நல்லுறவுகளைப் பாதித்துவரும் பல சிக்கல்களையும் தீர்த்துவைப்பதற்கு சீன அரசாங்கம் மௌனம் சாதித்து நிலைமையை மேலும் மோசமாக்காமல், ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

ஐக்கிய நாடுகள் தாபனத்தில் சீனத்தை உறுப்பு நாடாக்குவதற்கு, அடுத்த மாதம் ஆரம்பமாகும் பொதுச்சபை மாநாட்டில் இந்தியா மீண்டும் முயற்சிக்கப்போகின்றது. என்னே! இந்தியாவின் பெருந்தன்மை!

### சிந்துநதி நீர்த் தகராறு

சிந்துநதி நீர்ப் பங்கீடுபற்றி இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே ஏறத்தாழ 12 வருடங்களாக நிலவிவந்த தகராறு உலக வங்கியின் முயற்சியினால் விரைவில்தீர்த்து வைக்கப்படும் எனத் தெரிகிறது. இந்தியா, பாகிஸ்தான் பிரதிநிதிகளுக்கும் உலக வங்கி அதிகாரிகளுக்குமிடையே லண்டன் மாநகரில் ஆலோசனைகள் நடைபெறுகின்றன. அடுத்த வருட ஆரம்பத்தில் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். 35 கோடி பவுண் செலவில் 10 வருட காலத்தில் புதிய அணைகளும் கால்வாய்களும் அமைப்பதற்கு இந்த ஒப்பந்தம் வகை செய்யும். பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மேற்கு ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகள் நிதி உதவிபுரிய முன்வரும் எனத் தெரிகிறது.

(5ஆம் கலம் பார்க்க)

# ஈழத்தின் இயற்கைக் காட்சிகள்

★

## 'போட்டோ' அழகுப்போட்டி: மூன்று பரிசுகள்

இலங்கையின் இயற்கை அழகு உலகப் புகழ் பெற்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மலைநாடு உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் இயற்கை அன்னையின் வனப்புக்கள் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்து ஈழ நாட்டுக்குப் பெருமை அளிக்கின்றன.

நீங்கள் விரும்பும் அழகுக் காட்சிகளைப் படம் பிடித்து **கலைப்பகுதி, ஈழநாடு, தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.** என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

இப்படங்களில் தரமானவற்றை அவ்வப்போது 'ஈழநாடு' இதழ்களில் பிரசுரித்து, சன்மானம் அளிப்போம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிரசுரமான படங்களைத் தொகுத்து, அவற்றுள் மிகச் சிறந்த மூன்று போட்டோக்களை கலைவல்லுனர் மூவர் அடங்கிய குழு தெரிந்தெடுப்பார்கள். இவற்றுக்கு முறையே ரூ 50, ரூ 25, ரூ **15** என மூன்று பரிசுகளை **ஈழநாடு** அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

★ போட்டோவின் அளவு, 6" X 4"
★ முடிவு திகதி 31-12-59

படங்களுடன் அதுபற்றிய குறிப்பும் அனுப்பப்படவேண்டும். படம் அனுப்புபவரின் பெயரும் விலாசமும் கடதாசியில் தெளிவாக எழுதிப் படத்துடன் இணைத்தல் வேண்டும்.

**கலாநிலையப்பதிப்பகம்**
**யாழ்ப்பாணம்**

# பூஜ்யம் தபால்

எலிஸபெத் மகாராணியார்,
பக்கிங்காம் அரண்மனை,
லண்டன்.

மகாராணியாரே!

தங்களுக்கு மற்றோர் குழந்தை பிறக்கவிருப்பதைக் கேட்க மகிழ்ச்சி.

பிறக்கும்குழந்தைக்கு தமிழ்ப் பெயர் வைக்க வேண்டுமென்று ஒரு யோசனை கூறப்படுகிறது. "கானா" என்று வைக்க வேண்டுமென்பது மற்றொரு யோசனை. இன்னும் எவ்வளவு யோசனைகள் வருமோ?

தாங்கள் மேற்கு ஆபிரிக்காவிலுள்ள சுதந்திர கானா நாட்டுக்கு விஜயம் செய்யாவிட்டாலும் அப்பெயர் வைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். கானாவின் பிரதமரான க்ருமாவைத் தாங்கள் பிரிவி கவுன்ஸிலராக்கியதுடன், கறுப்பரான அவருடனே தாங்கள் சற்றும் கூச்சமில்லாமல் அரண்மனைத் தோட்டத்தில் நடந்து சென்ற படத்தைப் பார்த்தேன். வெள்ளை வர்ண விஷமிகள் என்ன நினைப்பார்களோ? இதைப்பற்றி கவலைப்படாமல், நிற வேற்றுமைகளை தகர்த்தெறிவதற்காக தங்களைப் பாராட்டுகின்றேன். தாங்கள் கானாவுக்கு விஜயம் செய்திருந்தால் ஆபிரிக்காவில் வர்ண துவேசம் ஒரு வேளை குறைந்திருக்கும். தங்களுக்குப் பிறக்கவிருக்கும் குழந்தைக்கு "கானா" என்று பெயரிடுவதில் எனக்கு ஆட்சேபமில்லை.

இப்படிக்கு
"பூஜ்யம்"

**குறிப்பு :**
கொழும்பில் தங்கள் பெயரால் ஒரு குதிரைப் பந்தயத்தை நடத்தவேண்டுமென்று ஒரு புதிய யோசனை கிளம்பியுள்ளதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். குதிரைப் பந்தயம் ஒரு சூதாட்டம் என்றும் அதற்கு கவர்னர் ஜெனரல் ஆதரவளிக்கக் கூடாதென்றும், மந்திரி கூறியதற்கிணங்க 'கவர்னர் ஜெனரல்கப்' நிறுத்தப்பட்டுவிட்டது. இந்நிலையில் தங்கள் பெயரால் "குவீன்ஸ் கப்" என்று ஒரு பந்தயம் நடத்தலாமென்ற யோசனை தங்களை ஒரு எக்கச் சக்கமான நிலையில் சிக்கவைப்பதாகும். இதற்கு தாங்கள் சம்மதம் அளிக்கமாட்டீர்கள் என்றே நம்புகிறேன்.

—பூஜ்யம்.

(4ஆம் கலத் தொடர்ச்சி)

### கல்கத்தாவில் எதிர்ப்பு இயக்கம்

மேற்கு வங்காள அரசாங்கத்தின் உணவுக் கொள்கையை எதிர்த்து பிரஜா சோஷலிஸ்ட் கட்சி நீங்கலாக ஏனைய இடதுசாரிக் கட்சிகள் ஓர் இயக்கத்தை ஆரம்பித்திருக்கின்றன. உணவுப் பொருள்களின் விலைகள் ஏறிவருவதையும், உணவுப்பொருள்களைப் பதுக்கி வைத்துக் கொள்ளை இலாபம் அடிப்பவர்களையும் இவ்வியக்கத்தவர் எதிர்க்கின்றனர். அரசாங்கத்தின் தடை உத்தரவுகளை மீறியதனால் சென்ற திங்கட்கிழமை 80 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 17 பேர் எதிர்க்கட்சிச் சட்டசபை உறுப்பினர்கள்.

### உத்தர பிரதேசத்தில் அரசியல் நெருக்கடி

உத்தரபிரதேச இராச்சியத்திலுள்ள எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் இராச்சியத்தின் காங்கிரஸ் அரசாங்கம் ராஜிநாமா செய்யவேண்டும் என ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கின்றனர். காங்கிரசைச் சேர்ந்த 98 காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் இராச்சிய மந்திரிசபையை எதிர்த்து வாக்களித்திருப்பதே பிரதான காரணமாக வற்புறுத்தப்படுகிறது.

(15ஆம் பக்கம் பார்க்க)

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு ஆவணி மீ 6உ (22-8-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna.
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

இன்று எட்டியாந்தோட்டையிலே அஸீஸ் அவர்கள் தலைமையிற் கூடும் இலங்கை ஜனநாயக காங்கிரஸின் பொறுப்பும் கடமையும் சுலபமானவையன்று.

இருபது ஆண்டுகளுக்கு முன்பாக நேருஜி இலங்கை வந்து, இலங்கை இந்தியர் காங்கிரஸை ஆரம்பித்து வைத்தார். பிரிந்திருந்த இந்திய வம்சாவழியினரை ஒரே ஸ்தாபனத்தின் கீழ் ஒன்றுபடுத்தினர். முன்னர் அடிமைகள் போல் இருந்து வந்த இந்திய தோட்டத் தொழிலாளர், இ. இ. காங்கிரஸ் ஏற்பட்ட பின் புத்துணர்ச்சி பெற்று தலைநிமிர்ந்தனர். பார்லிமெண்டுக்கு எட்டு பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்பினர்.

நாடு விடுதலை அடைந்த பின் இலங்கை இந்தியர் காங்கிரஸின் பெயர், இலங்கை ஜனநாயக காங்கிரஸ் என்று மாறியது. சோதனைகள் அதிகரித்தன. வாக்குரிமை பறிக்கப்பட்டு, அம்மக்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர். ஒரு பிரதிநிதியும் அவர்களுக்குப் பார்லிமெண்டில் இல்லை.

இதே சமயம் தலைவர்களுக்குள்ளும் வேற்றுமைகள் பெருகி, காங்கிரஸ் இரண்டுபட்டது. இதனால் அந்த ஸ்தாபனத்தின் மதிப்பும் செல்வாக்கும் குறைந்தது. இது ஒருபுறமிருக்க, காங்கிரஸ் போட்டா போட்டிகள் அதிகரித்தன. தோட்டங்களிலே பலாத்கார சம்பவங்களும், வழக்குகளும் பெருகிவிட்டன. மற்றொருபுறம் வேலையில்லாக் கஷ்டம். இப்படியாக, மலை நாட்டிலுள்ள தமிழர் நிலை பொதுவாக பரிதாபமாகியுள்ளது. தேர்தல் நெருங்க நெருங்க துவேஷப் பிரசாரங்களும் அதிகரித்து, அவர்களுக்கு எதிர்காலம் பற்றிக் கவலை அறிவித்துள்ளது.

இந்த நிலையை மாற்றி அவர்களுக்கு மனித நீதி கிடைக்கவும், புது நம்பிக்கை அளிக்கவும் வேண்டும். இந்தக்கடமையும், பொறுப்பும் அவர்களுக்குச் சேவை செய்வதாகக் கூறும் ஸ்தாபனங்களையே சேரும். இந்த வகையில் எட்டியாந்தோட்டை மாநாடு என்ன செய்யப் போகிறதென்பதே கேள்வி.

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வே, ஒற்றுமைநீங்கில் அனைவர்க்கும் தாழ்வே' என்றுஅமர கவி பாரதியார் பாடியதை, இச்சமயம் மலைநாட்டுத் தமிழர் ஸ்தாபனங்கள் ஒரு மந்திரமாகக்கொள்ளவேண்டும். கருத்து வேற்றுமைகளும், சிறு சிறு குறைகளும் யாருக்கும் உண்டு. தவறுகளை மறந்து, தலைவர்கள் மலைநாட்டுத் தமிழரின் மேலான நன்மையை முன்னிட்டு ஒன்றுபட வேண்டிய சமயம் வந்துவிட்டது. இ. ஜ. காங்கிரஸ் ஸ்தாபனங்கள் இரண்டும் இதனை உணர்ந்து வருவதாகவும் இதற்கானமுயற்சிகள் நடப்பதாகவும் அறிகிறோம். இம்முயற்சிகள் வெற்றிபெற்று, ஸ்தாபனம் மீண்டும் ஒன்றுபட்டால் மலை நாட்டுத் தமிழர் மீண்டும் புத்துணர்ச்சிபெற்று தலைதூக்கவும், அவர்களைப் பிறர் மதிக்கவும், அவர்களதுஉரிமைப்போர் வெற்றிபெறவும் வழி பிறக்கும்.

பிரிவுபட்டிருப்பினும் இன்று இலங்கையில் கட்டுப்பாடாக இயங்கும் பெரிய தொழிற் சங்கங்கள் தொண்டமான் தலைமையிலுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், அஸிஸ் தலைமை வகிக்கும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸும் தான். நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்புபோலுள்ள தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள மலை நாட்டுத் தொழிலாளர் மீண்டும் ஒன்றுபட்டு, கட்டுப்பாடாக முனைந்தால், எந்தச் சக்தியும் அவர்களது நியாயமான உரிமைகளை மறுக்க முடியாது.

---

## பொறுப்புள்ள தீர்மானம்

மொழிவிஷயமாக ஆத்திரமூட்டக்கூடிய பல காரியங்கள் நடைபெற்றாலும், யாழ்ப்பாணத்தில் கூடிய சமஷ்டிக் கட்சியின் காரியசபையினர், அவசரப்பட்டு நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட முன்வரவில்லை. நிதான புத்தி காட்டி, பொறுமையுடன் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது வரவேற்கத்தக்கது. என்னென்ன அநீதிகள் நடைபெறுகின்றனவென்பதையும், இதுபற்றித் தங்கள் உணர்ச்சிகளையும் தெரிவித்ததுடன் மற்றவர்களுடன் கலந்து வாழும் தமிழர்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படக் கூடாதென்பதுபற்றியும் கவலை காட்டியிருக்கிறார்கள்.

தமிழ்ப்பகுதிகளில் கச்சேரிகளிலே தனிச் சிங்களத்தைப் புகுத்தும் முயற்சிகளை எதிர்க்க, கேரளத்தில் செய்ததுபோல், கச்சேரிகள் முன் மறியல் முதலியவை நடத்தவேண்டுமென்று சில வட்டாரங்களில் யோசனை கூறப்பட்டது. அவ்வித நேரடி நடவடிக்கைகளை எடுத்தால், அல்லது எடுப்பதாக ஒரு தீர்மானமும் செய்திருந்தால், மற்ற இடங்களிலே எந்தக் காரியாலயத்திலும் ஒரு தமிழரும் நிம்மதியாக வேலைசெய்ய முடியுமா என்பது சந்தேகம். சென்ற வருஷ கலக வெறி ஆட்டங்களை மீண்டும் நடத்தச் சிலர்காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆபத்தை உணர்ந்து, சென்ற வருஷ அனுபவத்தை மறக்காமல், பொறுப்புடனே சமஷ்டிக் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மொழிவிஷயமாக, உரிமைகள் படிப்படியாகப் பறிபோகையில், கைகட்டிக்கொண்டு சும்மா இருப்பதா? என்று கேட்கலாம். இது கூடாதுதான். ஆனால் இதற்காக முன்பின் யோசியாமல் கண்களை மூடிக்கொண்டு, ஏதாவது நடவடிக்கை எடுத்தால், தமிழருக்கு நன்மை ஏற்படுவதற்குப் பதில், புதிய சங்கடங்கள் ஏற்படக்கூடும். நன்மைசெய்ய முடியாவிடில் புதிய தீங்காவது ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது பொறுப்புள்ளவர்கள் கடமை.

இவ்விஷயங்கள் பற்றி பிரதமருடன் சமஷ்டிக்கட்சித் தலைவர்கள், நேரில் கலந்து பேச முற்பட்டது விவேகமான செயல். முன்னர் இருசாரினரும் நேரில் பேசியதின் பயனாக, ஒரு சமரசம் தற்காலிகமாகவாவது ஏற்பட்டது. அந்த ஒப்பந்தம்முறிந்தது துரதிர்ஷ்டவசமாகும். மீண்டும் அவ்வித தவறுகள் ஏற்படாமல், இச்சந்தர்ப்பத்தை பிரதமர் நல்லபடியாகப் பயன்படுத்திக் கொள்வாரென்றே நம்புவோம். அவரது கட்சியிலிருந்து மொழி வெறியர்கள் பலர் வெளியேறியுள்ளதும், தீவிர கருத்து வேற்றுமைக்கான காரியங்களைத்தாம் செய்யப்போவதில்லை என்று அவர் அறிவித்துள்ளதும் அவரது நண்பரான இந்தியப் பிரதமர் சமீபத்திற் காட்டியுள்ள வழியும் இந்த நம்பிக்கையைப் பலப்படுத்துகின்றன.

---

## ஏழை வீட்டுக் குழந்தைகள்

பெற்றோர்களின் ஏழ்மை காரணமாக, எல்பிடியா கிராமத்தில் நான்கு சின்னக் குழந்தைகள் நல்ல உணவில்லாமல் பட்டினியால் செத்துவிட்ட பரிதாபச் செய்தி வெளியாகியுள்ளது. இவ்விதம் வெளிவராமல் எவ்வளவு ஏழை வீட்டுக் குழந்தைகள் இறக்கின்றார்களோ தெரியவில்லை. ஏழ்மையால் சில குழந்தைகள் மாளுவதுடன், சுகம் கெட்டு பல குழந்தைகள் இளைத்துப் போய் சங்கடப்படுவது பலரும் அறிந்தது.

ஆஸ்பத்திரியில் இறந்து போன நான்கு குழந்தைகளில் மூன்றுக்கு நான்கு வயது. மற்றொன்றுக்கு ஏழு மாதம். வளரும் இளம் வயதில் நல்ல உணவு மிகவும் அவசியம். இவ்விதம் உணவில்லாமல் குழந்தைகள் மாள நேரிட்டது பரிதாபமென்றும், அரசாங்கம் இதைக் கவனிக்கவேண்டுமென்றும் மரண விசாரணை நடாத்தியஅதிகாரி குறிப்பிட்டுள்ளார். இவ்விஷயமாக இந்த அரசாங்கம் உருப்படியாக எதுவும் செய்ய முடியுமா? என்பது சந்தேகம். கேட்டால், குழந்தைகளுக்கு இலவசப் பால் கொடுக்கும் திட்டத்தை நடாத்திவருவதாகவும் இதற்கு அதிக பணம் செலவிடப்படுவதாகவும் அரசாங்கம் சமாதானம் கூறலாம். ஆனால் குழந்தைகள் பட்டினியால் இறந்துள்ளதிலிருந்தே, இலவசப் பால் திட்டம் சரிவர நடைபெறவில்லை என்பது நிரூபணமாகும். மேலும் அத்திட்டத்துக்குச் செலவிடப்படும் பணத்தில் பெரும்பகுதி, வினியோகச் செலவுக்கே போகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டன் முதலிய நாடுகளில், ஒரு குழந்தைக்கு மேலுள்ள குடும்பங்களுக்கு, அரசாங்கம் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் 15 வயதுவரை வாராவாரம் உதவிப் பணத்தைத் தாயாரிடம் கொடுத்து வருகின்றது. இதனால் குழந்தைகள் பட்டினியால் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுகின்றன. இலங்கையில் அவ்விதம் உதவிப்பணம் அளிக்கப் போதிய பணமில்லை என்று அரசாங்கம் பல்லவி பாடக்கூடும். என்றாலும் இது மிக முக்கியமானபிரச்சினை. நாட்டின் எதிர்கால பிரஜைகளைப் பற்றியது. பொதுமக்களுக்கும் இதில் அதிக பொறுப்புண்டு. சமூகசேவை ஸ்தாபனங்களும் சமய ஸ்தாபனங்களும் இதில் கவனம் செலுத்தி, ஒவ்வொரு ஊரிலும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச உணவுக்கு ஏற்பாடு செய்தால், இந்தப் பிரச்சினை வெகுவாகத் தீரும். பொதுமக்களிடை தர்மகுணம் உண்டு. தக்கவர்கள் சிறப்பாகத் தாய்மார்கள் முன்வந்து இந்த முக்கிய சேவையில் ஈடுபட்டால், இந்தப் பணி வெற்றி பெறுவதுடன், நாட்டின் நன்றிக்கும் அவர்கள் பாத்திரமாவார்கள்.

---

## நல்லுறவு குலையக்கூடாது

இந்தியாவும் சீனமும் பழம் பெரும் நாடுகள். இந்நாடுகளுக்கிடையே பண்டு தொட்டே நட்புறவு நிலைத்து வருகின்றது. திபேத் பிணக்கு இந்த நல்லுறவைப் பாதிக்கச் செய்யுமாயின் இது ஆசிய நாடுகளுக்கே ஆபத்தாக முடியும்.

பொதுவுடைமைச் சீனத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் இந்தியாவுக்கு எதிராக எழுதிவருவதைக் கவனிக்கும்போது செஞ் சீனத்திற் பொதுவாக நிலவிவரும் கருத்தையே அப்பத்திரிகைகள் பிரதிபலிக்கின்றனவென்பது நன்கு புலனாகின்றது. அத்துடன் லோக சபையில் பொதுவுடைமைச் சீனம்பற்றி நடைபெற்ற விவாதமும் இரு நாடுகளுக்குமிடையே கருத்து வேற்றுமை எழுந்துள்ளதென்பதையே விளக்கிக்காட்டுகின்றது. இந்நாடுகளுக்கிடையே ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நிலவிவந்த நல்லுறவு இந்நாட்களிற் பாதிக்கப்படுவது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல.

திபேத் சம்பந்தமாக இந்தியா நீதியை எடுத்துக் கூறிவிட்டதே என்ற காரணத்துக்காகச் செஞ் சீனம் எதற்காகச் சினக்க வேண்டும். உலக விவகாரங்களில் எல்லாம், இந்தியா என்றுமே நீதியையே எடுத்துரைத்து வந்துள்ளது. இதுகாரணமாக மேனாடுகளுக்கும் இந்தியாவுக்குமிடையே ஏற்பட்டுள்ள நல்லுறவு எதுவிதத்திலும் குறையவில்லை. இந்தியாவுக்குரிய நிலப்பகுதிகளைச் சீனம் தனது படத்திற் சேர்த்திருப்பது இந்திய மக்களிடையே அச்சத்தை உண்டாக்கியுள்ளது. லடாக் பூடான் போன்ற பகுதிகளையும் செஞ் சீனம் என்றோ ஒருநாள் கைப்பற்றக்கூடும் என்ற பயமும் இந்தியாவுக்கு ஏற்படுவது இயற்கையே. பொதுவுடைமைச் சீனம் இச்சந்தேகங்களை நீக்கி மீண்டும் இருநாடுகளுக்கிடையே நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளம்பெறச் செய்வதே விரும்பத்தக்கது.

---

## மலைநாட்டு குடும்பக் கதை

அருணாசல வடிவு, இலங்கை மலைநாட்டிலே தோட்டத்தில் வேலை செய்யும் ஒரு தமிழ்ப் பெண். மலை நாட்டிலே பிறந்த மலை மங்கையாம் அவள். எவ்வளவு அழகான பெயர்!

அவள் புருஷன் சின்னையாவுக்கு வயது 45 இருக்கும். தமிழன் என்ற காரணத்தால் தோட்டவேலை போயிற்று. குடியிருக்கவும் இடமில்லை. ஏழு குழந்தைகள். அக்குடும்பத்தை வடிவு நடாத்திவரும் கதையை சின்னையா சொன்னார், நீங்களும் கேளுங்கள்.

“நான் திருநெல்வேலி ஜில்லா. 5 மாதக் குழந்தையாக இருக்கும்போதே என் ஐயா இங்கு என்னைக் கொண்டு வந்துவிட்டார். பத்து வருட காலம் ஒரு தோட்டத்தில் வேலை பார்த்தேன். பிறகு நாளடைவிலே ஒரு தோட்டத்தில் வேலைக்குப் போனேன். அங்கு கல்யாணம் செய்தேன்.

மாதம் எண்பது ரூபாய் சம்பாதித்தேன். அவள் நூறு ரூபாய் சம்பாதிப்பாள். நான் குடி, சூதாட்டம் இதில் பணத்தைத் தொலைத்துவிட்டேன். அவள் கழுத்தில், காதில் இருந்ததையும் பிடுங்கிக் குடித்துவிட்டேன். தோட்டம் கைமாறியது. துண்டு போட்டார்கள். ஒரு துண்டிலிருந்து வேலை செய்கையில், குழப்பம் வந்தது. “தமிழன் வேண்டாம்” என்று சொல்லி புதிய துரை எங்களுக்குப் பற்றுச் சீட்டு கொடுத்துவிட்டார்.

“காங்கிரஸுக்கு முறையிட்டோம். ஒரு பேச்சு மூச்சுமில்லை. பலிவாங்கிக் கொண்டுவிட்டீர்களோ என்னவோ!

என் மனைவி இப்போது சிங்கள கிராமத்தில் வேலை பார்த்து, நாளுக்கு ஒண்ணு ஒண்ணரை சம்பாதிக்கிறாள். மூத்த மகன் இங்கிரியாவிலே ஒரு கடையில் வேலை பார்க்கிறான். அடுத்த பையன் கொழும்பிலே ஒரு பங்களாவில் வேலை. எனக்கு இடது கை, கத்தி பட்டு, உதவாது, வேலையில்லை, இப்படி நாளை ஓட்டிவருகிறோம். அவள் வீட்டுவேலையையும் பார்த்துக்கொண்டு வெளியில் சென்றும் “அத்தைக் கூலி” வேலை செய்து, கஞ்சி காய்ச்சி ஊற்றுகிறாள். வேலையில் “கெட்டிக்காரி” என்று தன் மனைவியைப்பற்றிப் பெருமையாகச் சொன்னார். எனக்கும் இதைக் கேட்கப் பெருமையாக இருந்தது.

“இப்போதும், குடிப்பதுண்டா?” என்று கேட்டேன். சூதாட்டம் எல்லாம் முன்பே விட்டுவிட்டாராம். காங்கிரஸ் வந்து, சூதாட்டத்தை நிறுத்திப் போட்டதாம். அது குடிக்கக்கூடாதென்று சொல்லியும், சிலர் குடிப்பதாயும் தெரிவித்தார்.

“காங்கிரஸ் வேண்டுமா? வேண்டாமா?” என்று கேட்டேன்.

“அது வேண்டும் தான். அது தான் எங்களுக்குக் கடவுள் மாதிரி. அது மட்டும் இல்லாவிட்டால், எங்கள் பாடு அதிக சங்கடமாகிவிடும். ஆனால் தோட்டத்தில் இரண்டு காங்கிரஸ் இருப்பதால் சண்டை அடிக்கடி மூளுகிறது. எல்லாம் ஒரே காங்கிரஸாக இருந்தால் எவ்வளவோ நல்லது” என்றார்.

இந்தியா திரும்ப இஷ்டமா? என்றேன். “போக இஷ்டந்தான். ஆனால் அங்கு பிழைப்பு இல்லை. என் பெண்சாதி வடிவும், பிள்ளைகளும் அங்கு வர மாட்டார்கள்” என்றார்.

—ஐயாறன்.

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

'என்ன, காணிவல் பார்த்துவிட்டு வருகின்றீரா' என்றார் நண்பர்.

'யாழ் விநோதக் காணிவல் நடைபெற்ற இடத்தில் இப்போது மீண்டும் புல் முளைத்துவிட்டது. நீர் ஏதோ கனவு உலகிற் சஞ்சரிக்கின்றீர் போலும்' என்றார் மற்றவர்.

'அந்த காணிவலைப் பற்றி நான் சொல்ல வரவில்லை. நல்லூரில் நடைபெறும் காணிவலைப்பற்றித்தான் உம்முடன் பேசுகின்றேன்'

'நல்லூரிலா? அங்கு காணிவல் ஏது? இப்போது அங்கு திருவிழாக்காலம். முருக பக்தர்கள் திருக் கூட்டம் அங்கு நாளும் பெருகிக்கொண்டிருக்கின்றதாமே!'

'நன்றாகச் சொன்னீர். நீர் ஒருமுறை நல்லூர்க்கந்தசுவாமி கோவிலுக்குப் போய்ப் பார்த்தால்தான் விஷயம் விளங்கும். சென்ற செவ்வாய்க் கிழமை பத்தாம் திருவிழா மஞ்சத்தில் கந்தன் பவனி வரும் காட்சியைப் பார்க்கலாமென்று அங்கு சென்றிருந்தேன். ஒரே ஜனக் கூட்டம். பெண்மணிகள் நவநாகரிக உடை அலங்காரத்துடன் அங்கு திரண்டு நின்ற காட்சியையும், ஆடவர்கள் விழுந்தடித்துக்கொண்டு ஜனத்திரளைக் கிழித்துச் சென்ற வேகத்தையும் பார்த்தேன். இறைவனே! உனது திருக்கோலத்தைப் பார்க்க இந்த மானிடர் இப்படியெல்லாம் வேஷம் தாங்க வேண்டுமா என்று எண்ணி ஏங்கினேன்!'

இப்படி இரு நண்பர்களும் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்ட எனக்கு இருண்டது விடிந்தது ஒன்றுமே தெரியவில்லை. 'நல்லூர்த் திருவிழாவாம்; அங்கு காணிவலாம்'. என்ற சொற்கள் உள்ளத்திற் புகுந்து அலைமோதின.

## உடுவிலுக்கு ஜே!

நல்லூர்த் திருவிழாவைப் பற்றிப் பேசும்போது புதிய தேர்தல் தொகுதிகளில் ஒன்றாகிய உடுவில் நினைவுக்கு வருகின்றது. சுன்னாகத் தொகுதியுடன் ஒட்டிக் கொண்டு தன்பாட்டிற் கிடந்த உடுவில் புதிய பொதுத்தேர்தலுடன் பிரிந்து நின்று அபேட்சகர்களின் போர்க்களமாக விளங்கப் போகின்றது. அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகளும் ஓர் இளைஞரும் இத் தொகுதியிற் போட்டியிடுவார்கள் எனத் தெரிகின்றது. தமிழரசுக் கட்சியின் அபிமானத்தைப் பெற்றுள்ள இந்த வாலிபர் அரசியல் தலைவர்களின் திருவிளையாடல்களை நன்கு அறிந்தவர். அத்துடன் கிராமச்சங்க அரசியல் துறையிலும் போதிய அனுபவம் பெற்றவர்.

## திரு. பொன்னம்பலம் என்ன செய்வார்?

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் இனி என்ன செய்வார் என்று அங்கலாய்க்காதவர் இலர். யாழ்ப்பாணத்திற் போட்டியிடும் எண்ணம் அவருக்கு இல்லையெனவும் பழையபடி பருத்தித்துறையையே அவர் புகலிடமாகக் கொள்வார் எனவும் தெரிகின்றது. கோப்பாய்த் தொகுதியிலும் அவருக்கு 'ஒரு கண்' என்று பலர் பேசிக் கொண்டாலும், திரு. பொன்னம்பலம் ஆழம் அறிந்துதான் கால் வைப்பார் என்பதை எவரும் அறிவர். எனவே அச்செய்தியை அப்படியே நம்பி விடமுடியாது. ஒருவேளை 'பெரிய புள்ளி' ஒன்றைக் கோப்பாயிற் போட்டியிடச் செய்து தமது நோக்கத்தை நிறைவேற்ற முயற்சிக்கக் கூடும். இத்தனைக்கும் திரு. பொன்னம்பலத்தின் எதிர்காலத் திட்டங்கள் எல்லாம் பரம இரகசியமாகவே இருந்து வருவதாக அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் கூறிக் கொள்ளுகின்றனர்.

## கலங்க வேண்டாம்

"நேர்மைக்கு விரோதமாக நீங்கள் நடந்து கொள்வதால் சிங்கள மக்களுக்கே இழுக்கைத் தேடுகிறீர்கள். தமிழ் பேசும் மக்கள் நெருப்பையும் கடப்பர்; உத்தமராவர். இதனால் அமரத்துவம் அடைவர்; கலங்க வேண்டாம்.".

இதென்ன இருந்தாற்போலிருந்து பதுமன் நல்லுபதேசம் செய்யத் தொடங்கிவிட்டாரே என வாசகர்கள் எண்ணவேண்டியதில்லை. ஊருக்கு உபதேசம் செய்யக் கிளம்புபவர்கள் முதலில் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும். ஆனபடியால்தான் நான் இந்த மாதிரி உபதேசம் செய்ய முற்படுவதில்லை. எனினும் உத்தமர்களின் மணிமொழிகளை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதில் தவறு எதுவுமில்லையல்லவா? இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மணிவாசகம் யாருடையதென நீங்கள் அறிய ஆசைப்படுகின்றீர்கள். அரசியல் நாடி ஓட்டங்களைப் பார்த்தறியும் பண்டிதர் ஒருவரான டக்டர் நாகநாதன் பிரதமர் பண்டாரநாயக்காவை சிங்கள ஸ்ரீ பற்றிச் சந்தித்துப் பேசியபோதுதான் நேர்மையின் அவசியத்தைப் பற்றி அவருக்கு உபதேசித்திருந்தார்.

# தொழிற் சங்கங்களிடையே

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடற்றவர் இந்தியப் பிரஜைகளாகப் பதிவுசெய்ய 'சில் தூண்டுதல்கள்' அளிக்கப் போவதாகக் கூறினர். நீண்டகால விஸா கொடுத்து 55 வயதில் சில உதவித்தொகை அளித்து அனுப்ப உத்தேசம் போலும். இதை வரவேற்கிறோம். ஆனால் மலைநாட்டில் பெரும் பாலோர் இங்குதான் இருப்பர். அவர்கள் கதி என்ன? அவர்கள் அரசியல் அனாதைகளாக எவ்வளவு காலம் இருக்க வேண்டும்? இதற்கு ஒரு காலவரையறையேனும் வேண்டும்.

பின்னர் திரு. அஸீஸ், தோட்டங்களில் மட்டுமன்றி வெளியிலும், தொழிலாளரின் புதல்வர்களுக்கு வேலைக்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென்றும், குடியேற்றத் திட்டங்களை அவர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும், கல்வி, சுகாதாரம், முதலிய சங்கடங்களை நீக்கவேண்டுமென்றும், தோட்டங்களில் பிரவேச உரிமை வேண்டுமென்றும் கூறி, தொகுதி நிர்ணய கமிஷன், இம் மக்களுக்கான பார்லிமெண்ட் பிரதிநிதித்துவத்துக்குத் தக்கவழி வகுக்கவில்லை என்றும் கூறி பத்து வருஷ திட்டத்தையும் குறை கூறினர்.

## நிகழ்ச்சகள்

நேற்று மாலை விஷயாலோசனை கமிட்டி கூடி, நகல் தீர்மானங்களைப் பற்றி விவாதித்தது. இன்று காலை 9 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டு "அங்கப்ப நகர்" வந்து சேர்ந்தது. கிராம சங்கத் தலைவர் திரு. டி. எஸ். டி. ஸில்வா அவர்கள் அந்நகரைத் திறந்துவைத்தார். தெகியோவித்தா கிராம சங்கத் தலைவர் திரு. எம். ஜி. ஜயவர்த்தன, ஆபிரகாம் சிங்கோ மண்டபத்தைத் திறந்தார். கொடி ஏற்றம் நடந்தபின், வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. நாயர் தமது பிரசங்கத்தைப் படித்தார். அதன் பிறகு தலைவர் தமது பிரசங்கத்தை முடித்தார்.

மாலை 3 மணிக்கு ஐ. தொ. கா. கூட்டம். வெளிநாடுகளிலிருந்து தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ளுகின்றார்கள். நாளை ஞாயிற்றுக்கிழமை, பெண்கள் தொண்டர்கள் மகாநாடு நடைபெறுகின்றது.

# கண்டி பெரகரா யானைக்கு வெறிபிடித்ததேன்? தெய்வத்தின் கோபமா?

## 'கலைகள் மூலம் தேசிய ஒற்றுமை'

## இலங்கைக்கு இஸ்ரேல் கப்பல்கள் சீக்கிரம் வந்து சேரும்

— நமது கொழும்பு நிருபர் —

கண்டி பெரகராவிலே யானைக்கு வெறி பிடித்து, பத்துப்பேருக்குமேல் மாண்டதையும், ஆயிரம் பேருக்கு மேல் காயம் பட்டதையும் கேட்டு இங்கு பலரும் திடுக்கிட்டனர்.

நான்கு நாட்களுக்கு முன்தான், நுககொடைக்குப் பக்கத்தில் மற்றோர் பெரகராவில் இதே மாதிரி யானைக்கு வெறி பிடித்து பலர் படுகாயமடைந்தனர்.

கண்டி பெரகரா புனிதம் வாய்ந்ததென்றும், அது புறப்பட்டதும் வராத மழையும் பொழியுமென்றும், ஆனால் இப்போது அரசாங்கத்தின் போக்கு சரியில்லாததால், தெய்வமே கோபங்கொண்டு, இந்த அறிகுறியை கண்டியில் காட்டியுள்ளதாயும், இது அரசாங்கத்துக்கும், சிறப்பாக சிங்கள பௌத்த சமூகத்துக்கும் பெரிய எச்சரிக்கையும், அபசகுனமுமாகுமென்று ஒரு சிங்கள பௌத்தர் என்னிடம் தெரிவித்தார்.

இனி நடைபெறும் பெரகராக்களில் இவ்விதம் உயிர்ச்சேதம் ஏற்படாமல் தடுக்க அதிக பாதுகாப்புக்களைச் செய்ய வேண்டுமென்றும், கருதப்படுகிறது.

### "கலை மிக்சர்"

கொழும்பில் சில மாதங்களுக்குமுன் ஆரம்பிக்கப்பெற்றுள்ள "நிருத்யோதயா" எனும் நடன, சங்கீத மன்றத்தின் ஆதரவில், சென்ற ஞாயிறன்று றோயல் கல்லூரி மண்டபத்தில் 'நாட்டிய விருத்தம்' என்ற கலை நிகழ்ச்சி தங்கராஜாவும் அவரது பள்ளிக்கூட மாணவிகளும் பரதநாட்டியம், கண்டி நடனக் கலை விருந்தளித்தனர்.

கலாச்சார மந்திரி ஸ்ரீ கலுகல்லை ஆரம்ப முதல் கடைசி வரை இருந்து, நடனமாடியவர்களைப் பாராட்டிவிட்டு கூறியதாவது:-

இலங்கையில் பரதநாட்டியம், கண்டி நடனம் முதலிய நடன வகைகள் உள்ளன. இவற்றை ஒரே மேடையில் சேர்த்து கலை விருந்தளிப்பது கலை மூலம் இலங்கையை ஒரே தேசிய சமுதாயமாக்க உதவும். ஆரம்பித்த சில மாதங்களுக்குள்ளாக இவ்வித அரிய விருந்தை அளித்ததற்காக, 'நிருத்யோதய' பிரின்ஸிப்பலைப் பாராட்டுவதுடன், இந்த ஸ்தாபனத்துக்குக் கூடுமான உதவி அளிக்கும்படியும் கலாசார டைரக்டரிடம் சிபார்சு செய்வேன்' என்றார்.

கலைக் கவுன்ஸில் தலைவரான ஸ்ரீமதி லொரேன் சேனவிரத்ன ஸ்ரீமதி ரஞ்சனாவின் கலைத் திறமையையும், கலை மூலம் ஒற்றுமைக்கு அவர் செய்யும் சேவையையும் பாராட்டினர்.

நிகழ்ச்சியில் சிலவற்றைக் குறைத்து, பின்னணி சங்கீதத்தைப் பலப்படுத்தியும் இருப்பின், அன்றைய கச்சேரி அதிகம் சோபித்திருக்கும். "கலைக்கு எல்லைத் தடை இல்லை. இன்று நாங்கள் அளிக்கும் "கலை மிக்சர்" நல்லதாயும் நீண்டகாலம் ருசிப்பதாயும் இருக்கும்" என்று நிருத்யோதயத்தார் தெரிவித்த நம்பிக்கை வீண்போகவில்லை.

ஸ்ரீமதி ரஞ்சனா, சில குழந்தைகளைப் பெற்றெடுத்த தாயாகியும், நடனத்துக்கேற்ற தேகக் கட்டும், வசீகரத் தோற்றமும் பெற்று மேடையில் அழகாக நடனமாடினார். சிறப்பாக "தெருவில் வாரானோ" என்ற பாட்டுக்கு அவர் பிடித்த அபிநயங்கள் கரகோஷங்கள் பெற்றன. கண்டி நடனத்தை மேம்படுத்த அவர் புது முயற்சி எடுத்துள்ளது குறிப்பிடத் தக்கது.

### கொழும்பு 'வல்லரசுகள்'

கொழும்பு 'வல்லரசுகள்' கூட்டம் வருகிற செப்டம்பர் மாதம் இங்கு கூடுவது சந்தேகம். ஆசியா ஆபிரிக்க மகாநாட்டைக் கூட்டுவதுபற்றி ஆலோசிக்க கொழும்பு 'வல்லரசுகள்' கூடவேண்டியதில்லை என்றும் கடிதமூலமே இதை முடிவு செய்து கொள்ளலாமென்றும் சில நாடுகள் கருதுகின்றன.

எகிப்து, யூகோஸ்லேவியா இவ்விரு நாடுகளிலும் இலங்கையின் ஸ்தானிகரான திரு. ஏ. பி. பெரைரா அவசரமாக இவ்வாரம் இங்கு வந்து திரும்பினர். இலங்கைக்கும் அவ்விரு நாடுகளுக்கும் சில வேற்றுமைகள் ஏற்பட்டுள்ளதை நேர்படுத்துவது பற்றி, பிரதமருடன் கலந்து கொண்டு சென்றுள்ளனர். இஸ்ரேலில் வாங்கிய இரு கப்பல்களை இங்கு பத்திரமாகக் கொண்டு சேர்ப்பது பற்றியும் அவர் பிரதமருடன் ஆலோசித்ததாயும், ஐ. நா. தலையீடு இல்லாமலே இரு கப்பல்களும் இங்கு சீக்கிரம் வரலாமென்றும் நம்பப்படுகிறது.

இஸ்ரேலிடம் இலங்கை அரசாங்கம் கப்பல்கள் வாங்குவதையும், வர்த்தக உறவுகள் வைத்துக்கொள்வதையும் ஆட்சேபித்து, இலங்கை முஸ்லிம் லீக் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. பல முஸ்லிம் குடும்பங்களை இஸ்ரேல் விரட்டிவிட்டதை ஞாபகப்படுத்தி, அந்த அநீதி நீங்காத வரை இலங்கை இஸ்ரேலுடன் அரசியல் உறவு கொள்ளக் கூடாதென்றும் தீர்மானம் தேட்டுள்ளது.

# தென்னாபிரிக்காவில் கலவரம்

### அமெரிக்காவின் புதிய செய்மதி

1700 இருத்தல் நிறையுள்ள ஒரு செயற்கைக் கிரகத்தை 13-8-59இல் அமெரிக்கா வானவெளியில் மிதக்க விட்டது. அது 17 முறை பூமியை வலம் வந்ததும் அதில் பொருத்தப்பட்டிருக்கும் 300 இருத்தல் நிறையுள்ள மூக்குக் கும்பம் பூமியை அடையும் என எதிர்பார்த்தது பலனளிக்காமல் போய்விட்டது. 15-8-59இல் அனுப்பப்பட்ட இன்னொரு செயற்கைக் கிரகம் பூமியை வலம் வரத் தவறிவிட்டது.

### வெள்ளப் பெருக்கு, பூமியதிர்ச்சி

போர்மோசாத் தீவில் நிகழ்ந்த வெள்ளப் பெருக்கினால் 645 பேர் உயிரிழந்துள்ளனர். 590 பேரைக் காணவில்லை. இரண்டரை லட்சம் மக்கள் வீடிழந்துள்ளனர். அங்கு நிகழ்ந்த பூமி அதிர்ச்சியினால் 16 பேர் உயிரிழந்துள்ளனர். 934 வீடுகள் அழிந்துவிட்டன.

தெற்கு பிரேசிலில் வீசிய கடும் புயல் காரணமாக 50 பேர் உயிரிழந்துள்ளனர். 200 பேர் காயமடைந்துள்ளனர்.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள மொன்ரூன என்னும் இடத்திலும் பூகம்பம் ஏற்பட்டதன் பயனாக 17 பேர் உயிரிழந்தனர். அறுபதுக்கு மேற்பட்டவர் காயமடைந்தனர்.

ஆஸ்திரேலியாவில் டான்யூப் நதி பெருக்கெடுத்திருப்பதால் பெரு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

### தென்னாபிரிக்காவில் கலவரம்

நேற்றல் மாகாணத்தில் ஏற்பட்ட கல்வரத்தை அடக்குவதற்கு பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததனால் இரு ஆபிரிக்கர் உயிரிழந்தனர். ஒரு பொலிஸ்காரர் காயமடைந்துள்ளார். பெண்கள் 'ரெலிபோன்' கம்பிகளை துண்டித்துள்ளனர். 126 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் காவல் பலப்படுத்தப் பட்டிருக்கிறது. நிறக் கொள்கை குறித்து எதிர்க்கட்சியாகிய ஐக்கிய கட்சியில் பிளவு ஏற்பட்டிருக்கிறது. ராஜினாமா செய்தவர்கள் புதிய கட்சியை அமைக்கலாம் எனத் தெரிகிறது.

பிரிட்டனில் பொதுத் தேர்தல் நடைபெற்ற பின்புதான் சாம்ராச்சிய நாடுகளின் பிரதம மந்திரிகள் லண்டனில் கூடுவதென்ற செய்தி வெளியாகியிருக்கின்றது. நிதிமந்திரிகள் மாநாடு செப்டம்பர் பிற்பகுதியில் நடைபெறுமென எதிர்பார்க்கப் படுகிறது.

# சாத்வீகப் போராட்டம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துக்கள் அடங்கிய அறிக்கையை சென்ற வார இறுதியில் நடைபெற்ற காரியக் குழுவினரின் கூட்டத்தின் பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சியினர் வெளியிட்டுள்ளனர். குறித்த அறிக்கை மேலும் கூறுவதாவது:

1958-ம் ஆண்டில் நடைபெற்ற கோர சம்பவங்கள் எங்களுக்குச் சரியான பாடம் படிப்பித்துள்ளன. இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்திலும் நிகழாதிருக்க எங்கள் கட்சி முயற்சி செய்து வரும். ஆனால் சிங்களம் மட்டும் சட்டத்தின் ஆதிக்கம் மிதமிஞ்சி விட்டது. இதனைப் பார்த்துக் கொண்டு இனிமேலும் நாம் அமைதியாக இருக்க முடியாது. எங்கள் போராட்டம் வலுவடைய முன்னர் சிங்களப் பிரதேசங்களிலுள்ள தமிழ் மக்கள் எல்லோரும் (குறிப்பாகப் பெண்கள்) தங்கள் தாயகம் திரும்புவது புத்தி சாதுரியமானது.

இராணுவத்தின் ஆதிக்கத்தைத் தமிழர் மீது பிரயோகித்து பொது சனப்பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறையில் கொணர்ந்தாலும் போராட்டத்தை நடாத்தியே தீருவோம்.

# தூங்கி விழும் பார்லிமெண்டை தட்டி எழுப்பிய சம்பவம்

— நமது பார்லிமெண்ட் நிருபர் —

நாடாளும் பாராளுமன்றத்தில் வரவு-செலவு திட்ட விவாதங்கள் நடக்கும்போது, வழக்கமாக, பேசுபவரும் கேட்பவரும் தூங்கி வழியக்கூடிய ஓர் சூழ்நிலை ஏற்படுவதுண்டு. இந்த வாரத்தில் நடந்த விவாதங்களும் இப்படியே சப்பட்டையாகப் போயிருக்கும்—ஒரு சிறு விஷயம் இல்லாவிட்டால். பார்க்கப்போனல் அது சிறு விஷயமல்ல—உண்மையில் அது ஒரு பெரிய விஷயம்.

நீதி மந்திரியின் மான்யங்கள் பற்றி விவாதம் ஆரம்பித்தவுடனே வெள்ளவத்தை — கல்கிசை பிரதிநிதி டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா எழுந்து ஒரு பிரச்சினையைக் கிளப்பினர்.

பிரச்சினை இதுதான்: சில நாட்களுக்கு முன்பு பிரதிநிதிகள் சபையில் மாத்தளை பிரதிநிதி திரு. நிமல் கருணதிலக்க தபால், தகவல் மந்திரிமீது சில பல லஞ்சக் குற்றங்களைச் சுமத்தினர். வேறு பல அங்கத்தவர்கள்மீதும் இவ்விதமான குற்றங்கள் சுமத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து அரசாங்கம் ஓர் லஞ்ச விசாரணை கொமிஷனரை நியமித்தது. திரு. கருணதிலக்க சுமத்திய குற்றங்கள் சம்பந்தமாக லஞ்ச விசாரணை கொமிஷனர் அவருக்கு ஒரு கடிதம் எழுதியதாகவும், திரு. கருணதிலக்க அதை ஏற்க மறுத்துவிட்டதாகவும், அவ்விதம் அவர் ஏற்க மறுத்தது பெரும் குற்றமாகுமென்றும், இன்னொரு தடவை பதிவுத் தபால்மூலம் அவருக்குக் கடிதம் எழுதப் போவதாகவும் நீதி மந்திரி திரு. வலன்ரைன் ஜெயவிக்கிரம தெரிவித்தாரென்று கொழும்பில் வெளியாகும் ஓர் ஆங்கிலத் தினசரி வெளியிட்டது. திரு. கொல்வின் இந்த பத்திரிகைச் செய்தியை சபையில் வாசித்துக் காட்டி, நீதி மந்திரி இந்த மாதிரி நடந்துகொண்டது பெரும் தவறென்றும், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு பாரபட்சமற்ற கொமிஷனருக்கு அவர் மறைமுகமாக வழி காட்டுவது முறையீனமானதென்றும் கூறினர்.

மந்திரி ஒருவர், எவராயிருந்தாலும், சட்டசபையில் தாம் இயற்றும் சட்டங்களை எப்படி நடைமுறைக்குக் கொண்டுவருவது என்பது பற்றி தமது நிர்வாகிகளுக்கு, அதாவது தமக்குக்கீழ் உத்தியோகம்பார்க்கும் அதிகாரிகளுக்கு, நேர் முகமாகவோ மறைமுகமாகவோ, எந்தவிதமான யோசனையும் கூறப்படாது. மந்திரிகளின் கடமை சட்டத்தை அமைப்பது. அந்தச் சட்டம் சரிவர நடக்கிறதென்பதைப் பார்த்துக் கொள்வது நிர்வாக அதிகாரிகளின் கடமை. நிர்வாகத்தில் ஏதாவது தவறுதல் காணப்பட்டால் மந்திரி அதைப் பாராளுமன்றத்தில் மட்டும் வெளியிட்டு அதற்கேற்ற பரிகாரத்தைத் தேடிக்கொள்ளலாம். இந்த விஷயத்தில், பத்திரிகை நிருபர்கள் டெலிபோன் மூலமாக நீதிமந்திரியைக் கேட்டபொழுது, அவர் உடனே 'தமக்கும் இதுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை—இதை லஞ்ச கொமிஷனரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்' என்று கூறியிருக்கவேண்டும். அதை விட்டு விட்டு, அரசியல் கட்சிகளுடன் சம்பந்தப்பட்ட ஒரு மந்திரி, இப்படி செய்ய வேண்டும், இப்படி செய்யப்படாது, என்று தமதுசொந்தக் கோதாவில் கூறுவது ஜனநாயகத்துக்கு விரோதமானது என்று திரு. டி. சில்வா எடுத்துக் காட்டினர்.

## காதைப்பிடித்திழுத்தது

கொல்வின் பேசும்போது மகுடியில் சிக்கிய பாம்புபோல சபை முழுவதும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்கும். மற்ற எந்த நாட்டிலாவது இப்படி ஒரு காரியம் நடந்திருந்தால் மந்திரியவர்கள் உடனே ராஜினமா செய்திருப்பார். அப்படி அவர் ராஜினமா செய்யாவிட்டால் அவரை 'காதில்பிடித்திழுத்து வெளியே தள்ளியிருப்பார்கள்' என்று கொல்வின் முழங்கினர்.

நிதி மந்திரி, உடனே எழுந்து இவ்விஷயமாகத் தாம் விசாரணைசெய்துமீண்டும்சபைக்குத் தெரிவிப்பதாகக் கூறியதும், நீதி மந்திரியின் மான்யங்கள் பற்றிய விவாதம் பின்போடப்பட்டு, விவசாய, நில அமைச்சின் மான்யங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

செவ்வாய்க்கிழமையன்று பிரதம மந்திரி ஒரு கட்டு காகிதங்களுடன் சபைக்குள் நுழைந்தார். நிசப்தம் நிலவியது. நீதி மந்திரி தம்மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு பிரதமரிடம் கூறிய மறுமொழியை சபை முழுவதும் எதிர்பார்த்திருந்தது. இலங்கை அரசியல் சட்டத்தின்படி நீதிமந்திரி மேல் சபை, அதாவது செனேட் சபையில் உள்ளவர். வரவு செலவு திட்ட விவாதம் நடக்கும்போது வழக்கமாக வெகு சில அங்கத்தவர்களே சபையில் இருப்பார்கள். அடிக்கடி 'கோரம்' என்ற குறைந்த அளவு பிரதிநிதிகளும் இல்லையென்று திரு. தேமிஸ் கத்துவார். ஆனல் இன்று அரசாங்கப் பகுதியிலும் எதிர்க் கட்சியிலும் சுமார் 50 பேராவது இருந்தார்கள்.

## பதவிக்குப் புதிது

நீதி மந்திரி, டெலிபோன் மூலமாகப்பேசிய பத்திரிகைக்காரருக்கு என்ன சொன்னரென்பதை பிரதமர் விளக்கிக் காட்டினர். நீதிமந்திரி, மாத்தளை பிரதிநிதியைக் குறிப்பிட்டுக் காட்டவில்லை—ஆனல் எவராவது லஞ்ச கொமிஷனர் முன்பாக வர மறுத்தால் அவர் மீது வழக்குத்தொடரப்படும்—என்று மட்டும் தான் சொன்னரென்று பிரதமர் கூறினர். பிரதமர் எப்படியாவது தமது சக மந்திரியைக் காப்பாற்றத்தானே பார்ப்பார். நீதி மந்திரி இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு அளித்த மறுமொழியை சபையில் படிக்கும்போது, பிரதமரே ஒரு விதமாகத்தானிருந்தார். குழப்படி செய்த ஒரு பள்ளிக்கூடச் சிறுவன் தலைமை ஆசிரியர்முன் மன்னிப்புக் கேட்பது போலிருந்தது அன்று அவருடைய கோபம். இறுதியில் பிரதமரே சொன்னர்: நீதி மந்திரி முதலில் டெலிபோன் மூலம் பேசியதே தவறு. அவர் மந்திரிப் பதவிக்குப் புதியவராதலால் இம்மாதிரி விஷயங்களில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். இனிமேல் அப்படி நடந்து கொள்ள மாட்டாரென்று நான் நினைக்கிறேன்.

இத்தோடு இந்த விஷயம் முற்றுப்பெறவில்லை. டாக்டர் கொல்வின் மீண்டும் எழுந்து நின்று, நீதிமந்திரி கூறிய விஷயங்களைப்பற்றிக் குறிப்பிட்ட அந்த ஆங்கில தினசரி தவறுதலாக எழுதியிருந்தால் உடனே அவர் அதை மறுத்து அறிக்கை வெளியிட்டிருக்கலாமே என்றும், லஞ்ச விசாரணைக் கொமிஷனர் சமுதாயத்துக்கு அப்பாற்பட்டவராயிருக்க வேண்டுமென்பதே தமது நோக்கமென்றும் கூறினர். இத்துடன் இந்த சம்பவம் முடிவடைந்தது.

இது போக, இந்த வாரம் விவசாய, நில அமைச்சு, நீதி அமைச்சு, வைத்திய சுகாதார அமைச்சு முதலியவற்றின் மான்யங்களும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அரசாங்கத்தின் விவசாய சீர்திருத்தக் கொள்கைகளை அக்குரஸ்ஸை பிரதிநிதி டாக்டர் விக்கிரமசிங்காவும் முன்னை நாள் மந்திரி பிலிப் குணவர்த்தனவும் கடுமையாகத் தாக்கினர்கள். விவசாய மந்திரி திரு. சி. பி. டி. சில்வா இவர்களுக்கு மறுமொழி கூறும்போது, தாம் செய்து வரும் பற்பல அபிவிருத்தித்திட்டங்களைப்பற்றிமணித்தியாலக் கணக்காக அளந்து கொட்டினர். கூட்டுறவு முறையில் விவசாயஞ் செய்யும்படி கிராமியமக்களுக்குப்புத்திபுகட்டினல், அவர்கள் அதை நிராகரித்துவிட்டு,காணிகளைத்துண்டம் துண்டமாகப் பிரித்து தனித்தனியாகக் கொடுக்கும்படி கேட்கிருர்கள் என்று மந்திரி புலம்பினர்.

## ஒரு புதிய ஏரி

ஏறத்தாழ இருபது வருடங்களுக்கு முன் கிட்டத்தட்ட 10 மைல் தூரத்திலிருக்கும் முத்துராஜவலை என்னுமிடத்தில் அருமையான நெல் விளையக் கூடுமென்று ஓர் விவசாயப் பகுதி நிபுணர் கூறினர். அரசாங்கம் உடனே அந்தப் பிரதேசம் முழுவதையும் தனக்காக்கிக்கொண்டு அதில் சில குடியானவர்களைக் குடியேற்றி நெல்சாகுபடி செய்யும்படி ஊக்கியது. இந்த முத்துராஜவலை என்ற இடம் கடல் மட்டத்துக்குக் கீழ் இருப்பதால் அடிக்கடி உப்பு நீர் வந்து கலந்து விடுவதுண்டு. இத்தன்மையினலே அங்கு நெல் சாகுபடி செய்வது மிகவும் சிரமம். இது மட்டுமன்று, முத்துராஜவலை நிலம் எப்பொழுதுமே சகதி நிறைந்ததாயிருக்கும். குடியேற்றப் பட்டவர்கள் தங்கள் வயல் நிலங்களுக்குப் போய் வருவது மிகவும் கஷ்டம். இதை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

டாக்டர் விக்கிரமசிங்காவும் ஏனைய எதிர்க்கட்சி அங்கத்தவர்களும், முத்துராஜவலையில் நெல் சாகுபடி செய்வதை விட்டு விட்டு, அங்கிலத்திலிருக்கும் 'பீற்' என்று சொல்லப்படும் ஓர் வகை வஸ்துவைக் கிளறி எடுத்தால் அதன் மூலம் விவசாயத்துக்கு வேண்டிய பசளையைப் பெறலாமென்று சுட்டிக் காட்டினர்கள். விவசாய மந்திரி இவர்களுக்குப் பதில் கூறும் போது, முத்துராஜவலையில் உள்ள நிலத்தைத் தோண்டி எடுத்துவிட்டால் அதில் ஒரு பெரும் ஏரி உண்டாகி விடுமென்று சொன்னர். "ஏரி உண்டானல் அதுவும் நல்லது தான். உலகின் வேறு இடங்களில் செய்வது போல இந்த ஏரியிலும்

(15ஆம் பக்கம் பார்க்க)

## இப்படியும் சொன்னர்கள்

நான் சொல்லுவதை நம்புங்கள். பிறநாடுகளுடன் ஒப்பிடுகையில், எமது பாராளுமன்றம் கௌரவத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகவே விளங்குகின்றது என்று சொல்லிவிடலாம்.
**—டாக்டர் என். எம். பெரேரா.**

முன்னைய நாட்களில் நாங்கள் நேருவுக்குப் பயப்படவில்லை. ஆனல், இப்பொழுது சுதந்திரம் கிடைத்தும் நாம் அவருக்குப் பயப்படுகிரேம். பலர், அவர் கோபித்துவிடுவாரோ என்ற அச்சத்தினல் எம்மை ஆதரிக்கவும் தயங்குகின்றனர்.
**—இராஜாஜி.**

யாழ்ப்பாணத் தெருக்கள் மீது பிரயாணம் செய்வது சகாராப் பாலைவனத்தினூடாகச் செல்வது போலாகும்.
**—டி. பி. முலங்குலாம.**

நான் அரசாங்கத்தில் பதவியேற்றுள்ளமை, இன ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கு முதற்படியாக அமைந்துள்ளது.
**—எஸ். யூ. எதிர்மன்னசிங்கம்.**

ஒருநேரம் பட்டினிகிடப்பவர்களைவிட, இரண்டு நாட்கள் பட்டினி கிடப்பவர்களை முதலில் கவனிக்கவேண்டும். இதுவே எங்கள் நோக்கமாகும்.
**—ரி. பி. இலங்கரத்தின.**

நான் பிறப்பால் ஒரு பௌத்தன். ஆனல், பண்டாரநாயக்காவை ஓர் உண்மையான பௌத்தர் என்று உங்களால் கருதமுடியுமா?
**—பிலிப் குணவர்த்தன**

நான் ஐக்கிய அமெரிக்காவுக்குச் சமாதானம் விரும்பும் மனிதனகவே செல்கின்றேன். வேண்டுமானல், என் சட்டைப் பைகளைத் திறந்து, அங்கு ஆயுதம் ஒன்றுமில்லை என்று காட்டுவேன்.
**—குருஷேவ்.**


**பயிர் பூச்சிகளாலும் பயிர் பீடைகளாலும் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?**

**ஜெர்மனியாரின் பயிர் பீடை நாசினிகளையும், தெளி கருவிகளையும் பாவித்துப் பயிர்களைப் பாதுகாருங்கள்**

**பொலிடோல்:** பிரசித்திவாய்ந்த ஒரு பூச்சி நாசினி திரவம் ஆகவும், தூள் முறையாகவும் பாவித்துக்கொள்ளலாம்.

**டிப்தெரெக்ஸ்:** நெற்பயிர் பீடைகளுக்குச் சிறந்த சக்தி வாய்ந்த ஒரு நாசினி திரவமாகவும், நீர்கலந்த தூளாகவும், தனித்தூளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**குப்பிரவிற்று:** கமத்தொழிற் பகுதியாலும் தேயிலை ஆராய்ச்சித் தாபனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட செம்பு பொதிந்த பங்கசு கொல்லி, தேயிலை, வெற்றிலை, புகையிலை பயிர்களின் பங்கசு நோய்களை அடக்க வல்லது.

**சிரீசையன்:** நெல்விதை மற்றும் விதைகளை தோற்று விதை பங்கஸ் நோய்களை நீக்கலாம்.

**நைகரகாபமேற்று:** பயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய ஓர் பங்கஸ் கொல்லி.

**ஹெடோனல்:** களைநாசினி, களைப்பூண்டுகளை அழிப்பதால் நெற் பயிருக்கு சிறந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.

**தூக்கோன்இரை:** ஈ, கரப்பான் பூச்சி ஆகியவற்றை அடக்க வாய்ந்த பூச்சி கொல்லி.

**சீலியோ நச்சுப்பசை:** எலிகளையும், அகழான்களையும் பரிநாசஞ் செய்யும் அரிக்கும் விலங்கு கொல்லி.

**பிலாட்சி உபகரணங்கள்:** உகந்த தெளி கருவிகளும், தூவிகளும் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுக.

**மேற்கூறியவை யாவும் M. P. C. சங்க மூலமாயும் எங்கள் பிரதிகருத்தர்**

K. S. செல்லையா, ரேயல் டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
C. A. வயித்திலிங்கம், 5, டமறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
K. V. சோமசுந்தரம், மன்னன குளம், அக்கரைப்பற்று.
ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்டோர்ஸ், வெலிமடை.
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வெலிமடை.
அனுலா சீற் ஸ்ரோர்ஸ், வெலிமடை. மூலமாயும் வேண்டிக்கொள்க.
பயனீயர்ஸ் டிரேடிங் சென்றர், நெல்லியடி, கரவெட்டி.
எஸ். எம். ஏ. அலியுத்தும்மா லெப்பே, 153, மெயின் வீதி, கல்முனை.
எல். ஈ. எப். அமரசேகரா 10, வல்லான, பாணந்துறை.
என். சச்சிதானந்தன், திருக்கேதீஸ்வரம், மன்னர்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
வி. வடிவேலு அன்ட் பிறதர்ஸ், 25-27, பழையகடைத்தெரு, நுவரேலியா.
கே. செல்லத்துரை, முதலியார் வளவு, சுன்னகம்.

தேவையான விபரங்களுக்கு எழுதுக.

விலாசம்:

**சதாம் ஹவுஸ் லிமிட்டெட்**

தபால் பெட்டி இல. 743.
**கொழும்பு 8.**

# சிறுவர் பகுதி

செல்வக் குழந்தைகளே,

வணக்கம். 'ஈழநாடு' இந்தியாப் பிரயாண மலர் மிக அழகாக இருக்கின்றதென உங்களிற் பலர் மகிழ்ச்சியுடன் கடிதங்கள் எழுதியிருக்கின்றீர்கள். உயர் வகுப்புக்களிற் படிக்கும் மாணவர்கள் என்ன கூறுகின்றார்கள் தெரியுமா? மலரிலுள்ள கட்டுரைகள் தங்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கின்றன என்று அவர்கள் எழுதியுள்ளனர். "மாமா, மாமா, மலரிலுள்ள எல்லாப் படங்களும் நல்லாய் இருக்கின்றன" என்று வேறு சிலர் துள்ளிக் குதிக்கின்றனர். எனது மருமக்கள் இப்படி மகிழ்ச்சியடைவதைக் குறித்து உண்மையாகவே நானும் மகிழ்கின்றேன்.

சின்ன மாமா

## கோபத்தால் வந்த வினை

க. முருகையா (ப. எண். 52)

இராமுவும் சோமுவும் ஒரே வகுப்பில் படித்து வந்தார்கள். இவர்களில் சோமு ராமுவை விடக் கெட்டிக்காரன். இதனால் இராமு சோமுவின் மேல் பொறாமை கொண்டிருந்தான்.

பரீட்சை வந்ததும், சோமுவை அதிற் சித்தியடையச் செய்யாமற் தடுக்க வேண்டுமென்று இராமு எண்ணினான்.

சோதனை நடந்து கொண்டிருக்கும் இடத்தில் சோமு முன் வாங்கிலும் இராமு பின் வாங்கிலுமாக இருந்தனர். இராமு, சோமுவினுடைய விடைத்தாளைப் பார்த்து விடைகளை விறுவிறு என்று எழுதிக் கொண்டிருந்தான்.

பரீட்சை முடியும் நேரம் வந்ததும் ஆசிரியர் சோமுவைக் கூப்பிடவே சோமுவும் தன் இடத்தில் தனது விடைத்தாளை விட்டுச் சென்றான். இராமு இச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு சோமுவினுடைய விடைத்தாள்களைக் கசக்கி எறிந்தான். இராமுவும் சோதனையில் சோமு சித்தியடைய முடியாது என்றே எண்ணியிருந்தான்.

எதிர்பாராத விதமாகச் சோமு பரீட்சையிற் சித்தியடைந்தான். இராமு சித்தியடையவில்லை. காரணம், சோமுவினுடைய விடைத்தாளை அப்படியே ஒன்றும் விடாமல் பார்த்தெழுதிய இராமு, தனது பெயரை மறந்து சோமுவின் பெயரைத் தான் எழுதிய விடைத்தாளில் அவசரத்தில் எழுதிவிட்டான்.

## அழுகையின் காரணம்

(எஸ். கதிர்காமநாதன் — பதிவு. எண் 104)

ஒரு நாட்டில் ஒரு கொடுங்கோல் மன்னன் இருந்தான். அவனைக் கண்டாலே மக்களுக்கு ஒரே நடுக்கம். அது மட்டுமல்ல, அவனது வேலைக்காரர்களும் எப்போது தங்களுக்கு ஆபத்து நேரிடுமோ என்று பயந்து நடுங்கிக்கொண்டு இருந்தார்கள். ஒருநாள் அவ்வரசன் இறந்தான். அன்றே எல்லோரும் சந்தோஷம் அடைந்து அரச குமாரனைச் சிம்மாசனத்தில் அமர்த்தினர். மகிழ்ச்சி மேலீட்டால் புதிய மன்னனை ஊர்வலமாகப் பல்லக்கில் எடுத்துச் செல்ல அரண்மனைக்கு வந்தனர்.

புதிய அரசனும் அரண்மனை வாசலுக்குவந்தான். அப்போது யாரோ ஒரு காவலாளியின் அழுகுரலைக் கேட்டான். அவனை அருகே அழைத்து "ஏனப்பா? என் தந்தை இறந்துவிட்டாரே என்று வருந்துகிறாயா?" என்று கேட்டான்.

அதற்கு அச்சேவகன் "இல்லை, தினமும் தங்கள் தந்தை அரண்மனை வாசலுக்கு வரும்போது எந்தக் காரணமும் இல்லாமல் எனக்குப் பத்துக் குத்துகள் ஓங்கிக் குத்துவார். அவைகளைப் பெற்று நான் பழகி விட்டேன். இப்போது அவர் நரகத்துக்குச் சென்றிருக்கிறாரே. அங்கும் அவர் யம கிங்கரர்களை இவ்விதமே குத்தினால் அவர்கள் பயந்து அவரை இங்கே கொண்டுவந்து விட்டு விட்டால் என்ன செய்வது என்று நினைத்துத்தான் நான் அழுகிறேன்" என்றேன்.


இதைக் கேட்டு புதிய அரசனும் மற்றவர்களும் கொல்லென்று சிரித்தனர்.

## அறிவுச்சுடர் I கேள்விகள்


1. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் கால்வாய் எது?
2. இலங்கைக்குச் சோழரிட்ட பெயரென்ன?
3. மிருதங்கத்திற்குத் தமிழ்ப் பெயரென்ன?
4. வலமிருந்து இடமாக எழுதப்படும் மொழி எது?
5. தமது மனைவியை முதல் சீடராக ஏற்றுக் கொண்ட மதஸ்தாபகர் யார்?

(விடை 14-ம் பக்கம் பார்க்க)

## தெரிந்து கொள்ளுங்கள்



சூரியனின் ஒளி வெள்ளிமயமானது; தங்க மயமானதல்ல. சூரியனிலிருந்து புறப்படும் ஒளியும், உஷ்ணமும், அதனுள்ளே அடங்கியிருக்கும் அணுச்சக்தியினாலேயே வெளிவருகின்றன. ஒவ்வொரு வினாடியும், சூரியன் பரப்பும் சக்தியானது, கோடானுகோடி நீரகக்குண்டுகளின் வெடிப்புச்சக்திக்குச் சமானமானது.



கப்பற்படைத் தலைவர் வில்லியம் ஆர். அன்டேர்ஸன் என்பவர், ஆக்ரிக் சமுத்திரம் ஆழமானவொரு சமுத்திரமென்றும், அது 17,000 அடி ஆழமுள்ளதென்றும் கூறியுள்ளார். இன்னும், நீருக்குக் கீழே கரடுமுரடாக விருக்கிறதெனவும், எதிர்பார்த்த அளவிற்கு மேல் அங்கு பனிக்கட்டிகள் உள்ளன எனவும் அவர் கூறியிருக்கிறார்.

## வாழ்த்துங்கள்!

எஸ். வி. ஆர். வேதநாயகம்
பதிவு. எண். 146.

நாம் எப்போதும் பிறரை மதிக்க வேண்டும். மேலோரை மதிப்பதே மதியுடையார்க்கு மகிமையளிக்கும். என்றும் நாம் எமது வாழ்த்துக்களை வழங்கிய வண்ணமே இருக்க வேண்டும். நாம் வழங்கும் வாழ்த்து அகத்திலிருந்து வெளி வருவதாக இருக்க வேண்டும். 'முகநக நட்பது நட்பன்று'. நாம் வாயாலே வாழ்த்த வேண்டும் என்பது அவசியமில்லை.

நான் வீதி வழியே செல்லும்போது என் அன்பைத் தெரிவிக்கப் பல வழிகளைக் கையாளுகின்றேன். பொன்னகையிலும் மேன்மையான புன்னகை இருக்கின்றதே, என் அன்பை அறிவிக்க. காரிலோ வேறு வண்டிகளிலோ பிரயாணம் செய்வோரைக் கண்டால் கையை அசைத்து எனது அன்பைக் காட்டுவேன். தலையைத் தாழ்த்தி கோவில்களைக் காணும்போது வணங்குவேன்.

நாம் நண்பர்களை நேரிற் சந்திக்கும் பொழுதோ அன்றி கடிதம் மூலம் உறவு கொள்ளும் பொழுதோ 'வணக்கம்' கூற மறந்துவிடலாகாது.

எமது உற்றாரையும் நாம் வாழ்த்த வேண்டும். முக்கிய நாட்களிலோ — பிறந்த நாளிலோ, புத்தாண்டிலோ—நேரிலோ வாழ்த்து மடலிலோ அவர்கட்கு எமது வாழ்த்தை வழங்க வேண்டும்.

பரீட்சையிலே சித்தியடையும்போது, போட்டிகளிலே வெற்றியீட்டும் போது, நாம் வாழ்த்துக்கூறி உற்சாகம் ஊட்டலாம்; அவர்களும் எமது வாழ்த்துக்களைக்கேட்டுஊக்கம் காட்டுவர், களிப்படைவர்.

## புதிய மருமக்கள்

பெயர்களும், பதிவு எண்ணும்.

409. து. வைஜயந்தி
12, பிராமனேட் வீதி,
ராதாகிருஷ்ண பில்டிங்ஸ்,
திருச்சிராப்பள்ளி,
தென் இந்தியா.

410. எஸ். மேரி சாமுவேல்,
அர்ச். அன்னம்மாள் கோவில்,
அறனயக்கா.

411. கே. வி. தங்கையா,
கரந்தவனைத் தோட்டம்.

412. இ. என். சேனதிராசா,
'இளையதங்கவிலா'
மாதகல் கிழக்கு,
மாதகல்.

413. நா. திருமணி,
மனோவாசா,
உரும்பராய்.

414. எஸ். சந்திராதேவி,
468, 'திருப்பதி'
நெடுந்தீவு மத்தி,
நெடுந்தீவு.

415. சு. மகாதேவன்,
மே/பா ஆர். சுந்தரமூர்த்தி
76, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

416. ஏ. வர்ணன்,
வெற்றிமணி,
தெல்லிப்பழை, இலங்கை.

417. ஆ. அபூபக்கர்,
16, 1-ம் குறிச்சி,
சம்மாந்துறை.

418. க. வரதராசா,
108, பேராதனை வீதி,
கண்டி.

419. ஏ. அகமதுமீரான்,
மே/பா நீயோகபே,
அவிசாவலை.

420. அ. மரகதமணி,
23/5 ஸ்கோபில்ட் பிளேஸ்,
கொள்ளுப்பிட்டியா.

421. ரி. கிருஷ்ணனந்தன்,
ஓ. ஏ. பங்களா,
மன்னார்.

422. மா. சகுந்தலாதேவி
உடையாவளவு,
சுன்னாகம்.

423. பேகம்பதிரியா,
மே/பா நீயோ கபே,
அவிசாவலை.

424. க. சிறீறஞ்சிதமலர்,
3, வில்லூண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

425. பா. சந்திரமோகன்,
196/2, பொன்னப்பா
ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

426. ஆர். லிங்கேஸ்வரன்
51, சீ வியூ வீதி,
திருக்கோணமலை.

427. க. கந்தசாமி,
குப்பிளான்,
சுன்னாகம்.

## உலக விடுகதைகளின் விடைகள்

ஈழநாடு 15-8-59 இதழில் வெளியான விடுகதைகளின் விடைகள் வருமாறு.

1. நாக்கு
2. தேங்காய்
3. பல், நாக்கு
4. பிறைச்சந்திரன்
5. சிலந்தி

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 29-8-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினால் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் ஈழநாடு சிறுவர் பகுதிக்கு அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் சிறுவர் பகுதி யில் வெளியிடப்படும்.

★ சிறுவர் பகுதி சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
ஈழநாடு சிறுவர் பகுதி,
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

## ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்
(22-8-59)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.

விலாசம்...

கையொப்பம்

பெற்றார் அல்லது
ஆசிரியரின் கையொப்பம்.

வயது............

இங்கே வெட்டவும்

மனிதகுல மணிகள் 4

# கியூரி தம்பதிகளின் மகத்தான தியாகம்

வீ. இராமகிருஷ்ணன்

புற்று நோய் மிகக்கொடிய வியாதி. இந்நோய் ஏற்பட்டால் கஷ்டப்பட்டுச் சாவதைத் தவிர மீள வழியில்லாமலிருந்தது. இந்நோயில் உடற் கலங்கள் (Cells) ஒழுங்கில்லாமல் வளர்கின்றன. இவைகளை வெட்ட வெட்ட அவை மீண்டும் வளரும். இக்காலத்திலும் இந்நோய் தோன்றும் காரணம் தெரியாது.

பிரான்ஸ் தேசத்தில் கியூரி தம்பதிகள், பிச்சபெலண்டு (Pitchblende) எனப்படும் வகையான தாரைச் (tar) சுத்தப்படுத்தி அதனின்றும் ரேடியம் (Radium) எனப்படும் உலோகத்தைப் பிரித்தெடுத்தார்கள். ரேடியம் இயற்கையாகவே கதிரியக்கத்தைக் கொண்டுள்ள பொருள்.

கியூரி தம்பதிகள் மிகுந்த பிரயாசையின் பின் பிரித்தெடுத்த ரேடியத்தின் அளவு மிகக் குறைவு. இன்னும் உலகில் சுத்தப்படுத்திய ரேடியம் அதிகம் கிடையாது. இதன் காரணமாகவே ரேடியம் உலகின் மிக்க விலையுயர்ந்த பொருளாகத் திகழ்கின்றது. கதிரியக்கத் தாக்குதல், கலங்களைக் கொல்லும் தன்மையுடையது. அவை புற்றுநோய்க் கலங்களை அழிக்கும் பொழுது, நோயாளரின் உபாதை சிறிது குறைகின்றது. ரேடியம் இயற்கையாகவே கதிரியக்கத்தைத் தோற்றுவிப்பதால், அது நோயால் இடர்ப்படுவோர்க்கு மிகவும் உதவி.

உலகிலே மிக்க விலையுயர்ந்த பொருளாகிய ரேடியத்தைக் கண்டுபிடித்த கியூரி தம்பதிகள், *தாங்கள் பிச்ச பிலெண்டிலிருந்து ரேடியத்தைப் பிரித்தெடுத்த முறையை தங்கள் பெயரிலேயே பதிவு செய்து கொண்டிருக்கலாம். அப்படிச் செய்து கொண்டிருந்தால் உலகிலேயே அவர்கள் குடும்பத்திலும் பணக்காரக் குடும்பம் தற்காலத்தில் இருக்கமுடியாது. அம்மாதிரி அவர்களைச் செய்யச் சொல்ல அக்கால பிரான்சிலும் ஆட்களுக்குக் குறைவில்லை. ஆனல் மக்களின் வருத்தத்தை தீர்க்கும் பொருளின் மூலம் தாங்கள் பலனடைய அத்தம்பதிகள் விரும்பவில்லை. தாங்கள் கண்டுபிடித்த ரேடியம் பிரித்தெடுக்கும் முறையை உலக மக்களுக்கே பொதுவுடைமையாக அளித்து விட்டார்கள்.

காலச்சக்கரம்சுழன்றது. கணவன் வண்டியின் கீழ் அகப்பட்டு அகால மரண மடைந்தான். குடும்பம் வறுமையில் உழன்றது. ஆனலும் கியூரி அம்மையார், இரசாயனத்துச் சோதனைகளில், தம் கவலைகளை மறந்து ஈடுபட்டார்.

இங்கிலையில் அவரது சோதனைகளுக்கு அவர் கண்டுபிடித்த ரேடியம் தேவைப்பட்டது. தேவைப்பட்ட ரேடியத்தைப் பணங்கொடுத்து வாங்கக் கூடிய நிலைமையில் அவரில்லை.

உலக மக்கள், முக்கியமாக அமெரிக்கமக்கள் இதை யறிந்தனர். இவர்களில் பெரும்பாலோர் புற்று நோயினல் பீடிக்கப்படாதவர்கள். ஆனலும் கியூரி குடும்பத்தின் மகத்தான தியாகத்தை உணர்ந்து, அக்குடும்பத்துக்கு உதவிசெய்ய விரும்பினர்கள்.

ரேடியம் கியூரி அம்மையாருக்கு உதவ வேண்டிய அவசியம் உணரப்பட்டது. பெரும் பணக்காரர்கள் சிலர் தனித்தே இக்காரியத்தைச் செய்ய முற்பட்டார்கள். இத்தகைய உதவியை கியூரி அம்மையாரும், அமெரிக்கப் பொது மக்களும் நிராகரித்து விட்டார்கள்.

அமெரிக்கப் பொதுமக்கள், பெரும்பான்மையோர் மிக்க ஏழைகள், சிறு, சிறு தொகைகளாகச் சேர்த்துப் பெருந்தொகையை ஈட்டினர். இதனைக் கொண்டு சிறிது ரேடியம் வாங்கினர். பின் கியூரிக் குடும்பம் உலக மக்களுக்காகச் செய்த தியாகத்திற்கு நன்றி செலுத்தும் முறையில், அம்மையாரை அமெரிக்காவிற்கு அரசாங்க விருந்தினராக அழைத்து, உபசரித்து, அமெரிக்க ஜனதிபதியை, மக்கள் வாங்கிய ரேடியத்தைப் பரிசாக அளிக்கச் செய்தார்கள். கண்களில் நீர் மல்க அம்மையார் அப்பரிசைப் பெற்றுக்கொண்டு "மனித இனம் அழிவடையாது. காரணம் கூறத்தேவையில்லை. பெரும்பான்மையோருக்கு நன்றியுணர்ச்சி, தியாகம், ஆகிய குணங்கள் இருக்கின்றன. இவையிருக்கும்வரை மனித குல வளர்ச்சிக்குத் தடையேயில்லை" யெனக்கூறினர்.

நோயினல் மக்கள் அநுபவிக்கும் கஷ்டங்களைக்குறைப்பதின் மூலம் பலனடைய விரும்பாத கியூரித் தம்பதிகள் மனிதகுல மணிகள் தான். இவர்கள் கண்டுபிடித்த பொருளினல் சிறிதளவும் பலனடையாத பெரும்பான்மை அமெரிக்கப் பெருமக்களும் மனித குல மணிகள் தாம்..

*கியூரி அம்மையாரின்பேத்தி சில மாதங்களுக்குமுன் பிரான்சிலிருந்து இந்தியாவிற்குவர காசில்லாமல் கஷ்டப்பட்டார் எனக்கேள்விப்பட்டவர்களுக்கு இக்குடும்பத்தின் தியாகம் நன்கு விளங்கும்.

யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

எஸ். கனகசபை
சிறுப்பர்

Std. 14.

# இளைஞர்களே நாட்டின் உயிர்நாடி
## தமிழ் பேசும் மாணவர்களுக்கு உபதேசம்

யாழ்ப்பாணம்.

இளைஞர்களே ஒரு நாட்டின் உயிர்நாடி. பல தேசங்களின் வரலாற்றை நாம் எடுத்துப் பார்ப்போமானல், அதில் இளைஞர்கள் மிகப் பெரிய தியாகங்களைச் செய்திருக்கிருர்களென்பதை யறிவோம். இவ்வாறு யாழ்ப்பாணம் நாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் சென்ற ஞாயிறு (16. 8. 59) காலை நடைபெற்ற தமிழ் பேசும் மாணவர் இயக்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் டாக்டர். ஈ. எம். வி. நாகநாதன் பேசினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "தமிழ் இளைஞரின் எதிர்காலம் வறண்ட பாலைவனமாகக் காட்சியளிக்கிறது. அரசாங்கத்திலோ அல்லது வேறு ஸ்தாபனங்களிலோ தமிழ் இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் வேலைகள் கிடையா. இதனல் நாம் சோர்வடையக் கூடாது. இளைஞர்களெல்லோரும் ஒன்று கூடித் தனிச் சிங்கள மசோதாவை எதிர்க்க வேண்டும்.

இக் கூட்டத்தில் வட்டுக் கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் பேசியதாவது. "மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது உசிதமல்ல என்பது பிழையான கருத்து. மாணவர்கள் பல் வேறு கட்சிகளின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் அலசி ஆராயக் கூடியவர்களாகத் திகழ வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் எதிர் காலத்தில் பக்குவம் வாய்ந்தவர்களாக விளங்குவார்கள். கனடா தேசத்தில் உண்மை அரசியல் நிலையை எடுத்துக் காட்டியவர்கள் மாணவர்களே. சுவிட்சர்லாந்தில் நான்கு மொழிகளுக்கும் சம அந்தஸ்து கோரி வெற்றி பெற்றவர்களும் மாணவர்களே. மாணவர்களாகிய நீங்கள் சகல கட்சிக் கொள்கைகளையும் ஆராய்ந்து தமிழையும் தமிழ் மக்களையும் விடுதலையடையச் செய்வீர்களென்று நம்புகிறேன்."

—ந. நி.

கிழக்குத் தபால் :: நமது நிருபர்

# ஐக்கிய வங்கியின் சேவை
## விவசாயிகளின் ஏமாற்றம்

மட்டக்களப்பு

இவ்வார இறுதியில் மட்டக்களப்பு மாகாணவங்கியின் வருடாந்தக் கூட்டம் மாவட்ட அதிபர் திரு. ஜே. வி. பொன்சேக்கா தலைமையில் நடைபெற்றது. கிழக்குமாகாணம் முழுவதிலுமிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இவ்வங்கியை ஆரம்பித்து அதன் வளர்ச்சிக்குஉழைத்துக் காலஞ்சென்ற முதலியார். எஸ். ஆர்ம்ஸ்ரோங்குக்காக 2 நிமிட நேர மௌனம் அனுட்டித்ததுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

வங்கி ரூபா. 54,701, சதம் 54 இலாபமடைந்திருப்பதாக எண் பார்வை எடுத்துக்காட்டியது பலருக்கும் மகிழ்ச்சியையளித்தது. எனினும் 4 இலட்ச ரூபாய்க்கதிகமாகத் தவணை தப்பிய கடனிருப்பதை அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இவ்வங்கி ஊழியர்களுக்கு மற்ற வியாபார வங்கிகளில் வழங்குவதுபோன்ற சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்று சபை ஒப்புக்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அங்கத்துவ சங்கங்களின் நன்மையை உத்தேசித்துக் கல்முனையில் நிறுவப்பட்டுள்ள பணம் கொடுக்கல் வாங்கல் நிலையத்தை நிரந்தரக் கிளையாக்குவதெனத் தீர்மானமாயிற்று.

திருக்கோணமலைப் பிரதிநிதிகள் அங்கும் ஒருகிளை அவசியம் நிறுவப்பட வேண்டுமென்பதை வற்புறுத்தினர்.

அடுத்த வருடத்துக்குள் வங்கிக்கென ஒரு தனிக்கட்டடம் அமைக்கப்படுமென்று தலைவர் அறிவித்தார்.

**நீண்ட வரட்சி**

மட்டக்களப்பில் வரட்சி நீடிப்பதால் தண்ணீர்த்தட்டுப்பாடு மிகவும் அதிகரித்து விட்டது. இதனல் பல கிராமங்கள் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் கல்லோயாவிலுள்ள நீர்த் தேக்கத்தின் நிலமட்டமும் நாளுக்கு நாள் குறைந்து வருவதாகத் தெரிகிறது. இங்நிலை நீடித்தால் அங்கு மின்சார உற்பத்தி செய்வதும் தடைப்படலாம் என அஞ்சப் படுகிறது.

**விவசாயிகளின் கூட்டம்**

சென்ற சில வருடங்களாகச் செயற்கைப் பசளையை உபயோகிக்கும் வழக்கம் இப்பகுதி விவசாயிகளிடையே அதிகரித்து வருவது குறிப்பிடற்குரியதாகும். இதற்கு அரசாங்கம் பசளையின் விலையில் மூன்றிலொருபங்கை மானியமாகவழங்கியது முக்கிய காரணமெனலாம். ஆனல் இப்போது 5 ஏக்கருக்கதிகமான நிலமுள்ள விவசாயிகளுக்குப் பசளைக்கு மானியம் வழங்குவதில்லை என்ற தீர்மானமானது விவசாயிகளுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. பிரதானமாக மாரி மழையை நம்பி விவசாயத்திலீடுபடும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் பெருங்கஷ்டமடைய வேண்டியேற்படுமாதலால் இத்திட்டத்தைக் கைவிடும்படி உணவு அமைச்சரைக் கேட்கும் தீர்மானமொன்றை வங்கிப் பொதுக்கூட்டத்தில் திரு. எம். சிவநேசராசா சமர்ப்பித்தார். சபை பிரேரணையை ஏகமனதாக அங்கீகரித்தது.

# மின்சார நிலைய மேற்பார்வையாளரின் சேவைக்குப் பாராட்டு

வவனியா

வவனியாப் பட்டினம் சென்ற மூன்றரை வருடகாலமாக இருள் சூழ்ந்த நகராக இருந்ததில்லை. இதரபட்டினங்கள் பலவற்றுள் மின்சாரக் கோளாறுகள் ஏற்படுவதை நாம் கேட்டிருக்கின்ருேம். ஆனல் வவனியா மின்சார நிலைய மேற்பார்வையாளர் திரு. பா. ஜெயசுந்தரத்தின் காலத்தில் நாம் இரவும் பகலும் இடையீடின்றி ஒளியைப் பெற முடிந்தது. பல இடங்களுக்கும் மின்சாரம் கொடுக்கப்பட்டது. இதனல் பட்டின சங்கம் போதிய வருமானத்தை அடைய முடிந்ததெனின் அது மிகையாகாது. எனவே பட்டின சங்கத் தலைவர் என்ற முறையில் அவர் சேவைக்கு நான் நன்றி கூறுகிறேன்.

இவ்வாறு சமீபத்தில் ஜெயசுந்தரத்துக்கு நடைபெற்ற பிரிவுபசாரக் கூட்டத்தில் பட்டினசங்கத் தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் கூறினர். திரு. ரீ. சின்னத்துரை, மின்சாரப் பகுதி இலிகிதர் திரு. எம். இராஜரத்தினம், திரு. பா. ஜெயசுந்தரம் ஆகியோரும் பேசினர்.

—ந.நி.

அருள்வழி

# தன்னைத் திருத்தாமல் பிறரைத் திருத்துவதால் உலகம் உய்யாது

எஸ். வி. எல். செல்வநாயகம்

மனிதன் உய்ய மாபெரும் போதனைகளை அருளியவர் தாம் இயேசு பெருமான். போதனைகளால் மட்டுமன்று சாதனைகளாலும் உலகைத் திருத்திய உத்தமர் அவரே. பைபிளில் பொதிந்துள்ள உண்மைகளை நுணுகி ஆராயின் இவ்வுண்மை விளங்கும்.

அன்றாட நிகழ்ச்சிகளைக் கொண்டு மாபெரும் உண்மைகளை உணர்த்திய மாண்பை பைபிளில் பெரிதும் காணலாம். பிறர் குற்றங்களைத் திருத்துமுன் தன் குற்றங்களைத் திருத்தியாக வேண்டும் என்ற பெரிய தத்துவத்தை பல்வேறு இடங்களில் நன்கு விளக்கியுள்ளார் இயேசு பெருமான். விபசாரத்தில் ஈடுபட்டிருந்ததற்காக ஒரு பெண்ணைச் சிலர் கொல்ல முயன்று, அவளை இயேசு பெருமானிடத்தில் கொண்டு வந்தனர். கையும் மெய்யுமாக அவள் விபசாரத்தில் ஈடுபட்டிருந்ததாகக் குற்றஞ் சாட்டி அவளைக் கொல்வதே தகுந்ததெனக் கங்கணம் கட்டி நின்றனர் பல்லோர். இயேசு பெருமானின் முன்னிலையிலேயே அவளை எறிந்து கொல்ல வேண்டும் என்பது அன்னார்தம் வேணவா.

அவர்களை இயேசு பெருமான் கூர்ந்து நோக்கி: "உங்களில் எவனாவது பாவ மாசற்றவன் இவளுக்கு முதற் கல்லை வீசலாம்." என்று பணித்துவிட்டு அவர் தியானத்தில் ஆழ்ந்துவிட்டார். சிறிது நேரம் கழித்து அண்ணாந்து பார்க்கவும் அவர் முன்னிலையில் அப் பெண்ணை விடுத்து வேறு எவரும் காணப்படவில்லை.

இந்நிலையில்மனமுருகி, தான் செய்த பாவங்களுக்கெல்லாம் பரித்தியாகம் செய்யுமுகமாக நின்ற அப்பெண்ணைப் பார்த்து "உன்னைப் பழி சுமத்திக் கொண்டு வந்தவர்கள் எல்லாம் எங்கே?" என வினவவும் "அவர்கள் ஒவ்வொருவராக சென்று மறைந்து கொண்டனர்" எனக் கூறினாள் அப் பெண்.

அப்பொழுது அவளை மன்னித்து "மீண்டும் நீ இப்பாவப் பழக்கத்தில் உழலல் ஆகாது" எனக் கூறி பாவ மன்னிப்பும் அருளினார் இயேசு பெருமான். இது பைபிளில் காணப்படும் ஓர் சிறு சம்பவம். உண்மைகள் பலவற்றைத் தன்னகத்துள்ளே அடக்கியுள்ள சம்பவம் இது.

தன்னைத் திருத்ாது பிறனைத் திருத்துதல் சிறிதும் ஒவ்வாது என்பது இதனால் விளங்கும். வாழ்க்கைக்கு அத்தியாவசியம் வேண்டியது இவ்வுணர்ச்சி. இந்நிலையை அடைந்தால் உலகமே உய்வு பெற்றதாகிவிடும்.

பைபிளில் இன்னுமோர் இடத்தில்: "பிறன் கண்ணில் உள்ள தூசை அகற்றமுயலுமுன் உன் கண்ணில் உள்ள துரும்பை அகற்று" எனச் செப்பியுள்ளார், அன்பே போதித்த பெருந்தகை இயேசு. ஒவ்வொருவனும் தன்னையே திருத்திக்கொண்டால் அதுவே போதுமானது. அதைக்கண்டே பிறர் எல்லாம் திருந்த வழி உண்டு. "உன்னையே அறிவாய்" என்று சாக்கிரட்டீஸ் செப்பியதும் இங்கு ஆராயத்தக்கது.

உலகில் நாம் இன்று காண்பதென்ன? உலகினர் எல்லாம் தம்மை உன்னி ஆராயாது பிறரையே திருத்தும் நோக்கமாகப் பணியாற்றுகின்றனர். பிறன் ஓர் குற்றம் செய்துவிட்டால் ......ஐயகோ, உலகமே ஒழிந்துவிட்டதாகக் கருதிக் கொக்கரிப்பர்; எள்ளி நகையாடுவர்; ஏசி ஏசித் தூற்றுவர். தாம் என்ன செய்கிறார்; தம் செயல் பிறரில் எத்தனை பேருக்கு இடர்விளைத்துள்ளது, தம்மால் கெட்டழிந்தோர் உலகில் எத்தனைபேர் என்பதை ஆராய அநேகர் சிறிதும் ஒப்புவதில்லை. பிறர் செய்யும் செயல்கள் மட்டும் அவர்களுக்கு இமாலயத் தவறுகளாகப் படும். இதனாலேயே உலகம் கெடுபிடி நிலையில் மிகத் துரிதமாகச் சென்று கொண்டிருக்கிறது எனலாம்.

இந்நிலையில் காந்தியடிகளின் உள்ளத்தையும் சிறிது அறிதல் நலன்விளைக்கும். தன்னைத் திருத்தலே பிறனைத் திருத்த வழி என்ற உண்மையை அறிந்து கடன் ஆற்றியவர்தாம் உலகம் போற்றும் மேதை காந்தியடிகள். தம்மால் செய்ய இயலாததைப் பிறர் செய்யும்படி அவர் பணிக்கவில்லை. தன் குற்றங்களை அறிந்து அதைத் திருத்திக் கொண்டபின் தான் பிறரில் உள்ள குற்றங்களைக் கடிந்து திருத்த முயன்றார் அப் பெரியார்.

இன்று மக்கள் விலங்கினங்களிலும் பார்க்கக் கேடுற்ற நிலையில் பழகிக்கொள்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. "உனக்கும் எனக்கும் அல்லடி பெண்ணே, ஊருக்கல்லோ சொன்னேன் பெண்ணே" என்ற பான்மையாக நடப்பதை நாம் அறிகிறோம். "தமக்கொருநீதி பிறர்க்கொரு நீதி" மயமே இன்று நாம் காணக்கூடியதாகவிருக்கிறது. இதனால் உலகம் மிகக் கீழ்நிலையை நோக்கி மிகத் துரிதமாகச் சென்று கொண்டிருக்கிறது. இது உலகினர் எல்லாருக்குமே சாபக் கேடு.

குறிப்பாக, பிறனை அறியும் தகைமை தமிழருக்கு இன்னும் நன்கு கைவரவில்லை என்பதையும் நாம் இங்கு கவலையுடன் தெரிவித்துத்தானாக வேண்டியுள்ளது. தாம் மட்டும் வாழ்ந்தால் போதுமானது என்ற இழி பண்பு தமிழர்களில் பெருமளவில் உண்டு என்பதையும் நாம் ஒப்புக் கொண்டுதானாக வேண்டும்.

## மனக்கட்டுப்பாடு சக்தியை உண்டாக்கும்

அனுராதபுரம்.

அனுராதபுரம் விவேகானந்த சபையினரின் ஆதரவில், சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை சென்ற 11ந் தேதி சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. திரு. வே. க. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக் குருபூசையில் சைவப் புலவர் சி. அருளம்பலம் "சுந்தரரும். சிந்தனையும்" என்பது பற்றிப் பேசிய பின்னர் திருக்கோணமலை சிவானந்த தபோவனத்தின் பொறுப்பாளர் சுவாமி மாதாஜீ "சமயமும் புராணமும்" என்னும் பொருள்பற்றிப் பேசியதாவது:

மனக் கட்டுப்பாடும் உள் நோக்கு சக்தியை உண்டாக்கும். மனம் போனபடி நடந்து கொண்டு போவதால் இன்றைய உலகம் அழிவுப் பாதையிற் செல்கிறது. மின்சாரம் போன்று சிந்தித்தால் சிறந்த ஒழுக்க ஒளியுண்டாகும். தூய உணர்வை அறிய மனம் மாசு மறுவற்று கண்ணாடிபோல் பிரகாசிக்க வேண்டும்.

எம். கே. கமலகுமாரி குழுவினர் இன்னிசை விருந்தும் நடைபெற்றது. இக் குருபூசைக்கு உபயகாரராக இருந்தவர் திருமதி த. சிற்றம்பலம் அம்மையார்.

### அனுராதபுரத்தில் விமானத்தள வேலைகள்

சென்ற வருடக் கலவரங்களுக்குப் பின்னர் தொடங்கப் பெற்ற அனுராதபுர விமானத்தள வேலைகள் இப்போது மும்முரமாக நடை பெறுகின்றன. போக்கு வரத்து மந்திரியாக இருந்த திரு. மைத்திரிபால சேனாநாயக்காவினால் ஆரம்பித்து வைக்கப் பெற்ற இவ் விமானத் தள வேலைகள் இன்னும் மிகக் குறுகிய காலத்தில் முடிவுறலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

—ந. நி.

## நாவலர் நற்பணி அறிஞர்களின் பாராட்டு

"ஆறுமுகநாவலரை நாம் எப்போதும் நினைவு கூருவதற்குச் சாதகமான பல ஏதுக்கள் உண்டு. அரை நூற்றாண்டிற்கு முன் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வித்தியாசாலையும் அவற்றுள் ஒன்றாகும்".

கோப்பாய் மத்திய சைவ வித்தியாசாலையில் அண்மையிலே நிர்மாணிக்கப்பட்ட ஒரு கட்டடத்தை டாக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்கள் திறந்து வைத்தபின் நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீ காந்தா தமது பேச்சில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

"நாவலர் பெருமான் சைவம் வளர்ந்தோங்கவும், தமிழ்மொழியும் இலக்கியமும் விருத்தியடையவும் செய்த பணி வீண் போகாதபடி, நாமும் இம்மூன்றையும் பேணிக் காப்பாற்ற வேண்டும்."

### தேசியமயம்

சேவையினின்றும் இளைப்பாறியிருக்கும் வித்தியாதரிசி திரு. ஏ. சரவணமுத்து குறிப்பிட்டதாவது: உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் அனேகம் நாட்டின் பல திறப்பட்ட சுபிட்சத்தைத் துரிதப்படுத்திவரும் வேளையில், அவற்றைஅரசாங்கம் தேசியமயமாக்க எண்ணுவது பிற்போக்கான நடவடிக்கை யென்றே சொல்லவேண்டும். இப்போது அரசாங்க பாடசாலைகளில் அனேகம், தேசாபிமானிகளுக்கு விசனத்தைக் கொடுக்கக்கூடிய விதத்தில் இயங்குகின்றன. அதை முதல் அதிகாரிகள் உணரவேண்டும்.

முன்னைநாள் வித்தியாதிகாரி திரு. எஸ். ஜே. குணசேகரம் தமிழ் இலக்கியத்தின் சிறப்பு சம்பந்தமான அரியதொரு பிரசங்கஞ் செய்தார். முதலியார் அத்தியார் அருணசலம், பண்டிதர் ஏ. கணபதிப்பிள்ளை, திரு. ஏ. வி. இராசரத்தினம் ஆகியோரும் பேசினர். வித்தியாசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் விழா நிறைவேறியது.

## ★ ★ ★ இவ்வாரம் எப்படி? ★ ★ ★

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| கே. | | | |
| | 16உ சிங். சூ. | | புத. |
| | 17உ விரு. வியா. | | சூரி வெ. |
| சனி | வியா. | | செ. ரா. |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(22-8-59 — 28-8-59)

**மேடம்:** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) புதிய கருமங்களில் ஈடுபாடு உண்டாகும். தேகாரோக்கியக் குறைவு இடையிடையே ஏற்படலாம். கண்டனங்களைச் சமாளிக்க வேண்டி நேரிடும். நண்பர்கள் அதிக உதவியாயிருப்பர்.

**இடபம்:** (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) பணச் செலவு அதிகரிக்கும். போட்டியிடுவோரை வெல்லுவது நிச்சயம். பெண்கள் தீமை விளைவிக்க முயல்வர். வாகனங்களினால் சிரமம் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** (மிருகசீரிடம் 3, 4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்) இடைஞ்சல்களிலிருந்து நீங்குவீர். பிரயாண அலைச்சலும், சிநேகிதர்களாற் சிரமங்களும் உண்டாகும். பழைய முதலீடுகள் மூலம் தனலாபம் கிட்டும். தேகாரோக்கியக் குறைவு சிறிது ஏற்படும்.

**கடகம்:** (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்) சத்துருக்களால் விளையும் தீமை நன்மையில் முடியும். இரகசியப் பகைவர் தொல்லை தருவர். செலவு அதிகரித்தாலும் அதனைச் சமாளிக்க முடியும். உத்தியோக மாற்றம் ஏற்பட இடமுண்டு.

**சிங்கம்:** (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) வியாபாரத் துறையில் ஊக்கம் உண்டாகும். அன்னியர் நட்பு விருத்தியுறும். கமத்தொழிலால் பண வருவாய் பெருகும். அரசாங்க சேவையில் மாற்றத்தை எதிர் பார்க்கலாம்.

**கன்னி:** (உத்தரம் 2, 3, 4-ம் பாதம், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்) வார இறுதியில் தேகசுகம் சிறிது குறையும். இனபந்துக்களின் கொண்டாட்டம் இவ்வாரம் மகிழ்ச்சியூட்டும். புத்திரர் உதவியாக இருக்கமாட்டார்.

**துலாம்:** (சித்திரை 3, 4,-ம் பாதம், சுவாதி, விசாகம், 1, 2, 3-ம் பாதம்) அரசகருமங்களில் முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். தவிர்க்க முடியாத வாக்குவாதங்கள் தோன்றும். உம்முடைய கருமங்களில் சில திருத்தங்கள் நிச்சயம். மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்கள் நடைபெறும்.

**விருச்சிகம்:** (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை) பிதாவழி இனத்தவர்கள் தொல்லைதருவர். உம்முடைய சிக்கல்களை நீக்குவதில் பெரியோரின் யோசனைகளைப் பெறுக. செலவு அதிகரிக்கும்.

**தனுசு:** (மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்)பழைய முதலீடுகள் மூலம் அதிகஇலாபமடைவீர். எதிரிகள் அடிபணிவர். குடும்பக்கவலைகள் சிறிது இருந்தாலும் வார இறுதியில் மனம் நிம்மதியடையும். கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும்.

**மகரம்:** (உத்தராடம் 2, 3, 4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்) காத்திராப்பிரகாரமான காரியங்கள் வார இறுதியில் ஏற்படும். நண்பர்களும், உறவினரும் அன்புடன் உதவிபுரிவர். நடந்த கருமங்களையிட்டுக் கவலை கொள்ள வேண்டாம்.

**கும்பம்:** (அவிட்டம் 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதம்) பகைவர் மூலம் சில தொல்லைகள் உண்டாகும். இவ் வார முற்பகுதியில் எதிர்பாராத கருமங்கள் நிறைவேறும். முயன்றுழைப்பதோடு புதுப் பொறுப்புக்களையும் நீர் ஏற்க வேண்டிவரும்.

**மீனம்:** (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி) இவ்வார முற்பகுதியில் ஆரம்பிக்கும் கருமங்கள் விரைவிற் கைகூடும். வாகனங்களினால் கஷ்டங்கள் உண்டாகும். வார இறுதி அவ்வளவு நன்றாய் இல்லை. நம்பிக்கை உற்சாகம் தரும்.


இங்கே வெட்டவும்

**ஈழநாடு**
சிவன்கோவில் மேலை வீதி,
தபாற்பெட்டி எண். 49
யாழ்ப்பாணம் (இலங்கை)

**ஈழநாடு** வார இதழுக்கு என்னை ஒரு சந்தாதரராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அதற்குரிய ஆண்டுச் சந்தா ரூபாய் பத்து (10/-) இதனுடன் மணிஓடர் / செக் மூலம் அனுப்பி வைக்கின்றேன்

..................................
கையொப்பம்.

பெயர்: ..................................

விலாசம்: ..................................

இங்கே வெட்டவும்

விளையாட்டுப் பகுதி

# கொழும்பு மத்திய வெள்ளைக் கோஷ்டிக்கு அமோக வெற்றி

## சென்ற வாரத்தோல்வியுடன் யாழ்ப்பாணத்துக்கு மாவட்டப் போட்டியில் இடமில்லை

### விளையாட்டுப் பார்க்கவந்தவரின் திடீர் மரணம்

இலங்கை உதைபந்தாட்டக் கழகம் நடாத்தும் மாவட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் கொழும்பு மத்திய வெள்ளைக் கோஷ்டியிடம் இரு முறையும் தோல்வியடைந்து விட்டது. கொழும்பில் ஆடியபோது 6-0 கோல்களினலும் யாழ்ப்பாணத்தில் இவ்வாரம் 4-1 கோல்களினலும் ஆட்டத்தை இழந்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு ஆட வந்திருந்தவர்களில் ஒருவரான செலஸ்மனின் சகோதரர் செல்லையா திடீரென மாரடைப்பினல் மத்தியானம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் காலமானர். அதற்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக ஆட்டத் தொடக்கத்தில் இரு கோஷ்டிகளும் இரண்டு நிமிஷ மௌனம் அனுஷ்டித்தனர்.

பண்ணை மைதானத்தில் காற்று வாக்கில் ஆடத் தொடங்கிய யாழ்ப்பாணம் கோஷ்டி பல சந்தர்ப்பங்களை அனுவசியமாக இழந்தது. குறி தவறி கோல் அடிப்பதும் தானே கோல் பெற முயல்வதும் இவ்வீழ்ச்சிக்கு காரணமாயிருந்தன.

கொழும்புக் கோஷ்டி கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தை பயன் படுத்திக் கொண்டனர். அதன் பின்னர் கொழும்பு கோல் காப்பவர் ஹஷீம் டீன் விழுந்து கிடக்க பலர் பிணைந்து குமைத்த ஒரு பந்து கோலுக்குள் நுழைந்தது.

இடைவேளையின் போது கோல்கள் 1-1 ஆக இருந்தன.

இடைவேளையின் பின் முழுக்கமுழுக்க கொழும்புக் கோஷ்டியின் கை ஓங்கியிருந்தது. அவர்கள் பெற்ற இரண்டாவது கோல் யாழ்ப்பாணக் கோல்காப்பவரின் (அலோஷியஸ்) கால்தடக்கியதன் மூலமாகும். அதன்பின் குனூ, கருணபாலா, பெர்ணுந்துஆகிய இருவரும் பந்தை எந்தக் கோணத்திலிருந்தும் கோலை நோக்கிஅடித்த திறமை கண் குளிரக்கூடியதாக அமைந்தது.

தாக்குதல் வரிசையில் யாழ்ப்பாணக் கோஷ்டியின் இடது புறம் பலவீனமாக இருந்ததற்கு புதியவர் ஒருவர் இடம் பெற்றமையைக் காரணமாகக் கூறலாம். குறிப்பிடக்கூடிய திறமையுடன் கோல்காப்பவர் அலோஷியஸைத்தவிர வேறு எவரும் ஆடவில்லை. யாழ்ப்பாணத்தில் இறுதியாக ஆடிய தலைவர் நவரத்தினராசாவின் ஆட்டமும் சோபிக்கவில்லை.

4–1 கோல்களினல் ஆட்டத்தை இழந்த யாழ்ப்பாணம் அரை இறுதிப்போட்டியில் கலந்துகொள்ளமுடியாத நிலைக்கு விழுந்துவிட்டது. இவ்வருடம் அநுராதபுரத்தையும் களுத்துறையையும் தோற்கடித்தது பாராட்டப்படக் கூடியதாகும்.

பிரவேச விகிதத்தைத் திடீரென 50 சதமாகவும் 1 ரூபாயாகவும் உயர்த்தியதனல் பொதுமக்கள் கஷ்டத்துக்காளாயினர். போதிய முன்னறிவித்தலுடனேயே இவற்றை யாழ்ப்பாண விளையாட்டுச்சங்கம் செய்திருக்கவேண்டும்.

### யாழ்ப்பாணம் முற்றவெளியில் வலம்புரி சைக்கிளோட்டம்

இந்தியாவிலும் இலங்கையிலும் பலஇடங்களில் சைக்கிளில் நான்கு நாட்கள் தொடர்ந்து ஓடி பொதுமக்கள் கவனத்தைக் கவர்ந்த வலம்புரி என்பவர் யாழ்ப்பாணம் முற்றவெளியில் சென்ற புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சைக்கிளோட ஆரம்பித்தார். திரளான மக்கள் அவர் ஓட்டத்தைப் பார்த்துரசிக்கச் சென்றனர்.

'சீற்'றைக் கழற்றி வீசிவிட்டு கைபிடி (handle)யில் உட்கார்ந்து கொண்டு மிதித்தபடி பின்புறமாக ஓடுகிருர். அதில் உட்கார்ந்தபடியே குளிப்பது, உடை மாற்றுவது முதலான வேலைகளைச் செய்கிருர். நடனமும் ஆடுகிருர்.

கண்டு களிக்கும் மக்களிடம் உண்டியல் மூலம் பணம் வசூலிக்கப்படுகிறது.

### உலகப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் இலங்கையும் கலந்து கொள்ளும்

இம்மாதம் 27-ஆம் திகதி தொடக்கம் செப்டம்பர் 6-ஆம் திகதி வரை, இத்தாலியிலுள்ள றியூறின் என்னும் நகரில் உலகப் பல்கலைக் கழகங்களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். இலங்கையும் இப்போட்டிகளில் முதன் முறையாகக் கலந்து கொள்ளும். இலங்கையின் ஏகப் பிரதிநிதியாக ரி. டி. எஸ். ஏ. டிஸ்ஸநாயக்கா இப்போட்டிகளில் கலந்து கொள்வார். இவர் குண்டெறிதல், தட்டம் வீசுதல் இவை இரண்டு போட்டி விளையாட்டுகளிலும் பங்கு பற்றுவார். இவ்வுலகப் பல்கலைக்கழகப் போட்டிகள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெற்று வருகின்றது. இம்முறை ஏறத்தாழ 53 நாடுகளிலிருந்து விளையாட்டுப் பிரதிநிதிகள் இப்போட்டிகளுக்கு வருவார்களென்றும், போட்டிகள் உயர்ந்த நிலையை அடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### அகாகான் தங்கக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி

அகாகான் தங்கக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி கிழக்கு பாகிஸ்தானிலுள்ள டக்காவிலே இம்மாத இறுதியில் நடைபெறும். கண்டியைச் சேர்ந்த எம். ரி. ஏ. ஓஸன் என்பவர் இலங்கை உதைபந்தாட்டக் கோஷ்டிக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரது தலைமையில் இலங்கை உதைபந்தாட்டக் கோஷ்டி இம்மாதம் 25-ஆம் திகதி இப்போட்டியில் கலந்து கொள்வதற்காகப் பாகிஸ்தானுக்குச் செல்லும்.

## மட்டக்களப்பு மாவட்டக் கைப்பந்தாட்டப் போட்டி

### மோகன் கோஷ்டியின் வெற்றி

கிழக்கிலங்கைக் கைப்பந்தாட்டக் கழகத்தினர் நடாத்திய மட்டக்களப்பு மாவட்ட கைப்பந்தாட்டத்தின் இறுதிப் போட்டி மட்டக்களப்புப் பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றது.

கல்லடி உப்போடை, மோகன் விளையாட்டுக் கழகக் கைப்பந்தாட்டக் கோஷ்டியும் மட்டக்களப்பு பொலிஸ் கோஷ்டியும் இந்த இறுதியாட்டத்தில் பங்கெடுத்தனர். "மோகன் கோஷ்டி" "பொலிஸ் கோஷ்டியை" 15/6, 15/10, 8/15, 15/10. புள்ளிகளால் தோற்கடித்து "மட்டக்களப்பு மாவட்டச் சுற்றுப் போட்டி வெற்றி வீரர்" ஆகத்தெரிவு செய்யப்பட்டதுடன், "ஜனுப்மாக்கான் மக்கார் வெற்றிக் கேடயத்தை"ப் பெறும் உரிமையையும் பெற்றது. முக்கிய போட்டிகளில் திறமை வாய்ந்த டைனமோஸ், வை. எம். ஏ. சி. கோஷ்டிகளை மோகன் கோஷ்டி தோற்கடித்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த ஆட்டங்களின் போது திரு. பி. சுந்தரலிங்கம் மத்தியஸ்தராக இருந்தார்.

## அல்வாயூர் ஸ்ரீலங்கா வித்தியாசாலை விளையாட்டுப்போட்டி

இப்போட்டி 16-8-59 அன்று பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமானது. தலைமை ஆசிரியர் கவிஞர் மு. செல்லையா அவர்களால பாடசாலைக் கொடி ஏற்றப்பட்டது. மூன்று இல்லத்து மாணவ மாணவிகளும் அணிவகுத்து நடந்து கொடிக் கீதம் பாடி மரியாதை செலுத்தினர். பின்னர் விளையாட்டுப் போட்டி குதூகலமாக நடைபெற்றது. அவற்றில் பெரியதம்பி உபாத்தியாயர் இல்லம் 125 புள்ளிகளையும் தம்பையா உபாத்தியாயர் இல்லம் 112 புள்ளிகளையும் கந்தப்பு உபாத்தியாயர் இல்லம் 110 புள்ளிகளையும் பெற்றுள்ளன. 1-ம் பரிசாகிய வெள்ளிக்கேடயத்தை பெரிய தம்பி இல்லத்தார் சுவீகரித்துக்கொண்டனர். இக்கேடயம் தமது பெற்ருரின் ஞாபகார்த்தமாக டக்டர் சு. வேலும்மயிலும் அவர்களால் உபகரிக்கப்பட்டது. சைவ அறிஞர் திரு. கா. சூரன் அவர்களின் ஞாபகார்த்தமாக மூவர் தேவாரங்கள், நால்வர் திருவுருவப் படங்கள் என்பன மு. மயிலு மேசனல் உபகரிக்கப்பட்டன.

இல்ல அமைப்பு அழகுப் போட்டியில் முதலாம் இடத்தைக் கந்தப்பு இல்லம் (மஞ்சள் இல்லம்) அடைந்து அதற்குரிய பரிசைப் பெற்றது. பெரியதம்பி இல்லமும், தம்பையா இல்லமும் இரண்டாம் இடத்தைப்பெற்றன.


தலைமை வகித்த பருத்தித்துறைச் சுகாதாரப் பகுதிப் பொறுப்பாளர் திரு. வே. தி. ஐயாத்துரை கூறியதாவது:

இதிற் கலந்துகொண்டு சிறப்பான விளையாட்டுக்களையும் மிக உயர்ந்த அம்சங்களுடன் கூடிய இல்லங்களையும் காணும் போது நான் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். இங்கு கொடுக்கப்பட்ட பரிசில்கள் யாவும் இக்கிராமத்தவர்களால் உபகரிக்கப்பட்டதை அறிந்து மகிழ்வதோடு பின் தங்கிய சமூகத்தவர்களாகிய உங்கள் ஒற்றுமையையும் ஆர்வத்தையும்பாராட்டுகின்றேன்.

### அறிவுச்சுடர் விடைகள்

1. பாம்பன்.
2. மும்முடிச் சோழமண்டலம்.
3. முழவு.
4. உருது.
5. இராமகிருஷ்ணர்.


தாய்ப்பாலுக்கு நிகரான
சிறந்த மாற்றுப்பால்—
மில்க்கோஸ்




தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டவே விரும்புவார்கள். உங்களால் அது முடியாது போனல், குழந்தைக்கு தாய்ப்பாலுக்குப் பதிலான சிறந்த மாற்றுப்பாலைக் கண்டு பிடிப்பதற்கு நீங்கள் முனைவீர்கள். சிசு உணவுகளில் சரியான விகிதாசாரப்படி பிசிதம், கரி நீரகைகள், கொழுப்புச் சத்துகள் மட்டும் இருந்தால் போதாது. அதில் தொற்று நோய்களை எதிர்ப்பதற்கும், சோகை மந்தம், எலும்பு உருகுதல் போன்ற வியாதிகள் பீடிக்காது தடுப்பதற்கும், எதிர்ப்பதற்கு முகந்த இரும்புச் சத்துகளும் விட்டமின் சத்துகளும் கொண்டதாகவிருக்க வேண்டும்.

மில்க்கோஸ் பத்திரமான, முழுச்சத்துள்ள சிசு–உணவாகும். இது சுத்தமான முழுப்பாலாடை நிறைந்த பசுப்பாலிலிருந்து தயாரிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு வேண்டிய சத்துக்களை இது பூர்த்தி செய்கிறது.

மில்க்கோஸ், நன்கு பத்திரமாக குழந்தைகளின் மெல்லிய ஜீரண உறுப்புகளுக்கு ஏற்றதாகத் தயாரிக்கப்படுகிறது. மில்க்கோஸ் நவீன ரீதியாகப் பொதியப்பட்டு, உங்களுக்கு பத்திரமாகவும், பரிசுத்தமாகவும் கிடைக்கிறது.

உங்கள் குழந்தைகளை ஆரோக்கிய குழந்தைகளாக வளர்க்க அவர்களுக்கு இன்றே மில்க்கோஸ் ஊட்ட ஆரம்பியுங்கள்.

மில்க்கோஸ்
இன்றியமையாத சிசு–உணவு

ஹார்லிக்ஸ் தயாரிப்பாளரால்
தயாரிக்கப்படுகிறது

HLM 3686

## தூங்கிவிழும் பார்லிமெண்டை தட்டியெழுப்பிய....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல தண்ணீர் மீன்களை வளர்க்கலாம். இது மக்களின் உணவுத் தேவையை ஓரளவுக்காவது பூர்த்தி செய்யும்'' என்று டாக்டர் விக்கிரமசிங்கா பதிலளித்தார்.

இதற்குப்பின் நீதி அமைச்சின் மான்யங்கள் மீது விவாதம் ஆரம்பித்தது.

எதிர்க்கட்சியில், மந்திரிமாருக்கு நேரே இருக்கின்றவர்கள் சமசமாஜக் கட்சிப் பீரங்கிகள். இவர்கள் அழுவார்கள், சிரிப்பார்கள், பயமுறுத்தி முழங்குவார்கள், சீறுவார்கள், சினப்பார்க்ள், ஒன்றும் தெரியாதவர்கள் போல் சிணுங்குவார்கள், வாதிப்பார்கள், வந்தனை செய்வார்கள், இப்படி என்னென்னவோ எல்லாம் செய்தும்—கடைசியில் என்ன? அரசாங்கத்துக்கு பெரும்பான்மை வாக்குகள் இருக்குமளவில் இவர்களுடைய ஜாலவித்தைகள் ஒன்றும் பலிக்காது.

சட்டத்தயாரிப்புப் பகுதியில் (Legal Draftsmen) ஒருவிதமான வேலையும் நடப்பதில்லையென்றும், அங்குள்ளவர்கள் வேண்டுமென்றே சதி செய்கிறார்களென்றும் திரு. லெஸ்ஸி குணவர்த்தன முறையிட்டார். வழக்கமாக, அண்டம் கிடுகிடுக்கப்பேசும் திரு. ரூபேட் குணவர்த்தன, 'விளக்கமறியலில் வைக்கப்படும் குற்றவாளிகள் 1 வருடம் 2 வருடத்துக்குபின் நிரபராதிகளாக விடுதலை பெறுகிறார்கள்- ஆயினும் அவர்கள் மறியல் இருந்துதானே தீருகிறார்கள்—இது என்ன நியாயம், என்று இரகசியமாகசபாநாயகருக்குத் தெரிவித்தபோது எமக்கெல்லாம் ஆச்சரியமாக இருந்தது. ஆனால் அடுத்த நிமிடம் இந்த மாயை மாறியது. "இந்த நாட்டில் பணமும், பாக்கியமும், செல்வாக்கும் உள்ளவர்கள் தப்பித்தவறி விடுகிறார்கள். ஆனால் வெறும் ஏழைகள் தான் வலையில் சிக்குகிறார்கள். ஏனென்றால், இந்த நாட்டின் பிரதம மந்திரியே ஒரு கொலைகாரன். சுமார் 2000 பேரைக் கொன்ற குற்றம்அவருடையது. அப்படிப்பட்டவர் இருக்கும் போது இலங்கையில் என்ன தான் நடக்கக்கூடும்" என்று திரு. ரூபேட் கூறியபோது பிரதமமந்திரி சபையில் இல்லை.

## இந்தியா-சீன உறவு சீரடையுமா?

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

### கேரளம்

எதிர்க் கட்சியினரின் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ற போது கைதாகிய அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். குற்ற தண்டனையை அனுபவித்து வரும் நால்வர்மாத்திரம் விடுதலைசெய்யப்படவில்லை. கேரள விவகாரம் லோகசபையில்சென்ற திங்கட்கிழமையும் புதன்கிழமையும் விவாதிக்கப்பட்டது. கேரள தேசாதிபதியின் அறிக்கையின் சுருக்கமும் சமர்ப்பிக்கப்பட்டது. அடுத்த திங்கட்கிழமை இராஜியசபை கேரளவிவகாரத்தை விவாதிக்கும்.

### புதுச்சேரித் தேர்தல்கள்

புதுச்சேரியில் நிகழ்ந்த பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு அறுதியான பெரும்பான்மை கிடைத்திருக்கிறது. மொத்தம் 39 ஸ்தானங்களில் காங்கிரசுக்கு 21 கிடைத்திருக்கின்றன.

சினிமா உலகம்

## புதுமைப் பெண்

புதுமைப் பெண்ணின் கதையில் ஒரு புதுமை இருக்கத் தான் செய்கிறது. தமிழ்ப் படக் கதைகளில் இந்நாட்களில் நாம் இலகுவாக விளங்கக் கூடிய குழப்பமான சம்பவங்கள், இப்படத்தில் விளங்க முடியாத அளவுக்குச் சென்றிருப்பதே ஒரு புதுமை!

செல்வந்தரான சிவானந்தம் என்பவர் எல்லோரையும் நம்பும் குணம் படைத்தவர். இதனால் வெகு விரைவிலேயே அவர் திக்கற்ற ஏழையாகி விடுகிறார். பின், அவருடைய மனைவி திடீரென மரணமாகி விடுகிறார். மனமுடைந்த சிவானந்தம் தன் இரு மக்களான மாணிக்கத்தையும் முத்துவையும் இரு நண்பர்களிடம் ஒப்புவித்துவிட்டு எங்கோ மறைந்துவிடுகிறார். மாணிக்கத்திற்கு ரஞ்சனி என்ற பெண்ணின் காதலும், பாலு என்பவனின் நட்பும் கிடைக்கின்றன. முத்து, வக்கீல் கனகசபையின் மகளான வித்யாவின் காதலைப் பெறுகின்றான். இக்காதல் ஜோடிகளின் வாழ்க்கைக்குத் தொல்லை தந்த வண்ணமிருப்பவன் தான் வித்யாவின் அண்ணனான மோகன். கதை பல திருப்பங்கள் திரும்பி, சிக்கல்களுக்குள் கட்டுண்டு, திகைத்துத் தடுமாறிக் கடைசியில் ஒருவாறு தெளிவான பாதையில் தலை காட்டும் பொழுது, மறைந்து போன சிவானந்தம் அவர்களும் தம் தலையைக் காட்டுகிறார். அதற்குப் பின் என்ன? கெட்டி மேளம்தான்!

சிவானந்தமாக எஸ். வி. சுப்பையா நடித்துள்ளார். திறமையான இந் நடிகர் தம் பாகத்தை இயன்றளவு நன்றாகவே செய்து முடிக்க எத்தனித்துள்ளார். அவரது பிரயத்தனம் அவ்வளவு வீண் போகவில்லையென்றே சொல்ல வேண்டும்.



மனோகர், பாலையா, ராஜேந்திரன் இம்மூவரும் எதைப்பற்றி இவ்வளவு கடுமையாகச் சிந்திக்கிறார்களோ?

மாணிக்கமாக வரும் மனோகரின் நடிப்பு நிதானமான நடிப்பாகவே புலப்படுகிறது. கவர்ச்சிகரமானதோற்றமுள்ள அவர் சில சமயங்களில் நிதானத்தை அளவுக்கு மிஞ்சியே சோதித்துவிடுகிறார்.

முத்துவாக இலட்சியநடிகர் ராஜேந்திரன் வருகிறார். அவருடைய நடிப்பில் வழக்கமான சிறப்புக்கள் காணப்படுகின்றன. குட்டிப்பிரசங்கங்களுக்கும் குறைவில்லை.

பாலுவாக —மாணிக்கத்தின் நண்பனாக—படத்தின் உயிர் நாடியாக விளங்குகிறார் டி. எஸ். பாலையா. அவருடைய ஹாஸ்ய நடிப்பு நன்றாகவே இருக்கிறது. அத்துடன் கருத்துள்ள வசனமும் ஹாஸ்யத்திற்கு உதவியாக அமைந்துள்ளது. ராஜசுலோசனா அவரை ஒரு இடத்தில் 'பணம் எப்படித் திடீரென்று போச்சு?' என்று கேட்டதற்கு, அவர், 'திடீரென்று போவதுதானே திருட்டு' என்று பதிலளிப்பது இப்படத்தில் அவருடைய நடிப்புக்கு ஓர் உதாரணம்.


ரஞ்சனியாக வரும் ராஜசுலோசனாவின் இனிமையான முகமும், இயற்கையான நடிப்பும் கவர்ச்சிகரமாக அமைந்துள்ளன. வித்யாவாகத்தோன்றும் 'புதுமைப் பெண்' ராஜம் தமது பாகத்தைப் பிழையின்றி நிறைவேற்றியுள்ளார்.

படத்தின் ஒலிப்பதிவு நன்றாக அமையவில்லை. ஒளிப்பதிவு பரவாயில்லை. டைரக்ஷன், சில இடங்களிற் தவிர, மற்றும்படி சோபிக்கவேயில்லை.

பாரதிகண்ட புதுமைப் பெண் இப் படத்தில் பாட்டளவில் தான் தோன்றுகிறாள். ஆனால், புதுமைப்பெண்ணை எதற்குத் தேடுகிறீர்கள்? "பிறரைச் சந்தோஷப்படுத்த நான் இருக்கிறேன்" என்கிறாரே பாலையா. அவரைப் பாருங்கள்! கட்டாயம் உங்களைச் சந்தோஷப்படுத்துவார்!

—மின்மினி

முருகன் (ஜிந்துப்பிட்டியா) 4-வது வாரம்
லிபேர்ட்டி (வதுளை) ஜோதி (திருக்கோணமலை) சென்ரல் (மருதானை)
கடைசி வாரம்!
இத்தியேட்டர்களில் காண்பிக்கப்படுகிறது
பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்
எஸ். எஸ். ராஜேந்திரன், பி. சரோஜாதேவி, சகஸ்ரநாமம் மற்றும் பலர்.
இப்பொழுது நடைபெறுகிறது! ராணி (யாழ்ப்பாணம்)



ராஜசுலோசனா
எம். என். ராஜம்
டி. எஸ். பாலையா
மனோகர்
சி. எஸ். பாண்டியன்
எஸ். எஸ். ராஜேந்திரன்
வி. கே. ராமசாமி
இன்னும் பலர் நடிக்கும்
புதுமைப் பெண்
வியாழன் 27 முதல்
சென்ரல் (மருதானை) ஓடியன் (மவுண்ட் லவினியா) ஜோதி (திருக்கோணமலை) லிபேர்ட்டி (வதுளை)

## லாவொசில் மீண்டும் கலகக்காரர்?

### மாலைதீவில் புதிய அரசாங்கம்

இந்துச்சீனத்திலுள்ள லாவொஸ் நாட்டின் மீது வடவியற்னும் படையெடுததிருப்பதாக லாவொஸ் அரசாங்கம் சென்ற சிலநாட்களாகக் கூறி வருகிறதல்லவா? பிரிட்டனிலுள்ள பத்திரிகைகளுக்குச் செய்திகள் அனுப்பும் நிருபர்கள் பெருமளவில் படையெடுப்போ, இராணுவத் தாக்குதலோ, உள்நாட்டுப் போரோ நிகழ்ந்திருக்கின்றது என்பதற்கு ஆதாரங்கள் இல்லை எனக் கூறியிருக்கின்றனர். ஒரு சிலர் பழைய ஆயுதங்களை உபயோகித்துத் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். சில ஜாதியினர் லாவொசிற்குள் பிரவேசித்திருக்கின்றனர். லாவொஸ் அரசாங்கம் வெளியிடும் அறிக்கைகள் அரசியல் கெடுபிடி யுத்தத்தை வளர்ப்பனவாகவே இருக்கின்றன. லாவொஸ் அரசாங்கம் தமது கட்சியை எடுத்துரைப்பதற்கு ஐக்கியநாடுகள் சபைக்கு ஒரு விசேஷ பிரதிநிதியை அனுப்பப் போகின்றதாம். லாவொசைச் சேர்ந்த விமானங்கள் அத்துமீறி வடவியற்னும் பிரதேசத்தில் பறப்பதாக வடவியற்னும் அரசாங்கம் குற்றஞ்சாட்டியிருக்கின்றது. ஐக்கியநாட்டுத் தாபனம் மேற்பார்வையாளர்களை அனுப்பவேண்டும் என்றும் லாவொஸ் அரசாங்கம் கேட்டிருக்கிறது.

### கியூபாவில் எதிர்ப்புப் புரட்சி

கியூபாவின் பிரதம மந்திரியாகிய டாக்டர் பி. டெல்கஸ்ரோ தமது அரசாங்கத்திற்கு மாறாகப் புரட்சியைத் தூண்டும் நாடு டொமினிக்கன் குடியரசும் (மத்திய அமெரிக்காவில் இருக்கின்றது) சில ஐக்கிய அமெரிக்க உத்தியோகத்தர்களும் எனக் குற்றஞ்சாட்டியிருக்கின்றார். இதற்கு ஆதாரமாக தாம் டொமினிக்காவில் இருந்து அனுப்பப்பட்ட 10 புரட்சிக்காரர்களை ஏற்றிவந்த ஒருவிமானத்தைக் கைப்பற்றியிருப்பதாகப் பிரதமர் கஸ்ரோ கூறியிருக்கின்றார். தென் அமெரிக்க குடியரசாகிய சில்லி நாட்டில் சந்தியாகோ நகரில் நடைபெறும் அமெரிக்க நாடுகள் மாநாட்டிற்கு டாக்டர் கஸ்ரோ போகமுடியாதற்குக் காரணம் கியூபாவில் உருவாகியிருக்கும் நெருக்கடி நிலைமை தான் என்று தெரிகின்றது. டாக்டர் கஸ்ரோ காயமடைந்துள்ளார் என்ற செய்தி மறுக்கப்பட்டிருக்கிறது.

உலக நிலை

### மாலைதீவில் புதிய அரசாங்கம்

மாலைதீவுகளின் பாராளுமன்றத்தின் ஆலோசனைப்படி மாலைதீவு சுல்தான் இப்ராகிம் நசீர் என்பவரை மீண்டும் ஐந்து வருடங்களுக்கு பிரதம மந்திரியாக நியமித்திருக்கிறார். சென்ற வாரம் சிங்கப்பூரிலிருந்து மாலைதீவுகளுக்குக் கொண்டு செல்லப்பட்ட 100 பிரிட்டிஷ் போர்வீரர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை திருப்பி எடுக்கப்பட்டுள்ளனர். கான் தீவில் பிரித்தானியர் அமைக்கும் தளத்தின் எதிர்காலம் குறித்து அடுத்த மாதம் பேச்சுவார்த்தைகள் நடைபெறலாம் எனத் தெரிகிறது.

வெற்றிகரமான **4**-வது வாரம்!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **விஜயா** (மட்டக்களப்பு) **வெலிங்டன் - மனோகரா** (யாழ்ப்பாணம்)

மற்றும் ஏழு திரைகளில்



★ அன்பின் திருவுருவமான தசரதச்சக்கரவர்த்தியின் தந்தைப்பாசம்,

★ கொடிய கைகேயியின் வஞ்சகச் சூது,

★ உத்தம பரதனின் சகோதர வாஞ்சை,


★ மாசற்ற சீதையின் மறுவற்ற பெண்மை,

★ தயாளன் இராமனின் நெறி பிறழா நீதி,

★ பெரும் பக்தன் இராவணனின் பிடிவாதக்குணம்

இத்தனை வேறுபட்ட பாத்திரங்களினதும் மாறுபட்ட உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும்

மகோன்னத தயாரிப்பு



சிவாஜி கணேசன்
என். டி. ராமராவ்
டி. கே. பகவதி
பத்மினி
ஜீ. வரலெக்ஷ்மி
மற்றும் பலர் நடித்தது.

# சம்பூர்ண ராமாயணம்

---

**சிலோன் தியேட்டர்ஸ் தாபனத்தாரின் மகோன்னத திரைச் சித்திரம்**
**இப்பொழுது திரையிடப்படுகிறது!**

**ரீகல்** (கொழும்பு) **எல்பின்ஸ்டன்** (மருதானை) **றொக்ஸி** (வெள்ளவத்தை)

**சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், பத்மினி, ராகினி, எஸ். வரலெட்சுமி**
மற்றும் பலர் திறம்பட
நடித்த

## வீரபாண்டிய
# கட்டபொம்மன்

★ வெள்ளையனை எதிர்த்த வீரபாண்டியனின் கதையைக்கேட்டு வீறுகொண்டு எழுந்தீர்கள் இன்று நேரில் கண்டு பரவசமடையுங்கள்.

★ சுதந்திரத்திற்காக உயிர் கொடுத்த சுத்த வீரனின் கதை.

★ நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்டு வஞ்சகர்களை எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மன் வெள்ளித்திரையில் காட்சி தருகின்றான்.

**28-ந் திகதி முதல்**
**திரையிடப்படும்**

யாழ்ப்பாணம் **வின்ஸரில்**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ந் திகதி வெளியிடப்பெற்றது.